राम भक्ति साम्रज्यम्



ராம பக்தி ஸாம்ராஜ்யம்

பொருளடக்கம்

1) ராம பக்தி சாம்ராஜ்யம் சால ஸ்வானுபவ வேத்யமே 2
2) சத்ரம் தாரயத க்ஷிப்ரம் ஆர்ய பாதௌ இமௌ மதௌ 9
3) சூராணாம் சுத்த பாவானாம் பவதாம் ஆர்ஜவம் பலம் 17
4) இன்று போய் நாளை வா 25
5) மீளாஅடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே 33
6) தந்தது உந்தன்னை கொண்டது என்தன்னை 42
7) மன்னுபுகழ் கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே 53
8) மகாபெரியவா மந்தஸ்மிதம் என் மனத்தில் உதிக்கட்டும் 63
9) கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் 73
10) சீதாதேவி ராமபிரானிடம் இப்படி பேசலாமா? 79

<u>ராம பக்தி சாம்ராஜ்யம் சால ஸ்வானுபவ வேத்யமே</u>



இன்னிக்கு வால்மீகி இராமாயண ஸ்லோகம். பாலகாண்டத்துல பத்தொன்பதாவது ஸர்கத்துல விஸ்வாமித்ரர், தசரதர்கிட்ட, சொல்றார்.

अहं वेद्मि महात्मानं रामं सत्यपराक्रमम् ।।

वसिष्ठोऽपि महातेजा ये चेमे तपसि स्थिता:।

அஹம் வேத்3மி மஹாத்1மானம் ராமம் சத்1யப்பாக்1ரமம் |

வஸிஷ்டோ2ऽபி1 மஹாதே1ஜா: யே சே1மே த1ப1ஸி ஸ்தி2தா1: ||

அப்படீன்னு ஒரு ஸ்லோகம். இந்த ஸ்லோகத்துக்கு, context என்னன்னா, தசரதருடைய சபைக்கு, விஸ்வாமித்ரர், வருகிறார். வாசல்ல காவல்காரர்கள் கிட்ட, "கௌசிக வம்சத்தோட, விஸ்வாமித்ரர் வந்துருக்கேன்னு, சொல்லு", அப்டீன்ன உடனே, அந்த காவல்காரா எல்லாம் அவருடைய தேஜஸை பார்த்து, நடுங்கி, ஓடிப் போய், தசரதர் கிட்ட சொல்றா. தசரதர், உடனே, வஸிஷ்டரோட, ஜல பாத்திரங்களை எல்லாம் எடுத்துண்டு வந்து, விச்வாமித்ரரை வரவேற்று, அங்கேயே அமர்த்தி, அவருக்கு பூஜை பண்ணி, அர்க்கியம் பாத்யம் ஆசமநீயம், எல்லாம் கொடுத்து, சபைக்கு வரவழைச்சு, சபையில அவரை ரொம்ப கௌரவமான ஒரு ஆசனத்துல அமர்த்தி, ரொம்ப அழகான வார்த்தைகளை தசரதர் பேசறார். "ஒரு குழந்தை இல்லாதவனுக்கு குழந்தை பொறந்தா மாதிரியும், மழை இல்லாத ஊரில மழை பெய்த மாதிரியும், ஒரு ரொம்ப ஏழைக்கு பணம் கிடைச்ச மாதிரியும், எனக்கு, உங்களோட தரிசனத்துனால, அவ்ளோ சந்தோஷம் ஏற்படறது. புண்ய க்ஷேத்ரங்களுக்கு எல்லாம் போயிட்டு வந்தா எவ்வளவு திருப்தி இருக்குமோ, அவ்வளவு திருப்தி. நீங்களே என்னை தேடி வந்திருக்கேள். அப்பேற்பட்ட பாக்யத்தை நான் இன்னிக்கு அடைஞ்சேன். நான் ராஜாவா இருக்கறதே, உங்களை போன்ற மஹான்களுக்கு ஏதாவது service பண்றதுக்காக தான். நீங்க என்ன வேணும்னாலும் கேளுங்கோ. நான் பண்றேன்." அப்படீன்னு சொல்றார். "நீங்கள் ராஜாவ இருந்து, அப்புறம் தபஸ் பண்ணி பிரம்ம ரிஷி ஆனதை நான் தெரிஞ்சுண்டு இருக்கேன். உங்களுடைய, பெருமை எனக்கு தெரியும்", அப்படீன்னு சொல்றார். "இதி ஹ்ருதய ஸுகம் ஸ்ருதி ஸுகம் வாக்யம்" - காதுக்கும் இனிமையான, மனதுக்கும் இனிமையான இந்த வார்த்தைகளை கேட்டு விஸ்வாமித்ரர் சந்தோஷப் பட்டு "நீ வஸிஷ்டருடைய சிஷ்யனா இருக்கறதுனால இவ்வளோ அழகான வார்த்தைகளை பேசினாய். நான் ஒரு கார்யமாகத் தான் வந்திருக்கேன். நான் ஸித்தாஸ்ரமம் என்கிற ஒரு இடத்துல ஒரு யாகத்தை பூர்த்தி பண்ணி, ஸித்தி அடையணும்னு முயற்சி பண்றேன். ஆனா, மாரீசன்-சுபாஹு என்கிற இரண்டு ராக்ஷதர்கள் வந்து அதை தடுத்துண்டே இருக்கா. நீ உன்னுடைய மூத்த பிள்ளை ராமனை என்னோட அனுப்பு. நான் அவனுக்கு அஸ்த்ரங்கள் எல்லாம் உபதேசம் பண்ணி அவன் மூலமா நான் என்னோட யாகத்தை காப்பாத்திக்கறேன்" அப்படீன்னு சொல்றார்.

இந்த வார்த்தைகளை கேட்ட உடனே தசரதர் ரொம்ப பயந்து போயிடறார். அப்புறம், வஸிஷ்டர் சமாதானம் பண்ணி அப்புறம் ராமரை விஸ்வாமித்ரர் கூட அனுப்பறார். அது அப்புறம் கதை. இந்த இடத்துல அந்த ஸ்லோகம் வரது

அஹம் வேத்மி மஹாத்மானம் ராமம் சத்யப்பாக்ரமம் |

வசிஷ்டோऽபி மஹாதேஜா: யே சேமே தபஸி ஸ்திதா: ||

"நான் இந்த ராமனை, உள்ளபடி யாரென்று தெரிந்து கொண்டு இருக்கிறேன். வசிஷ்டர் போன்ற தபஸ் பண்ணின ஞானிகளுக்கு தான் அவன் யாரென்று தெரியும். அதனால நீ அவனை உன்னோட பிள்ளை-னு நினைச்சு பாசத்துனால தடுமாறாதே", அப்படீன்னு சொல்றார். அதாவது, "ராமர் சாக்ஷாத் விஷ்ணு பகவான் தான். பூமியில ராமராக அவதாரம் பண்ணியிருக்கார்"ங்கிற ரஹஸ்யம், தபஸ்விகளுக்கு தான் தெரியும். எல்லாருக்கும் தெரியாது அப்படீங்கிறதை விஸ்வாமித்ரர் அப்படிசொல்றார்.

இன்னிக்கு இந்த ஸ்லோகத்தை, வெச்சுண்டு, நான் பார்த்து, மஹான்கள், எப்படி, ராமரை அனுபவிச்சு இருக்கா அப்படின்னு சொல்றேன்.

மஹாபெரியவா ஒவ்வொரு வருஷமும் ராம நவமியை விசேஷமா கொண்டாடி இருக்கா. அவருடைய(பூர்வாச்ரம) சொந்த தங்கையுடைய பிள்ளை சந்திரமௌலி மாமா. நான் அவரை பார்த்து இருக்கேன். அவர் கிட்ட மஹாபெரியவா ஒரு நாள் வால்மீகி ராமாயணம் புஸ்தகத்தை குடுத்து "பாராயணம் பண்ணு. இங்க உட்கார்ந்து பண்ணிண்டே இரு. நான் ஸ்நானம் பண்ணிட்டு வரேன். ராம ஜனனம் கட்டத்தின் போது என்னைக் கூப்பிடு" ன்னு சொன்னார். அந்த ராம ஜனன கட்டத்தின் போது வந்து உட்கார்ந்துண்டு முழுக்க கேட்டுட்டு, "நீ தினமும் ஒரு ஸர்க்கமாவது படிச்சுண்டு வா", அப்படீங்கறார். சந்திரமௌலி மாமா தொண்ணூறு வயசுல, "நான் ஒரு ஸர்க்கமாவது படிக்கறேன். மஹாபெரியவா நேர இருக்கும்போது கூட படிச்சிருக்கேன். ஒரு ஸர்க்கமாவது படிச்சிருக்கேன்." அப்படீன்னு சொல்றார். அவர், ராம அனுக்ரஹத்தில் க்ஷேமமாக இருந்தார். அப்படி, மஹா பெரியவா, தனக்கு நெருங்கின ஒருத்தருக்கு இந்த இராமாயணத்தை உபதேசமா எடுத்து வெச்சு நித்யம் அவரை பாராயணம் பண்ண வெச்சிருக்கார்.

மஹாபெரியவா ஒரு வாட்டி பேசும்போது சொல்றா, “நான் ராமருடைய காலத்துல பொறக்கல. ஏன்னா ராமர் ரிஷிகளை தேடித் தேடி போய் நமஸ்காரம் பண்றார். நான் ராமர் காலத்துல பொறந்துருந்தேன்னா, ஸந்யாசியா வேற இருக்கேன், அவர் வந்து என்னை நமஸ்காரம் பண்ணியிருப்பார். இப்போ நான் ராமரை நமஸ்காரம் பண்ணிப் பண்ணி சந்தோஷப் படறேன்”, அப்படீன்னு சொல்றா பெரியவா.

அதே மாதிரி, “நம்முடைய தேசத்துல ஒரு நாடகம் போட்டாலும் சரி ஒரு கவிதையிலும் சரி, literatureலயும் சரி, ஒரு கதகளியோ, ஒரு சங்கீத கச்சேரியோ, எல்லாத்துலயும் ராமனையே பேசறாளே அப்படீன்னு தோன்றது, ஆனா பாயஸம் யாராத்துல பண்ணினாலும் அதுல சக்கரை தானே போட்டாகணும். அதே மாதிரி இனிமையான வஸ்து ராமன் தான். அவனைத் தான் பேசணும்.” அப்படீங்கறா. இப்படி ராமனை பெரியவா அனுபவிச்சிருக்கா.

சிவன் சார் ஏணிப்படிகளில் மாந்தர்கள்லயும் பகவான் ராமராக அவதாரம் பண்ணி நம்முடைய வாழ்கையில நாம எப்படி நடந்துக்கணும் என்று வாழ்ந்து காண்பிக்கிறார். அதாவது - அப்பாக்கு பிள்ளை எப்படி நடக்கணும், அண்ணாக்கு தம்பி எப்படி நடக்கணும், தம்பிகிட்ட அண்ணா எப்படி நடந்துக்கணும், கணவன் மனைவி நண்பர்களுக்குள்ள ஒருத்தரை ஒருத்தர் எப்படி நடத்தணும், இதெல்லாம் வாழ்ந்து காண்பிக்கறதுக்காக பகவான் பூமியில அவதாரம் பண்ணார். அவருடைய அந்த சரித்திரத்தை நாம அடிக்கடி ஸ்ரவணம் பண்ண வேண்டும். இராமாயணத்தை அடிக்கடி ஸ்ரவணம் பண்ணனும் அப்படீன்னு சார் எழுதி இருக்கார்.

(நமது ஏராளமான தெய்வீக புராணங்களை நாம் அறிந்து வைத்திருந்தாலும் கூட, ராமாயணத்தை மட்டும் இடைவிடாமல் திரும்பத் திரும்ப ச்ரவணம் செய்து வரும் வழக்கத்தை ஏற்று வருகிறோம். காரணம், பல விதமான துறைகளில் வாழ்க்கையை ஏற்று வரும் உலகப் பற்றுள்ள நாம் உத்தமர்களாக இயங்க வேண்டிய முறைகளை சித்தரித்திருப்பதே ராமாயணமாகும். அதாவது இந்த ஓர் அவதாரத்தில்தான் பகவான் ஓர் ஸாதாரண மனிதராகவும் ஆனாலும் ஓர் சிறந்த விவேகியின் தன்மைகளைக் கொண்ட ராஜகுமாரனாகவும் பிறந்தார். தெய்வீக சக்திகளைக் கொண்ட அவதார மகானாகவோ, அமானுஷ்யமான துறவியாகவோ அவர் இயங்கவில்லை. சிற்சில ஸமயங்களில் தனது உண்மையான ஸ்வயரூபத்தை காட்டி வந்த கிருஷ்ணனை போலவும்

இயங்கவில்லை. எனவே அவர் சாதாரண மானிடர்களைப் போல ஸுகதுக்கங்களுக்கும் இலக்காகி வந்தார். ஆகவே இலங்கேச்வரனிடம் யுத்தம் புரிய வேண்டியதின் பொருட்டு ஸுக்ரீவனுடனுடைய தயவை நாட நேரிட்டுவிட்டது. நிற்க, வாலி ஸம்ஹாரத்தை பற்றிய சர்ச்சையில் தற்காலத்திய சிறிய மனிதர்கள் இறங்கியிருக்கின்றனர். இது தேவையில்லை. தவறான நடவடிக்கையைக் கொண்ட ஒருவனை தண்டிக்க அரசனுக்கு உரிமை உண்டு. வாலியை நேரிடையாக ஸம்ஹரிப்பதில் ஓர் இக்கட்டு இருந்தாலும், ராமர் அவதார மகானாகவோ அல்லது பகவானுடைய ப்ரத்யேக அவதாரமாகவோ தோன்றியிருந்தால் அந்த இக்கட்டு ராமபிரானிடத்தில் செல்லாது. ஆனால் ராமர் ஓர் மானிட அரசராக இருந்ததினாலும் தகாதவர்களை தண்டிக்க ராஜதந்திரம் அல்லது உபாயத்தை நாட அரசர்களுக்கு உரிமை அளிக்கப் பட்டிருப்பதாலும், ராமர் மறைந்திருந்து வாலியை ஸம்ஹரித்ததில் நியாயத்தை கொள்ளாமல் இருக்கக் கூடாது. (ஏணிப் படிகளில் மாந்தர்கள் – ஸ்ரீ சிவன் சார்)

அப்படி பகவானாக நினைச்சு ராமர்கிட்ட பக்தி பண்ணனும். இராமாயணத்தை அடிக்கடி வாசிக்கணும். நம்முடைய மனசு பண்படும். அப்படீன்னு சிவன் சார் எழுதியிருக்கார்.

கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் வால்மீகி ராமாயணத்தையே வாழ்ந்தார். வால்மீகி ராமாயணத்துக்காகவே வாழ்ந்தார்.

அப்படி தபஸ் பண்ண மஹான்கள் தான் ராமரை பகவானாக உணர்ந்து வழிபட்டு க்ஷேமம் அடைஞ்சா. எதுக்கு இதை சொல்றேன்னா இப்பல்லாம் வர ராமாயண புஸ்தகங்களில் ராமரை மனுஷனாதான் சொல்லியிருக்கா. ஏதோ பால காண்டத்துல ஒரு ஸர்க்கம் சேர்த்து விஷ்ணு அவதாரம் பண்ணார்னு சொல்லி, யுத்த காண்டத்துல ஒரு ஸர்க்கம் சேர்த்து ராமரை கடவுள் ஆக்கிட்டா. பாலகாண்டமே இடைச்செருகல்; அயோத்தியா காண்டத்துல இருந்துதான் கதை ஆரம்பிக்கறது. இப்படியெல்லாம் ஆராய்ச்சி புத்தியோட இராமாயணத்தை பாக்கறா. ஸ்வாமிகள் அப்படி பண்ணக் கூடாதுன்னு என்னை தடுத்தார். அதனால நான் பிழைச்சேன். அந்த மாதிரி பாக்கறதுனால லாபமே இல்லை. இப்ப ஒரு மாசமா நான் ராமாயணம் சொல்றேன். எவ்வளவோ பேர் கேட்டு ரொம்ப ஆனந்தபட்டு, “இதுலேயிருந்து நிறைய தெரிஞ்சுக்கறோம்”, அப்படீன்னு என் கிட்ட சொல்றா. இது பக்தியோட, ராமாயணத்தை approach பண்ணதுனால இவ்வளோ லாபம் நமக்கு. என் வாழ்க்கை முழுக்க எனக்கு வழிகாட்டியாக ராமாயணம் இருக்கு. அப்படி

இல்லாம ஆராய்ச்சி பண்ணி ராமாயணம் 3000BCயில் தானே எழுதினது?! யுகக் கணக்கெல்லாம் ஆகலை அப்படீன்னு சொல்லி என்ன பிரயோஜனம்? அதைப் தெரிஞ்சுண்டு என்ன பிரயோஜனம்? ராமகிருஷ்ண பரமஹம்சர், சொல்றார், “ஒரு தோட்டத்துக்குப் போனா எவ்வளோ மரங்கள் அதுல எவ்வளோ கிளைகள் என்ற ஆராய்ச்சி உனக்கு என்னத்துக்கு? பழத்தை எடுத்தியா சாப்பிட்டியான்னு இருந்தா தானே சந்தோஷம். இந்த பூமியில, கொஞ்ச நாள் நாம இருக்கப் போறோம். இதுல எதுக்கு ஆராய்ச்சி பண்றே? பகவானை அனுபவிக்கறதுக்கு வந்திருக்கே. அனுபவிச்சுட்டுப் போ”, அப்படீன்னு சொல்றார்.

அப்படி ராமாயணத்தை நாம பக்தியோட படிச்சோம்னா ரொம்ப நிறைய நல்லது தெரிஞ்சுக்கலாம். நமக்கு ராம அனுக்ரஹம் கிடைக்கும். இராவணன் ராமரை ரொம்ப சாதாரணமா எடை போட்டான். சீதாதேவியை தூக்கிண்டு வந்து சிறை வெச்சுட்டு ஒரு எட்டு பேரை கூப்பிட்டு, “ஜனஸ்தானத்துல யாரோ, ராமன்னு, ஒருத்தன் வந்திருக்கான். அவன் எனக்கு எதிரி ஆயிட்டான். அவனை போயி நீங்க வதம் பண்ணிடுங்கோ”, அப்படீன்னு அனுப்பறான். அவ்வளோ lightஆ எடுத்துக்கறான்.

அப்புறம் ஹனுமார் வந்துட்டு போன பின்ன கொஞ்சம் பயப்படறான். ராமரே பாலம் கட்டி வந்த பின்ன என்னடான்னு கவலைப் பட்டு யுத்தத்துக்கு ஏற்பாடு எல்லாம் பண்றான். அப்பக் கூட அவனுக்கு நல்லது சொல்றவா எல்லாரையும் திட்டறான். விபீஷணனை விரட்டி அனுப்பிச்சுடறான். மால்யவான்-ன்னு ஒரு மாமா தாத்தா. அவன்கிட்ட “வந்திருப்பது பெரிய எதிரி. நீ பணிஞ்சு போ” என்றபோது, “இந்த ராவணனை வெட்டி போட்டாலும், இன்னொருத்தர் கிட்ட தலை வணங்க மாட்டான்”, அப்படீன்னு கர்வமா பேசறான். அப்புறம் அவனோட தம்பி கும்பகர்ணன் வதமாயிடறான். அவனுடைய சேனாதிபதி பிரஹஸ்தன் வதமாயிடறான். அவனுடைய பிள்ளைகள் எல்லாம் வதமாகறா. இதெல்லாம் பார்க்கும் போது தான், “ஆஹா! வந்திருக்கறது சாக்ஷாத் நாராயணன்தான். விஷ்ணு பகவானே வந்திருக்கார்னு நான் நினைக்கிறேன்”, அப்படீன்னு சொல்றான். அப்புறம் இந்திரஜித் வதமாயிடறான். அப்புறம் இவனும் உயிரை விடறான். ஏதோ க்ஷத்திரிய தர்மத்தை கடைபிடிச்சு ‘யுத்தம் பண்ணா அதுல கடைசி வரைக்கும் இருந்து உயிரை விடணும்’னு விட்டான்.

அதனால ராமர் “அவனுக்கு நீ ஸம்ஸ்காரம் பண்ணு” என்று விபீஷணன் கிட்ட சொல்றார்.

அப்படி ராமரை எளிமையா எடை போட்டதுனால அவனுக்கு அழிவே ஏற்பட்டது. நாம ராமர் கிட்ட பக்தி பண்ணுவோம். ஆராய்ச்சி புத்தியோட அணுகாமல் ராமாயணத்தை பக்தியோட அணுகுவோம். ஸ்ரீ ராம நவமி வர்றது. பத்ரம், புஷ்பம், பலம், தோயம் அப்படீன்னு ஜலம், ரெண்டு புஷ்பம், ரெண்டு துளசி, பழங்கள் தான் பகவான் கேட்கறார். ஒரு நீர் மோர், பானகம் - அதை நைவேத்யம் பண்ணி இந்த பூஜாவிதானத்துல இருக்கற ராமரோட அஷ்டோத்திரத்தை சொல்லி ஒரு கற்பூரம் காண்பிச்சு ஒரு நமஸ்காரம் பண்ணா ராமர் அனுக்ரஹம் பண்ண போறார். நமக்கு அந்த பக்தி வேணும். அவ்வளோதான். எல்லாரும் ஸ்ரீ ராம நவமியை நன்னா கொண்டாடுவோம்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

<u>சத்ரம் தாரயத க்ஷிப்ரம் ஆர்ய பாதௌ இமௌ மதௌ</u>



இன்றைய வால்மீகி ராமாயண ஸ்லோகம், அயோத்யா காண்டத்தில் நூற்றுப்பதினைந்தாவது ஸர்க்கம்(பாதுகா பட்டாபிஷேகம்). அதிலிருந்து ஒரு ஸ்லோகம்

छत्रं धारयत क्षिप्रमार्यपादाविमौ मतौ ।

आभ्यां राज्ये स्थितो धर्मः पादुकाभ्यां गुरोर्मम।।

சத்ரம் தாரயத ஷிப்ரம் ஆர்யா பாதௌ இமௌ மதௌ |

ஆப்யாம் ராஜ்யே ஸ்திதௌ தர்ம: பாதுகாப்யாம் குரோர் மம ||

என்று கூறி பரதன் ராம பாதுகையை சிம்மாசனத்தில வைத்து பட்டாபிஷேகம் செய்து, "சத்ரம் தாரயத க்ஷிப்ரம்" - சீக்ரமா குடை பிடிங்கோ, "ஆர்ய பாதௌ இமமௌ மதௌ" இது என்னுடைய, அண்ணாவினுடய பாதங்கள் என்று சொல்கிறான். "என் அண்ணாவினுடய பாதுகைகள்" என்று சொல்லாமல் "அண்ணாவின் பாதங்கள்" என்று சொல்கிறான். அந்த மாதிரி பாதுகைகளை வைத்துப் பூஜை செய்தான். மஹாபெரியவாளின் பாதுகையை ஸ்வாமிகள்

வைத்துப் பூஜை செய்தார். மஹாபெரியவாளே அங்கு இருக்கிற மாதிரி நினைத்து ஒவ்வொன்றும் செய்வார். அந்த மாதிரி ராமரே அங்கு இருக்கறதாக ந்னைத்துக் கொண்டு தான் பரதன், "ராமருக்கு குடை பிடிங்கோ, ராமருக்கு சாமரம் வீசுங்கோ, இந்த தேசத்தில் என்னுடைய அண்ணாவினுடைய இந்த பாதுகை தர்மத்தை நிலை நாட்ட போகிறது" என்று சொல்கிறான்.

இந்த ஒரு மாதமாக ராமாயணத்தைப் பற்றி ஸ்மரிக்கும்போது பரதனைப் பற்றி அதிகமாக நினைக்கவே இல்லயே; இன்று ராம நவமியாக இருக்கிறது; பரத பக்தியை நினைப்போம்; அந்தப் பாதுகையின் பெருமையை நினைப்போம் என்று தோன்றியது. இந்தப் பாதுகைகளுக்கு விசேஷம் அதிகம். நமக்கு அவசியமாக ஒரு ஆயிரம் ரூபாய் வேண்டியிருக்கிறதென்றால் ஒரு இரண்டாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நகையைக் கொண்டு போய் அடகு கடையில் வைத்தால் அவன் ஆயிரம் ரூபாய் கொடுப்பான். அடகுக் கடையில் எந்தப் பொருளை அடகு வைக்கிறோமோ அதற்கு value ஜாஸ்தி. எது நமக்கு கிடைக்கிறதோ அதுக்கு value கம்மி. அந்த மாதிரி ராமரிடம் பரதன் வந்து சரணாகதி அடைந்து விடுகிறான். ராமரிடம் "நீ திரும்ப வரணும், அயோத்தில வந்து நீ தான் ராஜாவாக இருக்கணும்", என்று சொல்றான். ஆனால் ராமர் இராவணனை வதம் செய்யும் அவதார கார்யம் இருப்பதனால் தன்னை காட்டிலும் மதிப்பு மிகுந்த தன்னுடைய பாதுகைகளை பதினாலு வருஷங்களுக்கு பரதனிடம் அடகு வைத்து விட்டு தன்னை மீட்டுக் கொண்டு அந்த அவதார கார்யத்தை முடிப்பதற்காகப் போனார்.

ராமர் தன்னைக் காட்டிலும் உயர்வான பாதுகைகளை பரதனிடம் கொடுத்தார். பரதனுக்கு ராமரிடம் என்ன மனப்பான்மை என்பதற்கு அயோத்தியா காண்டத்தில் எண்பத்திரெண்டாவது ஸர்க்கம் படிக்க வேண்டும். அந்த ஸர்க்கத்தை கண் ஜலம் விடாம படித்து முடிக்கவே முடியாது. பரதன் கேகய தேசத்திலிருந்து திரும்பி வருகிறான். கைகேயி "உனக்காக ராஜ்யம் வாங்கி வெச்சிருக்கேன்." என்று சொன்ன உடனே, "அண்ணா எங்கே?" என்று கேட்கிறான். "நான் வரம் கேட்டேன். அவா எல்லாம் காட்டுக்கு போய் இருக்கா" என்ற உடனே அவனுக்கு கடும் கோபம் வருகிறது. "என்னம்மா இப்படி பண்ணின?" என்று கேட்கிறான். கோபம் வந்தாலும் அத்துமீறிப் பேசவில்லை. என்ன தான் இருந்தாலும் ராமனின் தம்பியாச்சே. அதனால் "என்னம்மா இப்படி பண்ண? என்னம்மா இப்படி பண்ண? ஒரு பிள்ளையை பெற்ற

கௌசல்யையோட கஷ்டத்தைப் பத்திகூட நீ நினைக்கலையே, இவ்வளோ கொடுமையான ஒரு மனஸா இருக்கே உனக்கு. நீ உங்க கணவர் போன நல்லுலகத்துக்கு நீ போக மாட்ட. நீ நரகத்து போவ" என்று சொல்கிறானே தவிர பாபி, சண்டாளி என்றெலாம் சொல்லவில்லை. இந்த கதை சொல்கிறவர்கள் அவனுக்கு மேல் இவர்களாகவே சேர்ந்து திட்டுகிறார்கள் என்று ஸ்வாமிகள் சொல்வார். அவன் வருத்தப்படறான், "எவ்வளோ உயர்ந்த குலம் இது, எவ்வளோ கௌரவத்தோட தசரதர் ஆண்டார், இப்படி நீ பண்ணிட்டியே, இதெல்லாம்கூட யோசிக்கலயா நீ? எதையுமே யோசிக்கலயா? இவ்ளோ புத்தி கெட்டு போச்சா? எங்கயாவது நான் ராமருடைய ராஜ்யத்தை எடுத்துப்பேனா" என்று சொல்கிறான். "பிறந்ததிலிருந்து நான் ராமனுக்கு அடிமை. நீ இந்த மாதிரி பண்ணினதுனால ராமரை கூட்டிக் கொண்டு வந்து பட்டாபிஷேகம் பண்ணி வைக்க போறேன். உன் கண் முன் அதுதான் நடக்கப் போறது" என்று சொல்றான்.

அப்புறம் கௌசல்யை சந்தேக படுகிறாள். "ஓ! பரதன் வந்துருக்கான் போலிருக்கு. ராஜ்யத்தை எடுத்துக்கறதுக்கு வந்துட்டான்" என்று சொல்கிறாள். அப்போது கௌசல்யா தேவியைப் போய் பரதன் பார்க்கிறான். அவள் ஏதோ ஒரு வார்த்தை சொல்ல, "என்னைப் போய் நீங்க ஸந்தேஹப் படலாமா? எவரோட அனுமதியின் பேரில் ராமர் காட்டுக்கு போனாரோ, அவர் இந்த பாபத்தையெல்லாம் பண்ணினவராக ஆகட்டும். இந்தக் கஷ்டத்தையெல்லாம் அநுபவிக்கட்டும்" என்று ஒரு நூறு சபதம் பண்றான். "யார் அனுமதியின் பேரில் ராமன் காட்டுக்கு போனானோ அவனுக்கு மனைவி இருக்கும்போது வேறு இடத்தில் மனதை வைத்த பாபம் வரட்டும். அவனுக்குப் பசுமாட்டை காலால் உதைத்த பாபம் வரட்டும்", என்று பெரிய list. எந்தெந்த பாபங்களை நாம் தவிர்க்கணும் என்பதற்காக ஒரு list. "அவன் ப்ராஹ்மணர்களுக்கு தானம் பண்ணுவதை தடுக்கட்டும்", என்று கூறுகிறான். அதாவது கஷ்டத்தைத் தான் சொல்கிறான். பாபத்தைச் சொல்கிறான்; பாபம் செய்தால் துக்கம் தானாகவே பின்னாடி வரும் என்று த்வனி.

உடனே கௌசல்யை "வேண்டாம்பா வேண்டாம், நீயும் லக்ஷ்மணனை மாதிரி ராம பக்தியோட இருக்கேங்கிறத புரிஞ்சிண்டேன். ஏதோ தெரியாம பேசிட்டேன். இப்படியெல்லாம் நீ என் மனஸை வருத்தப்படுத்தாதே" என்று

சொல்கிறாள். அப்புறம் மந்திரிகள் வந்து பார்க்கிறார்கள். வஸிஷ்டர் வந்து தசரதரின் அந்திம காரியங்கள் செய்ய வேண்டியது இருக்கின்றன என்று சொல்ல, பரதன் அவற்றைச் செய்து முடிக்கிறான். ரொம்ப சோகமான கட்டங்கள். அவன், “இந்த மாதிரி ஆயிடுத்தே. ராமருக்கு பட்டாபிஷேகமோ, இல்லை ராஜா யாகம் பண்ணப் போறார் கூட பிள்ளைகள் இருக்கணும்னு கூட்டிண்டு வந்தான்னு நெனச்சேன், இந்த மாதிரி அப்பாவோட அந்திமகார்யங்கள் பண்ண வேண்டியதாக ஆயிடுத்தே” என்று வருத்தப்படுகிறான்.

பதினைந்து நாள் காரியங்கள் எல்லாம் முடிகின்றன. பிறகு ஒரு நாள் வஸிஷ்டர், தசரதர் இருந்தால் சபை எப்படி இருக்குமோ அந்த மாதிரி அலங்காரம் செய்து ரொம்ப கௌரவமாக பரதனைச் சபைக்கு வரவைக்கிறார். அதாவது, ‘மனிதர்கள் சாதாரணமாக கையில் கிடைத்த பணத்தை வேண்டாம்னு சொல்லுவார்களா? சொத்தோ, பதவியோ கையில் கிடைத்ததென்றால் வேணாம் என்று சொல்லுவார்களா’, என்ற எண்ணத்தில் வஸிஷ்டர் அவனை கூப்பிட்டு சபையில் வைத்து “ஹே பரதா! ராமன் அப்பா பேச்சை கேட்டு காட்டுக்கு போய்ட்டான். அவன் இனிமே வரமாட்டான். எதோ உங்கம்மா கேட்டா; உங்கப்பா இந்த ராஜ்யத்தை உனக்கு கொடுத்தார். எங்களுக்கு ராஜா வேணும். அதனால, நீ இதை எடுத்தாண்டா தப்பில்ல. இந்த ராஜ்யத்தை ஏத்துக்கோ. எங்களுக்கு தயவு பண்ணு” என்று சொல்கிறார்.

பரதனுக்கு வந்ததே கோபம். அவர் வஸிஷ்டர், முனிவர், குரு என்றெல்லாம் பார்க்காமல் அவரை கண்டிக்கறான். “எங்களுக்கு தர்மத்தை சொல்ல வேண்டிய இடத்துல நீங்க இருக்கேள். என்னைப் பாத்து இந்த மாதிரி பேசலாமா?” எங்கிறான். அவன் சொல்கிறான் “நான் தசரதருக்கு பிள்ளை. தசரதர் ராமனைப் பிரிந்து ஆறே நாட்களுள் உயிரை விட்டார். அப்பேறப்பட்ட ராம பக்தி எங்களுக்கெல்லாம். நான் எங்கேயாவது ராஜ்யத்தை எடுத்துப்பேனா?” என்று சொல்றான். “ராஜ்யம் ச அஹம் ச ராமஸ்ய தர்மம் வக்தும் இஹ அர்ஹஸி” நானும் இந்த ராஜ்யமும் ராமனுடையவை. ராமனுக்கு சேர்ந்தது. நீங்கள் தர்மத்தைச் சொல்ல வேண்டியவர்கள். இப்படி சொல்லாதீங்கோ” என்கிறான். அதாவது, தன்னை ராமனுடைய ஒரு அடிமையாகவே நினைக்கிறான். ராமர் தான் உடையவர். நான் அவருடைய பொருள்” என்று சொல்றான். இந்த

இடத்தில் மஹான்கள் ஒன்று சொல்லுவார்கள். ஒரு பெட்டிக்குள் ஒரு ரத்தினம் இருக்கிறதென்றால் அந்த ரத்தினத்தை அந்தப் பெட்டி பாதுகாக்கிறது. ஆனால் அந்த பெட்டி "இது என்னோட ரத்தினம்" என்று சொல்ல முடியாது. யார் அந்த ரத்தினத்துக்கு உடையவர்களோ அவர் அந்த பெட்டியில் வைத்து சாவி போட்டு பூட்டி வைத்துக் கொண்ட பின் அந்த பெட்டி அந்த ரத்தினத்தைப் பாதுகாக்க முடியுமே தவிர என்னுடையது என்று நினைக்க முடியாது. அப்படி ராமன் பாதுகை என்கிற சாவியைப் போட்டு பரதன் என்கிற பெட்டியில் இந்த கோசல தேசம் என்கிற ரத்தினத்தை வைத்த போது, அவன் அதை trustee யாக பார்த்துக் கொண்டான். அவ்வளவுதான். அவனுக்கு அதுல ஒருவிதமான attachmentம் கிடையாது.

அப்படி அந்த பரதன் வந்து "யத்தி மாத்ரா க்ருதம் பாபம், நாஹம் ததபி ரோசயே | இஹஸ்தோ வனதுர்கஸ்தம் நமஸ்யாமி க்ருதாஞ்சலி: ||" நான் இங்கேயிருந்து கொண்டே, வனத்தில் இருக்கும் தர்மமே வடிவான என்னுடைய அண்ணா ராமரை அஞ்சலி பண்ணுகிறேன். என் மனது இவர்களுடைய பேச்சினால் மாறாமல் இருக்கட்டும். எங்கள் அண்ணா எப்படி தர்மத்தில் உறுதியாக இருக்கிறாறோ அதே மாதிரி என் மனதும் இருக்கட்டும்", என்று சொல்றான். "ராமர் 'யயாதி நஹுஷோபமஹ' எப்பேர்பட்டவர். அவர் ஆட்சி பண்ண வேண்டிய எடத்துல நான் சின்ன பையன் எங்கயாவது உட்காந்து ஆட்சி பண்ண முடியுமா? இந்த பேச்சே நீங்க பேசாதீங்கோ." என்று சொல்லி விட்டு சுமந்திரரைப் பார்த்து, "இது நடக்காது. இவளுடன் இருந்தால் இதே தான் சொல்வாள். நாம் கிளம்புவோம். நீ தேரை எடு. நாம் காட்டுக்குக் கிளம்புவோம். நால் வகையான படைகளையும் அணி வகுத்துக் கொண்டு எல்லோரையும் கூட்டிக் கொண்டு போவோம். அம்மாக்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு போவோம். ரிஷிகளையெல்லாம் கூட்டிக் கொண்டு போவோம். கூட்டிக் கொண்டு போய் ராமனுக்கு அங்கேயே பட்டாபிஷேகம் செய்து யானை மேல் ஏற்றி இங்கு அயோத்திக்கு கூட்டிக் கொண்டு வந்து விடலாம். கிளம்புங்கோ", என்று சொல்கிறான். எல்லா ஜனங்களுக்கும் அப்படியே கண் ஜலம் வரது. என்ன ஒரு மனசு, இவனுக்கு! அண்ணா காட்டுல கஷ்டப் படறாங்கிறதை நினைச்சு தனக்கு கையில கிடைச்ச சொத்தை துச்சமா விசிறி எறியறானே! என்று அவனை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். எல்லாரும் கிளம்புகிறார்கள். எல்லோர்க்கும் மிகவும் சந்தோஷம்.

मेघश्यामं महाबाहुं स्थिरसत्त्वं दृढव्रतम् । कदा द्रक्ष्यामहे रामं जगत-श्शोकनाशनम् ।।

दृष्ट एव हि नश्शोक-मपनेष्यति राघवः। तम-स्सर्वस्य लोकस्य समुद्यन्निव भास्करः।।

மேகஷ்யாமம் மஹாபாஹும் ஸ்திரசத்வம் த்ருடவ்ரதம் |

கதா த்ரக்ஷ்யாமஹே ராமம் ஜகத: ஷோகநாஷனம் ||

திருஷ்ட ஏவ ஹி நஷ்ஷோகம் அபநேஷ்யதி ராகவ: |

தமஸ்ஸர்வச்ய லோகஸ்ய ஸமுத்யன்னிவ பாஸ்கர: ||

"எப்படி சூரியன் வந்தால் உலகத்தின் இருள் எல்லாம் போகிறதோ அந்த மாதிரி ராமனுடைய முகத்தைப் பார்த்தால் நம்முடைய சோகம் எல்லாம் போய் விடும். வாங்கோ, போகலாம்" என்று எல்லோரும் கிளம்புகிறார்கள். காட்டுக்குப் போகிறார்கள். வழியில் குஹன் பரதனைப் பார்த்த உடனே சந்தேகப் படுகிறான். அவனை convince செய்கிறான் பரதன். அடுத்தது பரத்வாஜர். அவர் ஞானி. இருந்தாலும் சந்தேகமா ஒரு கேள்வி கேட்கறார். அவன் "நீங்க பகவான், என்னை இப்படி கேட்கலாமா?" என்று அழுகிறான். "வருத்தப்படாதே. உன்னோட உறுதியை பரீக்ஷை பண்றதுக்காக தான் கேட்டேன். நீ போய் ராமனைப் பாரு. சித்ரகூடத்துல இருக்கார்" என்று வழி காண்பிக்கிறார்.

பரதன் சித்ரகூடத்துக்குப் போகிறான். ராமரை நமஸ்காரம் பண்றான்.

भृशं संप्रार्थयामास राममेव प्रियंवदः ||

ப்ருஷம் ஸம்ப்ரார்த்தயாமாஸ ராமமேவ ப்ரியம்வத:

ப்ரியம்வத: – பிரியமான, வார்த்தைகளைச் சொல்லி, மிகவும் வேண்டினான். ப்ருஷம் – நிறைய வேண்டினான். இது போல் பகவானோட அனுக்ரஹம் நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் நிறைய பஜனம் செய்ய வேண்டும். நாராயணீயம், மூகபஞ்சசதி, ஆதி சங்கரரோட ஸ்தோத்திரங்கள் போன்ற பகவானுக்கு பிரியமான ஸ்தோத்திரங்களை எடுத்துக் கொண்டு அதை, "ப்ருஷம்" நிறைய ஆவர்த்தி பண்ணனும். "ஸம்ப்ரார்த்தயாமாஸ" – நன்னா ப்ரரத்தையா பண்ணனும். "ராமமேவ" – ராமன் ஒருத்தன் கிட்டேயே வேண்டிக்கணும். இப்படிதான் பக்தி பண்ணனும்கிறதை பரதன் காண்பிச்சுத் தரான் என்று ஸ்வாமிகள் சொல்வார்.

ஆனாலும் ராமர், “உங்க அம்மா கேட்டதும் தப்பில்லை. அவள் தசரதர் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள். இரண்டு வரங்கள் கொடுத்த உடனே “என் குழந்தை, ராஜா ஆகணும்”னு ஆசைப்பட்டு கேட்டா. நம்ம அப்பா பண்ணதும் தப்பில்லை. அவருக்குப் பிள்ளைகளையோ ராஜ்யத்தையோ எங்க வேணா வைக்கறதுக்கு உரிமையிருக்கு. அதனால அவர் உனக்கு நாட்டை கொடுத்தார். எனக்கு காட்டை கொடுத்தார். இதெல்லாம், இனிமே மாத்த முடியாது. எல்லாத்துக்குமே ஒரு காரணம் இருக்கும். இதெல்லாம் தெய்வச் செயல். நீ இந்த மாதிரி வருத்தப் படாதே. உன்னால நடந்ததுன்னு நான் ஒரு க்ஷணம் கூட நினைக்கலை. உன்னுடைய மனசு பத்தி எனக்குத் தெரியும். அதனால நீ போய் இந்த ராஜ்யத்தை எனக்காகப் பாத்துக்கோ”, என்று சொன்ன உடனே வஸிஷ்டர் சொல்படி ராம பாதுகையை வாங்கிக் கொண்டு யானை மேல் வைத்துத் திரும்ப வரும் வழியில் பரத்வாஜரைப் பார்த்து அவரிடம் இந்த விஷயத்தைச் சொல்லி விட்டு நந்திக் கிராமத்தில் வந்து பாதுகா-பட்டாபிஷேகம் செய்கிறான். ராமர் இல்லாத அயோத்தியில் அவனால் இருக்க முடியவில்லை. எப்படி ராமர் காட்டில் ஜடாமுடியுடன் தபஸ்வியா இருக்கிறாரோ அதைவிடக் கடுமையான விரத நியமங்களுடன் இங்கு நந்திக் கிராமத்துல இருந்து கொண்டு இருக்கிறான். அப்படி பக்தி பண்றான்.

அந்த மாதிரி பரத பக்தி என்பது நமக்கெல்லாம் ஒரு உயர்ந்த ideal. ஸ்வாமிகள் அந்த மாதிரி மஹா பெரியவாளோட பாதுகையை வைத்துக் கொண்டு பரதன் எப்படி ராமனிடம் இருந்தானோ அந்த மாதிரி ஸ்வாமிகள் மஹாபெரியவாளிடம் இருந்தார். அந்த பாதுகையிலிருந்து ஸந்யாஸம் வாங்கிக் கொண்டு உண்மையான துறவியா 12 வருஷங்கள் இருந்து எத்தனையோ பேரோட மனசுல பக்திங்கிற ஜோதியை, தீபத்தை ஏற்றி வைத்தார்.



ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

சூராணாம் சுத்த பாவானாம் பவதாம் ஆர்ஜவம் பலம்

இன்னிக்கி வால்மீகி ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் ஐம்பதாவது ஸர்க்கத்தி இருந்து ஒரு ஸ்லோகம்.

प्रकृत्या राक्षसा: सर्वे सम्ग्रामे कूटयोधिनः |

शूराणाम् शुद्धभावानाम् भवताम् आर्जवम् बलम् ||

ப்ரக்ருத்யா ராக்ஷஸா சர்வே ஸங்க்ராமே கூடயோதின: |

சூரானாம் சுத்த பாவானாம் பவதாம் ஆர்ஜவம் பலம் ||

என்று கருட பகவான் ராம லக்ஷ்மணர்களிடம் கிட்ட சொல்றார். அது என்ன கதை என்றால் "யுத்தம் ஆரம்பிக்க போகிறது. அதற்கு முன் அங்கதனைப் போய் ராவணனிடம் ஒரு last warning என்கிற மாதிரி ஒரு தடவை போய் எச்சரிக்கை பண்ணிட்டு வா" என்று விபீஷணனிடம் அனுமதி கேட்டுக் கொண்டு

அங்கதனை ராமர் ராவணனிடம் தூது அனுப்புகிறார். நீ போய் ராவணனிடம் “உனக்கு கடைசியா உயிர் பிழைக்க ஒரு வாய்ப்பு கொடுக்கறேன். சீதையை கொண்டு வந்து ஒப்படைத்து மன்னிப்பு கேட்டுக் கொள். இல்லை என்றால் உனக்கு என்ன தைரியம் இருக்கோ, என்ன படை பலமோ, கோட்டை கொத்தளம் என்று எதை நம்பி நீ இருக்கியோ அதைக் கொண்டு யுத்தம் பண்ணு. நீ வந்து சரணாகதி செய்தாய் என்றால் உன்னை உயிரோடு விடுவேன். ஆனால், உன்னை மாதிரி ஒரு தூர்த்தனுக்கு இந்த ராஜ்யத்தை தரமாட்டேன், விபீஷணனைத் தான் நான் இலங்கைக்கு ராஜாவாக்குவேன்” என்று போய் சொல்லிட்டு வருமாறு கூறுகிறார்.

இந்த வார்த்தைகளைப் போய் அப்படியே அங்கதன் ராவணனிடம் சொல்கிறான். ராவணன் பொறுப்பானா! “நான் வாலியின் பிள்ளை அங்கதன் வந்திருக்கிறே” என்று ஆரம்பிக்கிறான். வாலியிடம் ஏற்கனவே ராவணன் அடி வாங்கியிருக்கான். வாலியோட ஒரு பிள்ளை வந்து இவ்வளவு தைரியமாகப் பேசுவதைப் பாத்த உடனே அவனுக்கு கடும்கோபம் வருகிறது. “பிடிங்கோ அவனை! கொல்லுங்கோ” என்கிறான். இந்த தடவை அவனைத் தடுக்க விபீஷணர் இல்லை. ஒரு நாலு ராக்ஷஸர்கள் அவனை பிடிக்க வர அந்த நாலு பேரையும் இரண்டு இரண்டு பேராக இரண்டு கஷ்கத்திலும் தூக்கிக் கொண்டு அங்கதன் ஆகாயத்தில் பறந்து காலால் ராவணனின் கோட்டை கோபுரத்தை ஒரு உதை உதைக்கிறான். அந்த கோபுரமே சரிஞ்சு விழுகிறது. இந்த நாலு பேரையும் ஆகாசத்துலேர்ந்து கீழே போடறான். நாலு பேரும் வதம் ஆயிடறா. நேரா ராமர் கிட்ட வந்துடறான். ராமர் கிட்ட வந்து, “இது அசத்து. இவனுக்கு பேசியெல்லாம் ஒண்ணும் புரியாது. யுத்தம் தான்” என்று கூறுகிறான்.

அடுத்த நாள் யுத்தம். இதுக்கு நடுவுல விபீஷணன் அவனுடைய நாலு மந்திரிகள் பறவைகளா போய் ஆகாசத்துல நின்னுண்டு ராவணன் என்ன வ்யூஹம் பண்ணியிருக்கான் அப்படிங்கிறத பாத்துண்டு வந்து சொல்றா. எந்தெந்த கோட்டைல யார் யாரை நிறுத்தியிருக்கான், தெற்கு கோட்டைல இந்திரஜித் படையோட நிக்கறான், வடக்கு கோட்டைல மஹோதரன் நிக்கறான் அப்படின்னு தகவல்லாம் சொல்றா. அதை சொல்லிட்டு விபீஷணன் ராமர் கிட்ட சொல்றான் “ரோஷயே தவாம் நீ பீஷயே” நான் உங்களை பயமுறுத்தறேன் நினச்சிக்காதீங்கோ. உங்களுக்கு ரோஷம் வர்றத்துக்காக சொல்றேன். இந்த ராக்ஷஸர்கள்லாம் ஒவ்வொருத்தரும் “ஆததாயின:”. பெண்களையும், குழந்தைகளையும் கூட கொல்றதுக்கு தயங்காத கொடும் மனசு

படைச்சவர்களுக்கு ” ஆததாயின:” பேரு. அப்பேற்பட்ட கொடுமையான ராக்ஷஸர்கள். இவாளோட யுத்தம் பண்றதுக்கு எப்படி strategy பண்ணனும்னு யோசிங்கோ”, என்று சொன்ன உடனே ராமர் “எங்க இந்திரஜித் வருகிறானோ அங்க ஹனுமார் படையோட போகட்டும். எங்க மஹோாதரன் வருகிறானோ அங்க சுக்ரீவன் படையோடு போகட்டும். இப்படி ஒரு strategy சொல்றார்.

முன்னர் நாலா திக்குலயும் வானரர்களை அனுப்பிச்சு சீதாதேவியை தேடறதுக்கு ஆரம்பிக்கும்போது சுக்ரீவன் ராமரிடம் சொல்றான் “இது உங்க படைதான். நீங்க என்ன சொன்னாலும் கேட்பா”. அப்போது ராமர் “இல்ல நீதான் அவாளுக்கு ராஜா. உனக்கு என்னோட தேவை தெரியும். சீதாதேவி எங்கேயிருக்கான்னு கண்டுபிடிச்சு தரணும். நீயே அவாளுக்கு உத்தரவு பண்ணு. நேரம் வரும்போது நான் அவளுக்கு உத்தரவு கொடுக்கறேன்” என்று சொல்கிறார். இப்போ அந்த நேரம் வந்துருக்கு. எப்படி அவா படைய நடத்தணும், இவாளோட வ்யூஹம் என்னங்கிறதை ராமரே சொல்றார்.

அந்த மாதிரி அந்தந்தப் படைகள் போய் அங்கங்க நிக்கறது. “ராவணன் எந்த கோட்டை வழிய வெளியில வருகிறானோ அங்கே நானே யுத்தம் பண்றேன்” என்று ராமர் சொல்றார். “இந்த யுத்தத்தில் நான், லக்ஷ்மணன், விபீஷணன் அவனுடைய நாலு மந்திரிகள் என்று இந்த ஏழுபேர் மட்டும் மனுஷாளா இருக்கோம். பாக்கி வானர்ர்கள், கரடிகள் எல்லாம் அவா அவா அந்த உருவத்திலேயே யுத்தம் பண்ணட்டும்”. அவா எல்லாம் நெனச்ச உருவத்தை எடுக்கக் கூடியவர்கள். ஆனால் அந்த மாதிரி உருவத்தை மாத்த வேண்டாம், “வானரா ஏவ நஸ்ச்சின்னம்” வானரர்களா இருக்கறதே, நமக்கு அடையாளமா இருக்கட்டும் என்று ராமர் சொல்றார்.

இதை ஸ்வாமிகள் வேடிக்கையா சொல்வார் “வானரா ஏவ நஸ்ச்சின்னம்” என்பதை நான் எனக்கு வெச்சிண்டுருக்கேன். அதாவது ஸ்வாமிகளோட தேவைகளே ரொம்ப கம்மி. ஆனா மனுஷா இந்த காலத்துல ரொம்ப பந்தா விட்றதுனால அந்தமாதிரி பந்தாவெல்லாம் என்னால விடமுடியாது. நான் வந்து உட்காந்து படிப்பேன். கதை கேட்க வரவாளுக்கு ஏத்த மாதிரியெல்லாம் என்னால என்னை மாத்திக்கமுடியாது. இல்ல ஒரு ஆத்துல போய் படிக்கறோம், அல்லது ப்ரவசனம் பண்றோம்னா அவளோட tasteக்கெல்லாம் என்னால என்னை மாத்திக்கமுடியாது. நான் இருக்கற மாதிரி நான் இருக்கேன், “வானரா

ஏவ நஸ்ச்சின்னம்". அவாளுக்கு பிடிச்சுதுன்னா அடுத்த வாட்டி கூப்பிடப் போறா. இல்லன்னா ஏழு நாள் ஸப்தாஹம்னா மூணு நாள், நாலு நாள் என்று எண்ணிண்டு இருக்கப்போறா" என்பார். அந்த மாதிரி நிலைமை அவருக்கு வரல. யாரு அவர் கிட்ட கதை கேட்டாலும் திரும்பத் திரும்ப அவரைக் கூப்டுண்டு இருந்தா. ஆனா அவர் அப்படி வேடிக்கையா சொல்லுவார். உலகத்தோட போக்குக்கெல்லாம் நம்மள மாத்திக்க வேண்டியது இல்லை என்பதற்காக இதைச் சொல்லுவார்.

அந்த மாதிரி வ்யூஹமெல்லாம் அமைச்சு யுத்தம் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி ஒரு தடவை அங்கதனை தூது அனுப்பிச்சு அதையும் தீர்மானம் பண்ணிண்டு அப்பறம் அடுத்த நாள் கார்த்தால எல்லா கோட்டைகளையும் தாக்கறா. அப்போ ஒவ்வொரு கோட்டைகளிலிருந்தும் ராக்ஷஸர்கள் வெளில வரா. துவந்தவ யுத்தம் அப்படின்னு சொல்லி equal powersல இருக்கறவா எல்லாம் யுத்தம் பண்ணறா. அப்போ அங்கதன் இந்த இந்திரஜித்தை கடுமையா தாக்கி அவனை தடுமாற பண்ணிடறான். உடனே எல்லாரும் வியக்கறா. இந்திரஜித் இந்திரனையே ஐராவதத்துலேர்ந்து கீழே தள்ளி சிறை பிடிச்சிண்டு வந்தவன். அப்பேற்பட்ட இந்திரஜித்தையே நீ ஜெயிச்சிட்டயே அப்படின்னு அங்கதனை எல்லாரும் கொண்டாடறா.

அப்போ ராமர் சொல்றார் "இல்லை! இது கொண்டாட வேண்டிய நேரம் இல்லை. ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய நேரம். அந்த இந்திரஜித்துக்கு நிறைய மாயை தெரியும்." என்று சொல்கிறார். அந்த இந்திரஜித்துக்கு மறைந்திருந்து அடிக்க தெரியும். அவன் ஏதோ ஒரு யாகம் பண்ணுவான். அந்த மாதிரி மறைந்திருந்து எல்லார் மேலயும் அம்பு போடறான். எல்லாரும் தவிக்கறா. எல்லா பக்கமும் பாக்கறா. ஏதோ சத்தம் தான் கேட்கறது, எங்க இருக்கான்னு தெரியல. அவன் ஆகாசத்துல, மேகங்களுக்கு நடுவுல மறைந்திருந்து தேர்ல அங்க இங்க போயி அம்புகளை மழையாட்டம் கொட்டறான். ராமலக்ஷ்மணா மேல நாக பாஸத்தை போட்டுடறான். கடுமையான விஷம் கொண்ட நாகங்கள் ராமரையும், லக்ஷ்மணனையும் சுத்திண்டுடறது. அவா ரெண்டு பேரும் கீழ விழுந்துடறா. பின்னாடி லக்ஷ்மணன், இந்திரஜித் கூட யுத்தம் பண்ணும்போது அவன் நாகபாஸத்தைப் போடறான். அவா நேர நேர யுத்தம் பண்ணும்போது லக்ஷ்மணர் கருட அஸ்த்திரத்தை விட்டு அதை முறிச்சுடறார். இங்க அவாளுக்கு கண்ணுக்குத் தெரியலை. அதனால அந்த நாகங்கள் எல்லாம் இவாளை கட்டிடறது. அதனால

அவா கீழ விழுந்துடறா. மயக்கமா விழுந்துடறா. மூச்சுக்கூட இல்ல. அதனால எல்லாரும் பயப்படறா.

அந்த நேரத்துல இந்திரஜித் போய் சொல்றான், “ராம லக்ஷ்மணா கதை எல்லாம் முடிஞ்சிடுத்து, அப்பாவை நிம்மதியா இருக்க சொல்லுங்கோ”. ராவணனுக்கு ஒரே குஷி. ஊரெல்லாம் பெரிய உத்சாகமா கொண்டாடறான்.

இதுக்கு நடுவுல அவனோட குறுக்கு புத்தி காரணமாக “சீதா தேவியை புஷ்பக விமானத்துல அழைச்சுண்டு போயி காண்பிங்கோ. இந்த ராமலக்ஷ்மணாளோட நிலைமையை. அதை பார்த்தாவது புத்தி மாறி அவ என் கிட்ட வருவா” என்கிறான். அந்த மாதிரி திரிஜடை சீதையைக் கூட்டிண்டு போயி காண்பிக்கும் போது சீதை புலம்பி அழறா. “பெரியவா எல்லாம் எவ்வளவு ஆஸீர்வாதம் பண்ணியிருக்கா. நீ தீர்க்க ஸுமங்கலியா பிள்ளைகள் பெற்று சக்ரவர்த்தினியா இருப்பேன்னு சொன்னாளே. இப்படி ஆயிடுத்தே. அவா சொன்ன வார்த்தை எல்லாம் பொய்யாயிடுத்தே.” என்று புலம்புகிறாள். இந்த இடத்துல ஸ்வாமிகள் “அந்த மாதிரி ரிஷிகள் சொன்ன வார்த்தை பொய்யாகலை. ஆகாது”, என்று சொல்வார். ஸ்வாமிகளுக்கு தர்மம் தோத்துதுங்கிற பேச்சை கூட பொறுக்க முடியாது. அது மாதிரி, “ஞானின: அன்ருதவாதின:” ஞானிகள் சொன்ன வார்த்தை பொய்யாயிடுத்துன்னு சீதை புலம்பறா. ஆனா நமக்குத் தெரியும். அது பொய்யாகல”, என்று ஸ்வாமிகள் சொல்வார். அப்ப த்ரிஜடை சமாதானப் படுத்தறா. “இல்லை. அவா இப்ப மயக்கமாதான் இருக்கா. உயிர் போகல. அவா உயிர் போயிடுத்துன்னா உன்னை இந்தப் புஷ்பக விமானம் ஏத்துக்காது.” என்று சொல்கிறாள். சீதைக்குத் தீட்டு வந்துடும் என்னும் அர்த்ததுல சொல்றா. அப்புறம் சீதை அழுதுண்டே போறா.

ராமருக்கு ஒரு நிமிஷம் தெளிவு ஏற்பட்டு கண்ணைத் திறந்து பார்க்கறார். இந்த லக்ஷ்மணன் இறந்து கிடக்கறான்னு நினைச்சு ரொம்ப புலம்பறார். “ஹே, லக்ஷ்மணா! நீ இல்லாம எனக்கு என்ன இருக்கு? நீ ஒரு வார்த்தை கூட கடுமையான வார்த்தை பேசமாட்டியே”, அப்படீன்னு சொல்றார். லக்ஷ்மணன் தான் கோபக்காரன் என்று கதை சொல்றவா சொல்லுவா. ராமர். “நீ ஒரு வார்த்தை கூட கடுமையான வார்த்தை பேச மாட்டியே” என்று சொல்றார். ராமர் கிட்ட யாராவது தப்பா நடந்துண்டா லக்ஷ்மணன் கோச்சுப்பான். மத்தபடி அவன் ரொம்பவே friendly. “ஸௌமித்ரி: மித்ர நந்தன” என்று அடிக்கடி வரும். அவனுடைய friendsக்கெல்லாம் ரொம்ப பிடிச்சவன். அப்படி இனிமையா பேசினா தானே பிடிச்சவனா இருக்க முடியும். எப்பவுமே லக்ஷ்மணன்

இனிமையா பேசுவான்னு தெரியறது. இப்படி அந்த லக்ஷ்மணன் இறந்து கிடப்பதாக நினைத்து ராமர் புலம்பி சுக்ரீவனிடம் விபீஷ்ணனிடம் எல்லாம் "யுத்தம் எல்லாம் முடிஞ்சு போயிடுத்தப்பா. நான் என்ன பண்றது? சுக்ரீவா! நீ திரும்பி போய்க்கோ", என்கிறார். ஹனுமாருடைய பிரபாவத்தையும் ஜாம்பவானுடைய வீரத்தையும் எல்லாம் புகழ்ந்து அவாளுக்கெல்லாம் நன்றி சொல்கிறார். விபீஷணனிடம் "நான் உனக்கு promise பண்ணினேன். என்னால உன்னை இலங்கைக்கு ராஜாவா ஆக்க முடியல" என்று சொல்றார். அந்த மாதிரி நிலைமைகள் வரும்னு அப்டீங்கிறது தெரியறது.

ஸ்வாமிகள் 1950-ல் சென்னை வந்தார். வந்ததுல இருந்து அவருக்குக் கடன்தான். வட்டி, வட்டிக்கு வட்டி, 1986 வரைக்கும் பணத்துக்கு கஷ்டப் பட்டுருக்கார். அப்போ ரொம்ப தாங்க முடியாத கஷ்டம் இருந்த போது அவரைச் சுத்தி இருந்த நாலு பேர்கிட்ட, "நீங்க எல்லாம் என்னோட சேர்ந்து கஷ்டப் படாதிங்கோ. நான் சொல்லி கொடுத்த பஜனத்தை அவாவா பண்ணிண்டு இருங்கோ. இங்க வரணும் என்கிறதில்லை", என்று சொல்லியிருக்கார். அந்த அளவுக்கு பகவான் அவரை சோதனை பண்ணி இருக்கார். அந்த மாதிரி இங்க ராமருக்கு கடுமையான சோதனை.

அப்படி எல்லாரும் தவிக்கும் போது கருட பகவான் வரார். கருட பகவான் வந்த உடனே அந்த பாம்புகள் எல்லாம் ஓடிப் போயிடறது. கருட பகவான் இவா ரெண்டு பேரையும் தடவி கொடுத்த உடனே இவா ரெண்டு பேருக்கும் முன்ன விட ரெண்டு மடங்கு வீரியமும், பலமும், தேஜஸும் வந்துடறது. "நீங்க யாரு"ன்னு ராமர் கேட்கறார். "நான் யாருங்கிறதை பத்தி நீங்க ஆவல் படவேண்டாம். நான் யாருங்கிறது பின்னாடி தெரியும்". அதாவது இராவணன் வதம் ஆன பின்ன தெரியும். அதாவது தேவர்கள் எல்லாம் வந்த போது ராமர், "ஆத்மானாம் மானுஷம் மன்யே" என்று சொல்கிறார். "நான் மனுஷன், தசரத குமாரன், என்று தான் நான் என்னை அறிந்து கொண்டிருக்கிறேன்" என்று ராமர் சொன்ன போது, பிரம்மா "நீங்க சாக்ஷாத் விஷ்ணு பகவான்" என்று சொல்கிறார். அப்போது கருடன் யாருன்னு தெரியும் என்ற meaning ல, "நான் யாருன்னு உங்களுக்குப் பின்னாடி தெரியும். நீங்க இந்த யுத்தத்தை பண்ணுங்கோ. நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று அந்த கருட பகவான் சொல்லும்போது ஒரு ஸ்லோகம் வருகிறது.

ப்ரக்ருத்யா ராக்ஷஸா ஸர்வே ஸங்க்ராமே கூடயோதின: |

சூரானாம் சுத்த பாவானாம் பவதாம் ஆர்ஜவம் பலம் ||

இயல்பிலேயே ராக்ஷதர்கள் சூழ்ச்சி எல்லாம் பண்ணுவா. நீங்கள் சுத்த மனசும், ஆர்ஜவமும் உடையவர்கள். அந்த ஆர்ஜவம்தான் உங்க பலம் என்று சொல்றார். ஆர்ஜவம் என்ற வார்த்தைக்கு ருஜூவித் தன்மை என்று அர்த்தம். அதாவது மனோ, வாக், காயத்துனால, நேர்மையா இருக்கறதுக்கு ஆர்ஜவம்னு பேரு.

அந்த மாதிரி இந்த நேர்மையா இருக்கறதுக்கு, ஒரு power இருக்கு. மஹா பெரியவா சொன்ன வார்த்தை எல்லாம் பலிச்சுதுன்னா எப்பவும் ஸத்யமா இருக்கறது அப்படீன்னு வெச்சுண்டா. அவா பேசறது எல்லாம் ஸத்யமாயிடறது. மஹான்களுக்கு அவா சொல்ற வார்த்தைகள் பின்னாடி ஸத்யம் வந்து ஒட்டிக்கறது. அவா சொல்றது ஸத்யமாயிடறது. அது எப்படீன்னா அவா எப்பவுமே ஸத்யம்தான் பேசணும். மனோ, வாக், காயத்துனால ஆர்ஜவமா இருக்கணும் என்று ரொம்ப ரொம்ப careful ஆ இருக்கா.

சிவன் சார் கூட நேர்மைதான் தெய்வீகம் என்று அதை ரொம்ப முக்யமா சொல்றார். ஆசார அனுஷ்டானங்களோ, பிரம்மசர்யமோ, அதெல்லாம் தெய்வீகம் கிடையாது. நேர்மை, அடக்கமா ஒரு தெய்வத்து கிட்ட பக்தி, இது போறும் என்பதை அவர் வாழ்ந்தும் காண்பிச்சார். அவருடைய புஸ்தகத்துலயும் ரொம்ப அறுதியிட்டு எழுதியும் இருக்கார்.

இப்படி இந்த ராம லக்ஷ்மணா, அந்த ஆர்ஜவத்தோட இருந்ததுனால, கருட பகவான் வந்து அவாளை விடுவிக்கறார். கருட பகவான், "இந்த நாக பாஸத்துல இருந்து தேவர்களோ, ரிஷிகளோ கூட உங்களை விடுவிக்க முடியாது. நான் இதை கேள்வி பட்ட உடனே ஓடோடி வந்தேன்", என்று சொல்றார். ஆனா அதுக்குள்ளே இங்கே எல்லாரும் அழுதாச்சு. கஷ்ட காலத்துல இருக்கும் போது நாம கடவுளுக்கு கண் இல்லயான்னு நினைக்கறோம், அழுது புலம்பிடறோம். பகவானோட அனுக்ரஹம் வெகு விரைவில் வரப்போறது. ஆனா நம்மால அதுவரை தாங்க முடியலை. ரொம்ப வருத்தப்படறோம். மஹான்கள் பொறுமையா இருக்கா. திதிக்ஷா அப்படீன்னு சொல்லி, இது ஏதோ ஒரு வினையினால வந்தது, சரியா போயிடும், அப்படீன்னு, அதை பத்தி, நினைக்காம அவா "நாம பண்ண வேண்டிய கடமை என்ன, அதுல நேர்மையா

இருக்கோமா? அது பாபம் கலக்காமல் தர்மமா இருக்கா?", அப்படீங்கிறதை மட்டும் அவா பாத்துண்டு போறா. அந்த மாதிரி இன்னிக்கு அந்த நாகபாஸத்துல இருந்து ராமலக்ஷ்மணா கருடனோட உதவியால விடுபட்டதை பார்த்தோம்.

याथार्त्यात् न हि भुवने किमपि असाध्यम् "யதார்த்தமா இருந்தா, மூவுலகத்துலயும், எதுவுமே அஸாத்யம் கிடையாது. எது வேணாலும் நடக்கும்" அப்படீன்னு ஸ்ரீமத் பாகவதத்துல ஒரு வரி. பாகவதம் எனக்கு தெரியாது. இந்த ஒரு வரி ஸ்வாமிகள் எனக்கு எழுதிக் கொடுத்தார். அப்படி யதார்த்தமா இருக்கறதுங்கிறது ரொம்ப முக்யமான குணம் ஆர்ஜவம் தான் என்று இந்த காட்சியில இருந்து தெரியறது.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம

இன்று போய் நாளை வா

இன்னிக்கு வால்மீகி ராமாயணத்துல, யுத்த காண்டத்துல அம்பத்தி ஒன்பதாவது ஸர்க்கத்துல ஒரு ஸ்லோகம்.

गच्छानुजानामि रणार्दितस्त्वं प्रविश्य रात्रिंचरराज लङ्काम् |

आश्वस्य निर्याहि रथी च धन्वी तदा बलम् द्रक्ष्यसि मे रथस्थः ||

கச்சானுஜானாமி ராணார்திதஸ்த்வம்

ப்ரவிஷ்ய ராத்ரிம்சரராஜ லங்காம் |

ஆஷ்வாஸ்ய நிர்யாஹி ரதி ச தன்வி

தாதா பலம் தரக்ஷ்யஸி மே ரதஸ்தஹ ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். இது ராமர் ராவணன் கிட்ட சொல்றது. முழு கதையையும் சொல்றேன். அப்போ இந்த ஸ்லோகத்தோட அருமை புரியும்.

ராம ராவண யுத்தம் ஆரம்பிச்சுடுத்து. வானராளுக்கும் ராக்ஷஸாளுக்கும் யுத்தம் நடக்கறது. ஒவ்வொருத்தரா அங்கே லங்கையிலிருந்து வரா. தூம்ராக்ஷன், வஜ்ராதம்ஷ்ட்ரன் அப்படின்னு ஒவ்வொருத்தரா வரா. இங்க அங்கதன், ஹனுமார் யாரவது ஒருத்தர் அவாளை யுத்தம் பண்ணி வதம் பண்ணிடறா. அகம்பனன் ஒரு பெரிய வீரன் வரான். அகம்பனன்னா அவனை அசைக்கவே முடியாது அப்படின்னு அர்த்தம். அவனை ஹனுமார் வதம் பண்ணிடறார். அதுக்கு முன்னாடி ராம லக்ஷ்மணா இந்திரஜித் போட்ட அந்த நாக பாசத்திலேருந்து விடுபட்டுடறா. அதை நேற்றைக்கு சொன்னேன்.

ராவணன் சேனாதிபதி ப்ரஹஸ்தன் கிட்ட சொல்றான், “வந்திருக்கறது பெரிய எதிரியா தெரியறது. நம்முடைய படையில நீயோ, நானோ, கும்பகர்ணனோ, இந்திரஜித்தோ தான் இவாளை எதிர்க்க முடியும் போல தோணறது. அதனால நீ நாளைக்கு முக்கால்வாசி படையை எடுத்துண்டு போய் இந்த ராமனோடு யுத்தம் பண்ணு” என்று சொல்றான். ப்ரஹஸ்தன், “சரி! நீ எனக்கு எவ்வளோவெல்லாம் பண்ணியிருக்க. கௌரவப்படுத்தி இருக்க. உனக்காக உயிரையே விடுவேன்” அப்படின்னு சொல்லி ப்ரஹஸ்தன் மறுநாள் யுத்தத்துக்கு போறான். பெரிய ஸர்க்கம். ப்ரஹஸ்தன் யுத்தத்துக்கு போறதோட வர்ணனைகள்; அப்பறம் எல்லாரும் அவனோட யுத்தம் பண்ணி தோத்துடுறா; நீலன், வானராளோட சேனாதிபதி, அக்னியோட பிள்ளை. அந்த ப்ரஹஸ்தனுக்கும் நீலனுக்கும் கடுமையான யுத்தம் நடக்கறது. கடைசில நீலன் ஒரு பெரிய கல்லைத் தூக்கி அவன் மேல போட்டு இவனோட தேர், சாரதி, இந்த ப்ரஹஸ்தன் எல்லாரையும் சேர்த்து வதம் பண்ணிடறான்.

ப்ரஹஸ்தனே வதமாயிட்டான்னு கேள்வி பட்ட உடனே ராவணனே யுத்தத்துக்கு வரான். ராவணன் கிளம்பின உடனே அவன் பின்னாடி எல்லாருமே வரா. இந்திரஜித், மஹோதரன், அதிகாயன் அப்படின்னு அவன் sideல இருக்க எல்லா பெரிய வீரர்களும் வரா. கும்பகர்ணன் வரல. அவன் தூங்கிண்டு இருக்கான். இவா எல்லாருமா வெளியில வரா. அப்போ ராமர்

விபீஷணன் கிட்ட "யாரு இவாள்ளாம்?" என்று கேக்கறார். விபீஷணன் ஒவ்வொருத்தரா சொல்லிண்டு வரான், "அதோ யானை மேல வரனே அவன் தான் மஹோதரன், இந்த குதிரை மேல இருக்கானே அவன் பேர் தேவாந்தகன்" அப்படின்னு ஒவ்வொருத்தரா சொல்லிண்டு வரும்போது ஒரு பெரிய தேர் மேல ராவணன் இருக்கான். "இதான் ராவணன்" என்ற உடனே ராமர், "ஆஹா இந்த ராவணன் ஒரு சூரியன் மாதிரி தேஜஸா இருக்கானே. பெரிய வீரனா தெரியறான்" அப்படின்னு எதிரியோடு வீரத்தைக் கூட ராமர் வியக்கறார்.

அந்த ராவணன் என்ன சொல்றான் மத்தவாள் கிட்ட எல்லாம்!? கூடியிருந்த ராக்ஷஸா கிட்ட எல்லாம், "நீங்க அவா அவா postக்கு போங்கோ. அந்தந்த கோட்டை வாசல்ல காவலுக்கு போங்கோ. இல்லைன்னா அந்த வழியா வானரா உள்ள வந்து கோட்டையை பிடிச்சிற போறா", அப்படின்னு சொல்றான். எல்லாரும் போயிடுறா. ராவணன் மட்டும் அவனோட படையோட யுத்தம் பண்றான். யாருமே அவன் கிட்ட நிக்க முடியல. ரொம்ப பராக்ரமத்தோட யுத்தம் பண்றான். எல்லாரும் ராமர் கிட்ட வந்து சரணாகதி பண்றா. ராமர் பக்கத்துல இருந்த லக்ஷ்மணர், "இந்த ராவணனை நீங்கதான் வதம் பண்ணப் போறேள், இருந்தாலும், நான் இவனோட யுத்தம் பண்றேன்" என்று சொல்றார். அப்படின்னு சொன்ன உடனே ராமர் "போய் யுத்தம் பண்ணு. அவன் பெரிய வீரன். வரங்கள் எல்லாம் பெற்றவன். அதனால உன்னுடைய பலத்தையும் பாத்துக்கோ. அவனுடைய பலத்தையும் பாத்துக்கோ. உன்னுடைய weaknessஅ பாத்துக்கோ, அவனுடைய weaknessஅ பாத்துக்கோ. போய் யுத்தம் பண்ணு" அப்படின்னு சொல்றார்.

இப்படி இவா பேசிண்டு இருக்கும்போது ஹனுமார் போய் ராவணன் கிட்ட "ஹே ராவணா! என்னோடு யுத்தம் பண்ணு" அப்படின்னு சொல்றார். அப்போ ராவணன் சொல்றான் "நான் எல்லாரோடயும் எல்லாம் யுத்தம் பண்ண மாட்டேன். உன்னோட பலத்தை காண்பி. ஒரு குத்து விடு. அதை பாத்துண்டு உன்னோடு வேணும்னா யுத்தம் பண்றேன்" அப்படிங்கறான். அப்போ ஹனுமார் சொல்றார் "முன்ன நான் வந்த போது உன் பிள்ளை அக்ஷனை வதம் பண்ணினனே! அதுலேர்ந்து என் பலம் தெரியலையா?" அப்படிங்கறார், உடனே ராவணனுக்கு ரோஷம் வர்றது, ராவணன் ஹனுமாரை ஒரு குத்து விடறான். ஹனுமார் நடுங்குறார். ஆடிடறார். அடுத்தது ஹனுமார் ராவணனை

ஒரு குத்து விடறார். அவன் தன்னோட தேரிலேயே விழுந்துடறான். கலங்கி போயிடறான். அப்பறம் எழுந்துண்டு ராவணன் ஹனுமார் கிட்ட சொல்றான், "நீ ரொம்ப பலசாலி தான். உன்னோட நான் யுத்தம் பண்றேன்", என்கிறான். அப்போ ஹனுமார் சொல்றார் "எனக்கு இது அவமானம். நான் ஒருத்தனை குத்தறதாவது. அவன் உயிரோடு வந்து என்ன பாராட்டறதாவது" அப்படிங்கறார். உடனே ராவணனுக்கு திரும்பவும் ரோஷம் வர்றது, அவன் ஹனுமாரை பயங்கரமா ஒரு குத்து விட்றான். உடனே ஹனுமார் கீழே விழுந்துடறார்.

அப்பறம் ராவணன் மத்தவா கிட்ட யுத்தம் பண்றதுக்கு போறான். இந்த ப்ரஹஸ்தனை வதம் பண்ண நீலனை பாக்கறான். உடனே இவன் தானே என் சேனாதிபதியை வதம் பண்ணினான் அப்படின்னு நீலனோடு யுத்தம் பண்றான். நீலன் பெரிய மாயாவி. அவன் ஒரு சின்ன பட்டாம்பூச்சியாட்டம் உருவம் எடுத்துண்டு இவனோட தேர் தட்டிலேயும், கொடியிலேயும், அவனோட தலை மேலேயும் குதிரைகள் மேலேயும் மாத்தி மாத்தி உட்காரறான். பறந்து பறந்து போகிறான். இதை பார்த்த உடனே ராவணனுக்கு ஆச்சரியமாக இருக்கு. என்ன பண்றதுன்னு சொல்லிட்டு டக்குன்னு அக்னி அஸ்த்ரத்தை அந்த நீலன் மேல போடறான். அந்த நீலன் மேல போட்ட உடனே அவன் ஆன்னு கத்திண்டு விழுந்துடறான். ஆனா அவன் அக்னியோட பிள்ளையா இருக்கறதுனால அந்த அக்னியாஸ்திரம் அவனை கொல்லலை.

அடுத்தது லக்ஷ்மணர் யுத்தத்துக்கு வரார். ராவணனுக்கும் லக்ஷ்மணனுக்கும் கடுமையான யுத்தம் நடக்கறது. கடைசில ஒரு அஸ்த்திரத்தை போட லக்ஷ்மணர் மயங்கி விழுந்துடறார். அப்போ ராவணன், "இந்த லக்ஷ்மணை இலங்கைக்கு தூக்கிண்டு போயிடறேன்", அப்படின்னு நினைத்து நெருங்கி வந்து லக்ஷ்மணனை ராவணன் தூக்க பாக்கறான். அவன் மந்தர மலையெல்லாம் தூக்கினவன். ஆனா லக்ஷ்மணனை ராவணனால தூக்க முடியல. ஏன்னா அவர் ஸாக்ஷாத் விஷ்ணுவோட அம்சமாச்சே. அப்போ ஹனுமார் அங்க வந்து "ஹே ராவணா! இன்னும் ஒரு குத்து பாக்கி இருக்கு. இந்தா வாங்கிக்கோ!" ன்னு ஒரு குத்து குடுக்குறார். அவன் ரத்தம் கக்கிண்டு, மயங்கியே விழுந்துடறான். அப்போ ஹனுமார் லக்ஷ்மணனை தூக்கறார். பக்தனா இருக்கறதுனால லக்ஷ்மணஸ்வாமி லகுவாக, எளிமையாக ஆகிவிடுறார். ஹனுமார் அவரை தூக்கிண்டு வந்து ராமர் கிட்ட சேத்துடறார்.

அப்போ ராமர் “இந்த ராவணனோட நானே யுத்தம் பண்றேன்” அப்படின்னு கிளம்பறார். அப்போ ஹனுமார் சொல்றார், “என் மேல ஏறிக்கோங்கோ. எப்படி கருடபகவான் மேல ஏறிண்டு விஷ்ணு பகவான் யுத்தம் பண்ணுகிறாரோ, அந்த மாதிரி என்மேல் ஏறிண்டு இந்த ராவணனோட யுத்தம் பண்ணுங்கோ” ன்னு சொல்றார். இதைக் கொண்டுதான் கருடபகவானை பெரிய திருவடின்னும், ஹனுமாரைச் சிறிய திருவடின்னும் வைஷ்ணவா சொல்லுவா.

அந்த மாதிரி ராமர் ஹனுமார் மேல ஏறிண்டு ராவணனோட யுத்தம் பண்றார். இங்க எங்க பார்த்தசாரதி கோயில்ல கூட ஒன்பது நாள் ராமநவமி உத்ஸவம் பண்ணி ராமநவமி அன்னிக்கி பூர்த்தி பண்ணும் போது சாயங்காலம் ஹனுமந்த வாஹனத்துல ராமர் வருவார். ரொம்ப அழகான சேவை அது.

அப்படி ஹனுமார் மேல ஏறிண்டு ராவணனோட ராமர் யுத்தம் பண்றார். ராவணன் அங்கேருந்து அம்பாக போடறான். ராமர் மேல ஒண்ணுமே படல. ராவணனுக்கு ஹனுமார் மேல ரொம்ப கோபம். வெறி. இவர் தான் நமக்கு ரொம்ப நாசத்தை உண்டு பண்றார் அப்படின்னு ஹனுமார் மேல அம்பாக போடறான். அப்போ ராமருக்கு “என்னடா இது! அம்பு மழை பொழியறது. நம்ம மேல ஒண்ணுமே விழலயே” ன்னு பாத்தா அங்க எல்லாம் ஹனுமார் மேல பட்டு அவர் மேலேந்து ரத்தமா கொட்றது.

ततो रामो महातेजा रावणेन कृतव्रणम् |

दृष्ट्वा प्लवगशार्दूलं कोपस्य वशमेयुवान् ||

“ததோ ராமோ மஹாதேஜா: ராவணேன க்ருதவ்ரணம் |

திருஷ்ட்வா ப்ளவகஸார்துலம் கோபஸ்ய வஷமேயிவான் ||

ஹனுமார் இந்த மாதிரி ராவணனால் அடிபட்டு ரத்தமாயிருக்கு. ராமர் காலெல்லாம் ரத்தம். இதைப் பார்த்த உடனே, “கோபஸ்ய வஷமேயிவான்” அவர் கோபத்துக்கு ஆளாகிவிட்டார். அதாவது பகவான் வந்து காமத்தையோ, கோபத்தையோ, பயத்தையோ ஒரு காரணத்துக்கு எடுத்துண்டு அது மூலமா ஒரு அனுக்ரஹம் பண்ணுவார். சிக்ஷை கொடுக்கறது கூட ஒரு மறக்கருணை. அந்த மாதிரி கோபத்துக்கு வசமே ஆகமாட்டா. கரனோடு யுத்தம் பண்ணும்போது பதினாலாயிரம் ராக்ஷசர்களை வதம் பண்றதுக்கு கூட “ராமர் கோபத்தை வரவழைத்துக் கொண்டார். எடுத்துண்டார்” அப்படின்னு அங்க வரது. இங்கே “கோபத்துக்கு வசமானார்” அப்படின்னு வரது. ஏன்னா, பக்தனுக்கு ஒரு கஷ்டம்ன்னா பகவான் கோபத்துக்கு வசமாகி விடுகிறார்.

உடனே ராமர் பதிமூன்று அம்புகளை எடுத்து பட படன்னு ராவணன் மேலே விடறார். ஒண்ணு அவனோட தேரை உடைச்சுடறது. ஒண்ணு சாரதியை வதம் பண்றது. ஒண்ணு அவனோட வில்லை தள்ளிடறது. ஒண்ணு தலைப்பாகையை தூக்கிடறது. குதிரைகள் போயிடறது. கவசம் போயிடறது. ராவணனை நிராயுதபாணியாக ஆக்கிடறார். அடுத்த அம்பு போட்டா இராவணன் வதம் ஆகிவிடுவான். அப்படி ராமர் கோபமாக ராவணன் மேலே அம்புகளை போட்டு தன்னுடைய வீரத்தை காண்பிக்கிறார். ராவணன் முதல் தடவையாக வாழ்க்கையில் ராம பாணத்தோட சக்தியை பார்க்கிறான். அவனுக்கு உயிர்பயம் வரது. இந்த இடத்தில் ராமர் பகைவனுக்கும் அருள்வாய் என்று சொல்வது போல இந்த ஸ்லோகத்தை சொல்றார்.

கச்சானுஜானாமி ராணார்திதஸ்த்வம்

ப்ரவிஷ்ய ராத்ரிம்சரராஜ லங்காம் |

ஆஷ்வாஸ்ய நிர்யாஹி ரதி ச தன்வி

தாதா பலம் தரக்ஷ்யஸி மே ரதஸ்தஹ ||

கச்ச அனுஜானாமி – நீ போகலாம். உனக்கு நான் அனுமதி அளிக்கிறேன். ராணார்திதஸ்த்வம் – இன்னிக்கு நன்றாக யுத்தம் செய்து அடிபட்டு களைத்து இருக்கிறாய். ப்ரவிஷ்ய ராத்ரிம்சரராஜ லங்காம் – ராத்ரிம்சர: – ராக்ஷசர்கள் இரவில் சுத்துபவர்கள். இவன் அவாளோட ராஜா. லங்காம் ப்ரவிஷ்ய – மீண்டும் இலங்கைக்குள் போய் கொள். ஆஷ்வாஸ்ய நிர்யாஹி ரதி ச தன்வி – களைப்பை போக்கிக் கொண்டு ஒரு தேரையும் வில் அம்புகளையும் எடுத்துக் கொண்டு மீண்டும் யுத்தத்துக்கு வா. தாதா பலம் தரக்ஷ்யஸி மே ரதஸ்தஹ – அப்போது என் பலத்தை நான் காண்பிக்கிறேன். இதைத்தான் கம்ப ராமயாணத்தில் 'இன்று போய் நாளை வா' ன்னு ராமர் சொன்னார் என்று வரும். அப்படி ராமர் ராவணனுக்கு உயிர்பிச்சை கொடுக்கிறார்.

அப்படி பகைவனுக்கும் அருளும் நெஞ்சம் ராமருக்கு. இந்த காட்சியை பார்க்கும் போது எனக்கு ராமருக்கு இந்த குணம் எங்கேயிருந்து வந்ததுன்னா அவா அம்மா கௌசல்யா தேவி கிட்ட இருந்து வந்ததுனு தோன்றுகிறது.

அது என்னன்னா பரதனும், சத்ருக்னனும் தசரதர் காலமான பின் அயோத்திக்கு திரும்பி வரா. வந்த போது இந்த மாதிரி ராமரை காட்டுக்கு அனுபிச்சுட்டா, தசரதர் காலமாயிட்டார் என்றெல்லாம் கேட்ட போது அவாளுக்கு ரொம்ப வருத்தம் ஏற்படறது. அப்போ அங்க அந்த மந்தரை நிறைய நகை எல்லாம் போட்டுண்டு வரா. அப்போ காவலர்கள் அவளை பரதன், சத்ருக்னன் கிட்ட பிடிச்சுண்டு வந்து, "இவள் தான் உங்களுடைய தகப்பனார் காலமானதுக்கும் ராமர் காட்டுக்குப் போனதுக்கும் காரணம்", அப்படீன்னு சொல்றா. அவளை பார்த்தா ஒரு வானரம் நகைகளைப் போட்டுண்டு வந்த மாதிரி இருக்குங்கறார் வால்மீகி. உடனே சத்ருக்னனுக்கு கோபம் வர்றது. அவளைக் கீழ தள்ளி அடிக்கறான். அப்போ அந்த மந்தரையோட தோழிகளும் கைகேயியோட மத்த வேலைக்காரிகளும் "ஐயோ! அடுத்தது நம்மளை அடிக்கப் போறா" ன்னு, பயந்துண்டு அவாள்லாம் "நேர நாம போய் கௌசல்யா தேவியை சரணடைவோம். அவள் தான் எதிரிக்கும் அருள் பண்ணுபவள்" அப்படீன்னு சொல்றா. அப்பேற்பட்ட அந்த கௌசல்யா தேவியோட பிள்ளை ராமர். அதனால பகைவருக்கும் அருளும் நெஞ்சம் ராமருக்கு.

அந்த மாதிரி மந்தரையை சத்ருக்னன் கொன்னுண்டு இருக்கான் என்று கேள்விப் பட்ட உடனே கைகேயி வந்து பரதன் கிட்ட வேண்டிக்கறா. அப்ப பரதன் சத்ருக்னன்கிட்ட, "போனா போகட்டும். அவளை விட்டுடு. எனக்கு

இருக்கற கோபத்துல இந்த கைகேயியை கூட வதம் பண்ணுவேன். ஆனா ராமர் அப்புறம் என்னை பார்க்கவே மாட்டார். பேசவும் மாட்டார். இந்த மந்தரையை அடிச்சோம்னு தெரிஞ்சா கூட கோச்சுப்பார். அதனால அவளை நீ விட்டுடு", அப்படீன்னு சொல்றான். சரின்னு அந்த சத்ருக்னன் மந்தரையை விட்டுடறான்.

அப்படி ராவணனை உயிரோட விடறார். அப்படி உயிரோட விட்டதால என்னாச்சுன்னா மத்த குண்டர்கள், கும்பகர்ணன், இந்திரஜித், மத்த அசத்துகள், எல்லாமும் வந்து உயிரை விடறா. இராவணன் குலமே பூண்டோட அழியறது. அதுக்காக தானே பகவானோட அவதாரம்.

இராவணன் தோத்து இலங்கைக்கு திரும்பி போறான். புலம்பறான். "இப்படி ஆயிடுத்தே! இப்படி ஆயிடுத்தே! ஒரு மனுஷன் கிட்ட தோத்துப் போயிட்டேனே", அப்படீன்னு கலங்கறான். அப்புறம் "கும்பகர்ணனை, எழுப்புங்கோ. கும்பகர்ணன் இருக்கும் போது எனக்கு கவலை இல்லை" அப்படீங்கறான். கும்பகர்ணனை எழுப்பறதுங்கிறது ராமாயணத்துல ஒரு நகைச்சுவையான காட்சி. அதை இன்னொரு நாளைக்குச் சொல்றேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம

<u>மீளாஅடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே</u>

இன்னிக்கி வால்மீகி ராமாயணத்துல அயோத்யாகாண்டம் அம்பத்தி ரெண்டாவது ஸர்கத்துல ஒரு ஸ்லோகம்

यदि मे याचमानस्य त्यागमेव करिष्यसि ।

सरथोऽग्निं प्रवेक्ष्यामि त्यक्तमात्र इह त्वया ।।

யதி மே யாசமானஸ்ய த்யாகமேவ கரிஷ்யஸி |

ஸரதோக்னிம் பிரவேக்ஷ்யாமி த்யக்தமாத்ர இஹ த்யா ||

அப்படின்னு சுமந்திரர் ராமர் கிட்ட சொல்றார், இன்னிக்கி எங்க கபாலீஸ்வரர் கோவில்ல தேரோட்டம், அதனால இந்த சுமந்திரர்ங்கிற தேரோட்டிய பத்தி பேசறேன்.

சுமந்திரர்ங்கிறவர் தசரதரோட மந்த்ரி. தசரதர் வயசு அவருக்கு, தசரதருக்கு நண்பர், அவர் “ரிஷ்யஸ்ருங்கரை கொண்டு யாகம் பண்ணா, உங்களுக்கு குழந்தைகள் பிறப்பான்னு ஸனத்குமார யோகி சொன்னார்”, அப்படின்னு ரிஷ்யஸ்ருங்கரை வரவழைச்சு, அஸ்வமேத யாகத்துக்கு எல்லா ஏற்பாடெல்லாம் பன்றார், அப்படி அவர் கூடவே இருந்து ராமர் பிறந்ததுலேர்ந்து எல்லாம் பாத்துண்டு இருக்கார்.

அன்னிக்கு தசரதர் ராம பாட்டாபிஷேகம்னு தீர்மானம் பண்ணின அன்னிக்கு, சுமந்திரர் போய் தசரதரை நல்ல வார்த்தைகள் சொல்லி எழுப்புறார், கைகேயி “நீ போய் ராமனை அழைச்சிண்டு வா”னு சொன்ன உடனே, ராமனை வந்து பாக்கறார், ராமர் சீதாதேவியோட இருக்கற அழகை பார்த்து, ரொம்ப சந்தோஷபட்டு, ராமனை தேர்ல அழைச்சினு போறார், அங்க கைகேயி அரண்மனைக்குள்ள போறவரைக்கும் அவருக்கு விஷயம் தெரியாது.

அவர் காத்தால தசரதரை எழுப்ப வரும்போது, late ஆயிடுத்து, தசரதர் வெளில வரலை. வாசல்ல எல்லா ராஜாக்களும் நிக்கறா, வசிஷ்டர் வந்துட்டார், முன்னாடி நாள் சொன்னமாதிரி எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சு, புண்ணிய தீர்த்தங்கள் எல்லாம் வந்தாச்சு, கன்யா பெண்கள், சுமங்கலிகள், சிம்மாசனம் அப்படின்னு யார் யார் எல்லாம் அபிஷேகம் பண்ணணுமோ, யார் யார் எல்லாம் அங்க வரணுமா எல்லாரும் அங்க வந்துட்டா. நகரமே கோலாஹலமா இருக்கு. தசரதர் வெளியில வரலை. சுமந்திரரும் அதே சந்தோஷ களிப்பிலேயே இருக்கார். அதே சந்தோஷ களிப்பிலேயே போய், ராமரை போய் அழைச்சிண்டு வறார். கைகேயி அரண்மனைக்குள்ள ராமர் போகற வரைக்கும் அவருக்கு விஷயமே தெரியாது. ராமர் உள்ள போய் “கைகேயி வரங்கள் கேட்டதை, அதை வந்து அவ ராமர் கிட்ட சொல்றா. அதை வந்து ராமர் “அப்படியே ஆகட்டும்”னு சொல்லிட்டு, கொஞ்சம்கூட முகம் வாடாமல் வெளியே வரார்.

“இரவில் சந்திரன் எப்படி பிரகாசிக்குமோ அதைபோல் ராமனின் முகம் பிரகாசித்தது” அப்படின்னு வரது. ராஜ்யம்னு சொன்னபோதும் சரி, உனக்கு பதினாலு வருஷம் வனவாசம்ன்னு சொன்னப் போதும் ஒரே மாதிரி அந்த முகம் பிரகாசித்தது. இரவில் சந்திரன் போலங்கிறது இன்னும் அழகு. ஏன்னா, கஷ்டகாலம் வரும்போது அது அவரை பாதிக்கவில்லை என்று அர்த்தம். நாம

தர்மத்தை followபண்ண போறோம், அப்பா பேச்சை கேட்கப்போறம் அப்படிங்கிற த்ருப்திதான் அவர் முகத்துல இருந்ததே தவிர, காட்டுக்குப் போய் கஷ்டப்பட போறோம்ங்கிற வருத்தம் இல்லை, அதுனால இருட்டுல சந்திரன்கிறது ரொம்ப அழகா இருக்கு, தாமரை போல வாடாத முகம்னு அப்படின்னு கம்பராமாயணத்துல வர்றது, அதைவிட இந்த உவமை ரொம்ப அழகா இருக்கு.

ராமர் வெளியில வரார் அப்பறம்தான், அந்த நியூஸ், கொஞ்சம் கொஞ்சமா leak ஆகறது, அந்த கைகேயி அரண்மனைல இருக்க மத்த மனைவிகள் எல்லாம் அதை தெரிஞ்சிண்டு, புலம்பி அழறா, எங்க ராமன் காட்டுக்கு போறவனா அப்படின்னு. அப்ப தான் சுமந்த்ரருக்கு தெரியறது. அப்ப தான் அவருக்கு ரொம்ப வருத்தமும் கோபமும் ஏற்படறது, தசரதர் மேலயே கோபம் ஏற்பட்றது. ராமர் குடை, தேர் வேண்டாம்ன்னு சொல்லிடறார். பட்டாபிஷேகம் பண்றதுக்கு ஏற்பாடு பண்ணிண புண்ய தீர்த்தங்கள், அதெல்லாம் ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணிண்டு, நேரா வந்து முதல்ல கௌசல்யா தேவியை சமாதான படுத்தறார். அது ஒரு ரொம்ப அழகான அஞ்சு ஸர்கங்கள், அப்பறம் சீதாதேவிய, நீ இங்கயே அம்மா அப்பாவோட இருந்து, அவாளுக்கு ஸுஷ்ரூஷை பண்ணிண்டு இருன்னு சொல்லப் பாக்கறார், ஆனா சீதாதேவி “இல்லை, என்னோட இடம், காட்டில உங்க பக்கத்துல தான்”,னு ராமரை அவ convince பண்ணி கூட கிளம்பறா.

ராமரும், சீதாதேவியும் லட்சுமண ஸ்வாமியும், லக்ஷ்மணரும் அந்த மாதிரி வேண்டிண்டு அவரும் கூட கிளம்பறார், அவாளோட சொத்துக்களெலாம் பதினாலு வருஷம்ங்கிறது எவ்வளோ பெரிய காலம், அதனால ராமரும், சீதாதேவியும் அவளோட சொத்துக்களெல்லாம் முனிவர்களுக்கும், அங்க வேலை பண்றவாளுக்கும் எல்லாருக்கும் கொடுத்துட்டு, வெறும் கையோட, தசரதர் கிட்ட உத்தரவு வாங்கிக்கறதுக்கு வரா. அப்போ இந்த சுமந்திரர் உள்ள போய் சொல்றார் “சூரியனிடத்தில் கதிர்கள் போல, எல்லா ராஜ குணங்களும் பொருந்தியிருக்கும் ராமன், காட்டுக்கு கிளம்ப உத்தரவு வாங்க வந்திருக்கான்”, அப்படின்னு சொல்றார், அதவாது, இப்பேற்பட்ட குழந்தையை போய் காட்டுக்கு அனுப்பறேளே அப்படின்னு சொல்றார்.

அப்போ, தசரதர் பாக்கறார், இவ்வளோ நமக்கு நெருங்கின சுமந்திரரே நம்மளை ஸந்தேஹ படறார், இன்னும் எல்லாரும் எவ்வளோ ஸந்தேஹ படுவாளோன்னு சொல்லி, சுமந்திரர் கிட்ட "நீங்க போய் என்னோட மத்த மனைவிகளை அழைச்சிண்டு வாங்கோ, தசரதருக்கு முன்னூத்தி அறுபது மனைவிகள். இந்த மூணுபேர் தவிர. அதாவது பரசுராமர் க்ஷத்ரியர்களை வதம் பண்ணனும் அப்படின்னு ஒரு முடிவு கட்டிண்டு அயோத்யைக்கு வரார். அவர் வர அன்னிக்கி தசரதர் ஒரு கல்யாணம் பண்ணிண்டுருவார். கைல கல்யாண காப்பு கட்டிண்டு இருந்தா கொல்லக் கூடாதுன்னு ஒரு சாஸ்திரம். உடனே பரசுராமர் போயிடுவார், அடுத்த நாளும் வந்தார், இப்படி அவர் வருஷம் முழுக்க வந்துண்டேஇருந்தாராம், இவர் வருஷம் முழுக்க கல்யாணம் பண்ணிண்டே இருந்தார், அதனால இவருக்கு முன்னூத்தி அறுபது மனைவிகள் அப்படின்னு கணக்கு. "அந்த எல்லா பெண்களையும் கூப்பிடு, நீங்களே இவ்வளோ ஸந்தேஹம் படும்போது, பெண்கள் எவ்வளோ ஸந்தேஹ படுவா", அப்படிங்கிற எண்ணத்துல எல்லாரையும் கூப்பிடுங்கிறார். சுமந்திரர் எல்லாரையும் அழைச்சுண்டு வரார். எல்லா பெண்களையும், அந்தபுரத்துல இருக்க தசரதர் மனைவிகளை அழைச்சுண்டு வரார். அப்பறம், இந்த ராமனை உள்ள கூப்பிடுன்னு சொல்றார். "ஹே ராம இந்த கைகேயினால், வரங்கள் என்ற பேரில் நான் வஞ்சிக்க பட்டேன். நீ என்னை சிறையில் போட்டுட்டு இந்த ராஜ்யத்தை எடுத்துண்டேன்னா நான் சந்தோஷப் படுவேன்" அப்படின்னு சொல்றார். ராமர் "அப்பா நான் அதை பண்ணவே மாட்டேன், உங்களுடைய வார்த்தை பொய்யாக நான் விடவே மாட்டேன். நீங்கள் கொடுத்த சத்தியத்தை நான் நிறைவேற்றுவேன். அதனால் எதை இழந்தாலும் ஒண்ணும் குறையில்ல. மேலும் பரதனுக்கு ராஜ்யம்ங்கிறது சந்தோஷம் தான், நீங்க வருத்தப் படாதிங்கோ" அப்படின்னு சொல்றார்.

இப்போ சுமந்திரருக்கு புரியறது, "ஆஹா தசரதருடைய தப்பில்லை இது. கைகேயி தான் பிடிவாதம் பிடிக்கிறா"ன்னு, கைகேயியை கடுமையா சுமந்திரர் கண்டிக்கிறார், அவ மஹாராணி. இருந்தாலும் இந்த சுமந்திரர்க்கு தர்மத்து பக்கத்துல பேசாம இருந்து விடக்கூடாது இல்லையா, அதனால கடுமையா அவளை கண்டிக்கிறார். "இப்படி பண்றியே நீ, உன் கணவர் எவ்வளோ பெரியவர், அவரை போய் இந்த மாதிரி வந்து ஓயாத கஷ்டத்துல ஆழ்த்தறியே,

இது ஞாயமா?” அப்படின்னு கேட்கறார். ஒரு கதையெல்லாம் சொல்றார், பல விஷயங்கள், கண்டிப்பா சொல்றார், கெஞ்சிப் பாக்கறார். கைகேயி ஒன்னும் மனஸு மாறவில்லை. அப்பறம் அந்த காட்சி எல்லாம் முடியறது.

அப்பறம் சுமந்திரர் தான் ராமலக்ஷ்மணாளா தேர்ல ஏத்திண்டு வரார். ஜனங்களெல்லாம் தேர்முன்னால வந்து தடுத்துடறா போகவிடாம. ராமர் இறங்கி நடந்தே போறார், அப்படி அந்த sceneலாம் வருது, அப்பறம் சரயு நதிக்கரைல, சரயூநதியும் வந்து ராமரை தடுத்துடறதாம், நடுவுல நதி வரது, இந்த ஜனங்களெல்லாம் மாதிரி அந்த சரயூநதியும் அவாளை தடுத்துடறது என்கிறார் வால்மீகி.

“சாயங்காலம் ஆறது. சந்தியா வந்தனம் பண்ணலாம், நீங்க குதிரை அவிழ்த்து புல்லு காட்டுங்கோ, நீங்க தூங்காம இருங்கோ, குதிரைகளை தேர்லகட்டி readyயா இருங்கோ”ன்னு ராமர் சொல்லி வெச்சியிருக்கார். எல்லாரையும் தூங்கப் பண்ணிட்டு, ராத்திரி பன்னிரண்டு மணிக்கு எழுந்து, லக்ஷ்மணன் கிட்டேயும், சுமந்திரர்ட் கிட்டேயும், சீதாதேவிகிட்டயும் சொல்றார்,

पौरा ह्यात्मकृताद्दुःखाद्विप्रमोच्या नृपात्मजैः।

न तु खल्वात्मना योज्या दुःखेन पुरवासिनः।।

பௌராஹி ஆத்மக்ருதாத் தூக்காத் விப்ரமோக்ஷ்யா நருபாத்மஜை: |

ந து கலு ஆத்மானா யோஜ்யா: துக்கேன புரவாஸின: ||

அதாவது நம்முடைய ஜனங்களை அவா ஏதாவது கஷ்டம்னு சொன்னா அதிருந்து காப்பாத்த வேண்டுமே தவிர, நம்மால் அவாளுக்கு ஒரு கஷ்டம் வரக்கூடாது” அப்படின்னு சொல்றார். இந்த மாதிரி ஒரு இளவரசன் இருந்தால் ஜஜனங்களுக்கு அவன் மேலே ப்ரியம் ஏற்படாமல் எப்படி இருக்கும்? இப்படி பேசும் ராமன் தர்மமே ஒரு வடிவமாக தெரிகிறான் என்கிறார் வால்மீகி. ஏன்னா இவா எல்லாரும் காட்டுக்கு வந்து ராமரோடு தான் இருப்போம் அப்படின்னு இந்த ஜனங்கள் எல்லாம் மரத்தடியில் கல்லிலும் முள்ளிலும் படுத்துண்டு இருக்கா. இவா விட்டுட்டு திரும்பி போக மாட்டான்னு ராமருக்கு தெரியும். ஆனா அது தப்பு என்கிறார். என்னால் இவா கஷ்டப் படக்கூடாது. இவாளுக்கு கஷ்டம் என்றால் சரிசெய்ய வேண்டிய பொறுப்பில் நான் இருக்கேன். என்னால் இவா இப்படி காட்டுக்கு வந்து கஷ்டப் படறது நியாயமா? என்கிறார்.

ஒருபெரிய நன்மை ஏற்படுமானால் ஒரு பொய் சொன்னால் தப்பு இல்லை என்று வள்ளுவர் சொன்னது போல, ராமர் சுமந்திரர் கிட்ட "நீங்க இந்த தேரை அயோத்தி பக்கமாக கொஞ்சம் தூரம் ஓட்டிட்டு வாங்கோ" என்கிறார். அப்படி அந்த தேர் தடங்கள் அயோத்தி பக்கம் போகிற மாதிரி பண்ணிட்டு, அப்பறம் தேரில் ராமரும், லக்ஷ்மணரும் சீதாதேவியும் மூன்று பேரும் ஏறிக்கொண்டு சரயு நதியை தாண்டி காட்டுக்குள்ள போயிடறா.

அடுத்த நாள் ஜனங்கள் எல்லாம் எழுந்து பார்த்து, தூக்கத்தை நொந்துக்கறா. தேடும் போது, தேர் அயோத்திக்கு போயிருக்கு என்று நினைத்து அயோத்தி பக்கம் வந்து அயோத்தி வந்து சேர்ந்துடரா. அவளோட மனைவிகள் எல்லாம், "என்ன இருக்குனு இங்க திரும்பி வந்தேள்? வாங்கோ சீக்கரம் அவாளோடவே போய் சேர்ந்துப்போம். எங்களை, சீதாதேவி காப்பாத்துவா. உங்களை, ராமர், காப்பாத்துவார். நாம அவனோட போயி இருப்போம். இங்க பரதன், கிட்ட எப்படி வாழ முடியும்?" அப்படினு, சொல்றா.

இதெல்லாம் முடிஞ்சு ராமர் குஹனை போய் பாக்கறார். உயிர்த்தோழனான, குஹனை பார்த்தவுடன் எழுந்து போய், கட்டி அணைச்சு, அன்பு பாராட்டறார். அது ஒரு, காட்சி. அப்புறம், கங்கையை, கடந்து போறா. ஜடாமுடி எல்லாம் போட்டுண்டு, "நாங்க கங்கையை கடந்து போறோம். ஒரு படகை ஏற்பாடு பண்ணு"ன்ன உடனே, குஹன், ஒரு படகை ஏற்பாடு பண்ணி கொடுக்கறான். அவன் அவாளை கொண்டு போய் காட்டுல விடலை. பின்னாடி, பரதன் வந்து, ராமனை அழைச்சுண்டு வரலாம்ங்கிற போது, குஹன் "நானும் வரேன்"னு கிளம்பினான். இப்ப, காட்டுல கொண்டு போய் விடறதுக்கு, வேற ஒரு படகோட்டியை ஏற்பாடு பண்றான்.

இந்த கங்கையை, தாண்டறதுக்கு, முன்னாடி, ராமர் சுமந்திரரை பார்த்து, "சுமந்திரரே, நீங்க பண்ண உதவிகள் எல்லாம் நினைக்கறோம். எங்களோட குலத்துக்கே, நீங்க ஒரு பெரிய துணையா இருக்கேள்." அப்படீன்னு, சொல்லிட்டு, "நீங்க திரும்பி அயோத்திக்கு போயிட்டு வாங்கோ", அப்படீன்னு, சொல்ற இடத்துல, சுமந்திரர் சொல்றார். "ஹே ராமா, என்னையும் நீ திரும்பி போகச் சொல்றயா, நானும், இந்த தேரும், இந்த குதிரைகளும், உனக்கு, சேவை

பண்றோம், எங்களுக்கு, நல்ல கதி கிடைக்கும், அப்படீங்கறார். அப்படி ராமர்கிட்ட பக்தியா இருக்கார், சுமந்திரர்.

इमे चापि हया वीर यदि ते वनवासिनः। परिचर्यां करिष्यन्ति प्राप्स्यन्ति परमां गतिम्।।

இமே சாபி ஹயாஹா வீர எதி தே வனவாஸின: |

பரிசர்யாம் கரிஷ்யந்தி ப்ராப்ஸ்யந்தி பரமாம் கதிம் ||

ஹயாஹா, இந்த குதிரைகள் கூட பரமாம் கதிம் ப்ரப்ஸ்யந்தி – உயர்ந்த கதியை, மோக்ஷத்தை அடையும். உனக்கு, சிஸ்ருஷை பண்ணா.

तव शुश्रूषणं मूर्ध्ना करिष्यामि वने वसन् । अयोध्यां देवलोकं वा सर्वथा प्रजहाम्यहम्।।

தவ சுஸ்ரூஷணம் மூர்த்னா கரிஷ்யாமி வனே வஸன் |

அயோத்யாம் தேவலோகம் வா சர்வதா பிரஜஹாம்யஹம் ||

“எனக்கு அயோத்தியோ, தேவலோகமோ, வேண்டாம். எனக்கு, உன்னுடைய சேவைதான், வேணும். நான் உன்னோட வரேன்”. அப்படீன்னு சொல்றார். அப்போ, அந்த இடத்துல, இந்த ஸ்லோகம் வர்றது. “ யதி மே யாசமானஸ்ய” நான், எவ்வளோ, தூரம் உன்னை வேண்டி கேட்கறேன், “தியாகமேவ கரிஷ்யஸி” நீ என்னை, கைவிட்டேயானால், ஸரத: அக்னிம் பிரவேக்ஷ்யாமி – இந்த ரதத்தோட, நான், ஒரு அக்னி மூட்டி, அதுக்குள்ள, போயிடுவேன், இங்க என்னை, கைவிட்டேயானால், அக்னிகுள்ள, விழுந்துடப் போறேன்னு சொல்றார்.

அப்படி, பர்த்ருவத்சல: ன்னு, ஒரு வார்த்தை. தன்னுடைய எஜமானன்கிட்ட, அவ்வளோ பக்தி. ராமருக்கு, ப்ருத்யவத்சல:. தன்கிட்ட, வேலை பார்க்கறவாகிட்ட அவ்வளோ, அன்பா இருக்கறவன் ராமன், அப்படீன்னு, ஒருத்தர் ஒருத்தர் அட்ரஸ் பண்ணிக்கற அந்த வார்த்தையே அழகா இருக்கு.

அந்த மாதிரி, “என்னை கை விடாதே”ன்னு, கேட்கறார். அப்போ, ராமர், சொல்றார், “இல்ல, நான், உங்களை கைவிடுவேனா! நீங்க திரும்பி போய், ராமனை, நான் காட்டுல விட்டுட்டேன். அவன் கங்கையை தாண்டி போயிட்டான். அப்படீன்னு கைகேயி காது பட தசரதர்கிட்ட சொன்னாதான், அவா அப்பாவை நிம்மதியா விடுவா.மேலும், பரதன் வருவான். அவனுக்கு,

துணையா இருங்கோ. அவனுக்கு பண்ணினா எனக்கு பண்ணின மாதிரி இல்லையா"ன்னு, ராமர் அவ்வளோ தூரம், அன்பு வார்த்தைகள் பேசி, அவரை, சமாதானப் படுத்தி, திருப்பி அனுப்பறார்.

சுமந்திரரும்,குஹனும், அந்த கங்கை கரையில, நாலு நாள் wait பண்றா. எங்கேயாவது, ராமன் திரும்பி வருவாரான்னு. அப்புறம், சுமந்திரர் அயோத்தி திரும்பி வரார். தசரதர் கிட்ட சொல்றார். அதெல்லாம், விரிவா போயிடும்.

அப்படி, அந்த பர்த்ருவத்சல: ன்னு, அப்படீன்னு தன்னோட எஜமானகிட்ட, அவ்வளோ பக்தியா இருக்கார். அந்த மாதிரி நமக்கு, குரு, ஒரு வழி காண்பிச்சார்னா அதுலயே நாம த்ருடமா இருக்கணும், அப்படீன்னு, எனக்கு இங்கே இதைச் சொல்லணும்னு தோன்றது. ஏன்னா, என்கிட்ட பழகறவா எல்லாம், இந்த காலத்துல, ஏதாவது ஒரு corporate சாமியார்கிட்ட போறா. அவா overnight ல ஞானத்தை கொடுதுடறேன் என்கிறா. ஏதோ, அந்த முத்திரை, இந்த யோகம். அதாவது, நாலு யுகம் சத்யுகம் அல்லது கிருதயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம், அப்படீன்னு சொல்வா இல்லையா. அதுல முதல் யுகத்துல வந்து, இந்த meditation, இந்த தியானம் பண்ணி, பகவானை அடையலாம். இந்த ரெண்டாவது யுகத்துல யாகம் பண்ணி, பகவானை அடையலாம். மூணாவது யுகத்துல பூஜைகள் பண்ணி, பகவானை அடையலாம். இந்த கலியுகத்துல, பகவானோட நாமத்தையும், ஸ்தோத்திரத்தையும் சொல்லி, பகவானை அடையலாம். அப்படீன்னு ஸ்வாமிகள் பாகவதத்துல இருக்கறதை சொல்வார். அதுல தான் எனக்கு நம்பிக்கை. அவர் அந்த வழியில போய், அவர் பகவானை பார்த்தார் அப்படீங்கிறதும் என்னோட நம்பிக்கை. பெரியவாள்லாம் "விமானம், அவர் வைகுண்டம் போவார்", அப்படீன்னு, சொன்னா.

அதனால, வேற ஒரு method ஐ பத்தி என்கிட்ட சொன்னாலோ, அவர் யாகம் பண்றார், பெரிய தீக்ஷிதர், இல்ல இவர் கோயில் கட்டறார். இல்ல இவர் இவா வந்து, ரொம்ப ஆடம்பர பூஜைகள் பண்றா. அப்படீனெல்லாம், சொன்னா எனக்கு, "ஆஹா, ரொம்ப நல்ல காரியம்", அப்படீன்னு சொல்லத் தோணறதே ஒழிய, அதை follow பண்ணனும்னு எனக்கு தோண மாட்டேங்கறது.

ஸ்வாமிகள், சொன்ன சஹஸ்ரநாம பாராயணம், ராமாயணம், ஸ்தோத்திர பாராயணம், இதுதான், safe, correct அப்படீன்னு எனக்கு தோன்றது. அந்த மாதிரி, நமக்கு ஒரு குரு காண்பிச்ச வழி. அந்த வழியில போறது, loyalty, அப்படீங்கிறது, இந்த சுமந்திரரோட ராம பக்தியை பார்க்கும் போது ஞாபகம் வரது.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

<u>தந்தது உந்தன்னை கொண்டது என்தன்னை</u>



இன்னிக்கு அறுபத்துமூவர் உத்சவம், நாயன்மார்கள் பக்தியை பத்தியே யோசிச்சிண்டு இருந்தேன், அந்த பக்தின்னா என்ன, அப்படின்னா? நாம நம்மளுக்கு வேண்டியதை சாப்படறோம், துணி வாங்கிக்கறோம், நம்முடைய சந்தோஷத்தை தேடிண்டே இருக்கோம். அது சில சமயம் கிடைக்கறது, unsullied pleasure அப்படின்னு ஒண்ணுமில்லை. சுகம்னு ஒண்ணு பின்னாடி போனா, அதுக்கு இடைஞ்சல் ஒண்ணு வரது, அந்த சுகத்தை கெடுக்க. ஒரு cinema பார்க்க போனோம்னா கூட இங்கேயிருந்து theater வரைக்கும் போக வேண்டியிருக்கு, car parking கிடைக்க மாட்டேங்கிறது. என்னவோ அந்த படம் நன்னா இருக்க மாட்டேங்கிறது, ஏதோ, அந்த மாதிரி, சுகம் எங்கிறது நாம நினைக்கறா மாதிரி எப்பவும் அமையறதில்லை. ரொம்ப சுகமாவே இருந்தா கூட, அது முடிஞ்சு போய்டறது, சுகம்ங்கிறது முடிஞ்சு, ஒரு வெறுமை வரது.

அப்படியில்லாம, மத்தவாட்ட ஒரு அன்பு காண்பிச்சோம்னா அதுல ஒரு திருப்தி வரது, அதே வந்து மத்தவாள் கிட்ட அன்பு காண்பிகும் போது கூட, நம்ம கொழந்தைள் கிட்டேயோ, கணவன் மனைவிக்குள்ளயோ, இல்லை அப்பா அம்மா கிட்டயோ, அதுல கூட ஏதோ ஒரு கணக்கு வழக்கு இருக்கு. அப்படி

இல்லாம குணக்கடலான ஒரு பகவானானை உருவகம் பண்ணி, அந்த பகவானுக்கு அன்பு காண்பிச்சா அவருடைய அன்பை நாம் உணரமுடியும். அது, எல்லாத்தைக் காட்டிலும் த்ருப்தி, சந்தோஷத்தை கொடுக்றது, அப்படின்னு மஹான்கள் உணர்ந்து, அதுக்கு ஒரு வழியா ஒரு நித்ய பூஜை, பக்தியை develop பண்றதுக்கு, ஸ்தோத்ர பாராயணங்கள், பூஜை, நாம ஸ்னானம் பண்றோம், சாப்படறோம், அதையே பகவானுக்கு ஒரு ஸ்னானம், நைவேத்தியம், ஒரு ஷோடஷபசார பூஜை னு பண்றோம்., ஒரு மடங்களில் எல்லாம் , கோவில்களில் எல்லாம் பண்ணும் போது, சதுஷ்ஷஷ்டி உபசார பூஜை அப்படின்னு சொல்லிட்டு, அறுபத்தி ஆறு உபசாரங்கள், நிருத்யம், கீதம், வாத்யம், அப்படினு நாதஸ்வரம் வாசிக்கிறா, பாட்டு பாடறா., டான்ஸ் ஆடறா, பகவானுக்கு எல்லாக் கலைகளும் எல்லாம் அவருக்குத் தான் அர்ப்பணம் பண்ணனும், அப்படிங்கிற எண்ணத்துல சமூகமாக கூடி வந்து, பல விதமான உபசாரங்களை பகவானுக்கு பண்ணினா அதுல ஒரு சந்தோஷம் கிடைக்கறது.

அப்படி பக்திங்கறது, தன்னுடைய மனசை சுயநலத்துலேர்ந்து விடுவிச்சு கொஞ்சம் பகவனோட கார்யம் பண்றது. அதுல உயர்த்த பக்கதிங்கறது, இந்த மனுஷ்ய பாசமெல்லாம் விலகி, அந்த பகவானிடத்துல பாசத்துனால இயங்கறது. இங்க உலகத்துல வந்து ஒரு காதல் தோல்வினா தற்கொலை பண்ணிக்கிறாங்கிற மாதிரி, extremeஆக இந்த உலகத்துல பாசம் வெச்சு ஜனங்கள் behave பண்றதை நாம பார்க்கறோம், அப்படி அந்த கண்ணுக்கு தெரியாத பகவான், அந்த பக்தர்களுக்கு கண்ணுக்கு தெரியறார். அதனால அவா, அந்த பக்தியை extremeஆக அந்த பக்தியை அவா காமிக்கிறா, பகவானும் அதை ஏத்துக்கறார். அப்பேர்பட்டவர்கள் அந்த நாயன்மார்கள், ஆழ்வார்கள். அவா ஏதாவது ஒரு பெரிய த்யாகம் பண்ணியிருப்பா.



திருநீலகண்ட நாயனார்ன்னு ஒருத்தர். அவர் வந்து மண்பாண்டம் பண்றவர். ஒரு குயவர். தினமும் அவர் மண்பாண்டங்கள் பண்ணுவார். சிவனடியார்களுக்கு திரு ஓடு அப்படின்னு பிச்சை எடுக்கறதுக்கு எடுத்துண்டு போவாளே அந்த திருவோடு பண்ணி தானமா கொடுப்பார். சிவனடியார்கள் கிட்ட ரொம்ப பக்தியா இருப்பார், இவரோட மனைவியும் அதுக்கு அனுகூலமா இருந்தா. இவர் எப்பவும், அந்த சிவபெருமான் உலகத்தை காக்கிறதுக்காக ஆலகால விஷத்தை பானம் பண்ணினார், கண்டத்துல நீலமாயிடுத்து, என்ற பாகவனோட அந்த அவஸரத்துல இவருக்கு ரொம்ப ப்ரியம். அதனால திருநீலகண்டம் திருநீலகண்டம்ன்னு சொல்லிண்டே இருப்பார், ஒரு "சாப்பாடு எடுத்து வையம்மா திருநீலகண்டம்", "நன்னாயிருந்தது சாப்பாடு திருநீலகண்டம்", "நான் கிளம்பறேன் திருநீலகண்டம், களத்து மேட்டுக்கு போறேன் திருநீலகண்டம்", திருநீலகண்டம் திருநீலகண்டம்ன்னு அந்த பாகவனோட நாமத்தை சொல்லிண்டே இருப்பார். அதனால அவரோட இயற் பெயரையே மறந்து, எல்லாரும் அவரை திருநீலகண்டம்னே கூப்படறா. இவருக்கு ஏதோ ஒரு நாள் சபலத்துல, ஒரு வேசி வீட்டுக்கு போய்ட்டு வந்துடறார், இது அவர் மனைவிக்கு தெரிஞ்சுடறது, அவர் மனைவி சொல்றா "திருநீலகண்டத்து மீது ஆணை, இனிமேல் நீங்கள் என்னை தொடக் கூடாது" "ஹா சரிமா"ன்னு சொல்லிடறார். அதுலேர்ந்து அவர் அந்த இளமமையையே

துறந்துடறார், திருநீலகண்டத்து மீது ஆணை வெச்சதுனால இளமமையையே துறந்துடறார்.

ரெண்டு பேருக்கும் வயசாயிடறது, குழந்தைகள் இல்லை. இவருக்கு அறுபது வயஸு ஆகும் போது, பகவான் இவாளோட பக்தியை உலகத்துக்கு காண்பிக்கறதுக்காக, ஒரு சிவனடியாராட்டும் வரார். சிவனடியார்களுக்கு பூஜை பண்ணிண்டு இருக்கா, இவாளுக்கு ஒண்ணும் குறைவில்லை. சிவ பக்தி பண்ணிண்டு, சிவனடியார்களுக்கு பூஜை பண்ணிண்டு, மண்பாண்டம் பண்ணிண்டு, வித்துண்டு காலத்தை தள்ளிண்டு இருக்கா. சிவனடியார் வரார், இவா பூஜை பண்ணறா, அவருக்கு சாப்பாடு போடறோம் னு சொல்றா. அவர் சொல்றார் "என்கிட்ட இந்த திருவோடு இருக்கு, இது எனக்கு சாக்ஷாத் பரமேச்வரனே கொடுத்தது, இதை நீ பத்திரமா வெச்சுக்கோ. நான் ஸ்னானம் பண்ணிட்டு வரேன்" அப்படிங்கறார். சரின்னு நாயனாரும் அதை வாங்கி வெச்சுக்கறார், ரொம்பவே பாத்திரமா ஜாக்கிரதையா வைக்கறார்.

சிவனடியார் போய் ஸ்னானம் பண்ணிட்டு வரார். "என் திருவோட்டை கொடு"ங்கறார். போய் பாத்தா அங்க காணோம். வந்து இருக்கறது பகவான், அதனால அங்க போய் பார்த்தா அந்த திருவோட்டை காணும்.

"சுவாமி அதைக் காணுமே, அதை காணுமே! நான் ரொம்ப ஜாக்கிரதையா வெச்சிருந்தேனே, அதுக்கு பதிலா உங்களுக்கு இன்னொரு திருவோடு பண்ணித் தரேன்",

"அதெல்லாம் நடக்காது, நீ என்ன! எத்தனை வாட்டி நான் சொன்னேன்! ஜாக்கிரதையாயிருன்னு, நீ தொலைச்சிட்டியே", அப்டிங்கறார் பகவான்.

"அப்படியில்லை நான் என்ன வேணும்னா பண்றேன். தங்க திருவோடு.கூட பண்ணித்தரேன், எனக்கு என்ன பண்ணனும்னு நீங்க சொல்லுங்கோ",

"இந்த பேச்செல்லாம் நடக்காது நீ பொய் சொல்கிறாய்" அப்டிங்கறார்,

“நான் பொய் சொல்லவில்லை சுவாமி! பாத்திரமா வெச்சுருந்தேன், அந்த அறையே பூட்டி வெச்சிருந்தேன், எங்க போச்சுன்னு தெரியலையே” அப்படின்ன உடனே,

“நீ உன் மனைவி கையை பிடிச்சுண்டு குளத்துல முங்கி சத்யம் பண்ணிணா தான் நான் நம்புவேன்” அப்படிங்கறார் பகவான்.

“சரி ஸ்வாமி”ங்கறர் திருநீலகண்டர்.,

ரெண்டுபேரும் குளத்தங்கரைக்கு போறா, இவர் மனைவி கையை தொட மாட்டேங்கிறதுனால, ஒரு கம்போட ரெண்டு பக்கம் ரெண்டு பேரும் பிடிச்சுண்டு தண்ணிக்குள்ள இறங்கறேங்கறா. “என்னத்துக்கு இப்படி”ன உடனே, கதையை சொல்றார், “இந்த மாதிரி இவ சத்யம் சொன்னா. அதனால நான் இவளை தொடறது இல்லை”, அப்டிங்கறார், “சரி”ன்னு சொல்றார் பகவான்.

ரெண்டு பேரும் தண்ணிக்குள்ள இறங்கி, வெளியில வரும்போது இருபத்தியஞ்சு வயசா வரா, அப்படி பகவான் ஒரு திருவிளையாடல் பண்ணுகிறார். இது திருநீலகண்டர் கதை.

அப்பூதி அடிகள்னு ஒரு பெரியவர், அவருக்கு திருநாவுக்கரசரை, பகவான் எப்படி கல்தூணில் கட்டி கடலில் போட்டாலும் காப்பாத்தினார், சுண்ணாம்பு காளவாய்ல இருந்து காப்பாத்தினார், என்பதைக் கேட்டு அப்பூதி அடிகளுக்கு திருநாவுக்கரசர் மேல ஒரு பக்தி. அதுனால அவர் அந்த திங்களூரில் எங்கே பார்த்தாலும் திருநாவுக்கரசர் பேரால் எல்லா தருமங்களும் பண்ணுகிறார். திருநாவுக்கரசர் பசு மடம், திருநாவுக்கரசர் அன்னசத்திரம், திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல், இப்படி எல்லாம் திருநாவுக்கரசர் பேரால பண்ணிண்டு இருக்கார். தன்னுடைய மூத்த பிள்ளைக்கு மூத்த திருநாவுக்கரசர் னு பேர் வெச்சு இருக்கார். இளைய பிள்ளைக்கு இளைய திருநாவுக்கரசர் னு பேர் வெச்சு இருக்கார். அப்படி திருநாவுக்கரசர் மேலே அவருக்கு பக்தி.

திருநாவுக்கரசரே அந்த ஊருக்கு வரார். அவர் இதையெல்லாம் பார்க்கிறார். “என்ன இது! யார் இப்படி செய்கிறார்கள்?” என்று கேட்ட உடன் அப்பூதி அடிகளைப் பத்தி சொல்றா. திருநாவுக்கரசர் மேலே அவருக்கு பக்தி னு சொல்றா. அப்பர் அவரைத் தேடி போகிறார். அப்பூதி அடிகள் ஒரு சிவனடியார் வந்திருக்கார் என்று அவரை வரவேற்று அவருடைய கைகால்களை கழுவி, அவருக்கு பாத பூஜை பண்ணி, அவரை அமர்த்தின உடன் திருநாவுக்கரசர் கேட்கிறார் “என்ன இந்த ஊரில் எல்லா புண்ய கார்யங்களுக்கும் திருநாவுக்கரசு என்று பேரிட்டு இருக்கிறார்கள்? யார்இப்படி செய்கிறார்கள்? என்று கேட்கிறார்?” அப்போது அப்பூதி அடிகள் “நான் தான் சுவாமி அப்படி செய்து வருகிறேன்” என்கிறார். அப்போ திருநாவுக்கரசர் “ஏன் உங்க பேரை வைக்காம யாரோ ஒருத்தர் பேரை வெச்சிருக்கேள்?”, அப்படீன்னு, திருநாவுக்கரசர் கேட்கறார். அந்த அப்பூதியடிகளுக்கு, கடுங்கோபம் வந்துடறது. “என்ன உம்மைப் பார்த்தா ஏதோ சிவனடியார்னு நினைச்சு உங்களை கூப்பிட்டு வெச்சு, பூஜை பண்ணிணேன். திருநாவுக்கரசரை தெரியாம இருக்கேளே”, அப்படீன்னு, கோவிச்சுக்கிறார். “பகவானே, அவரை ஆட்கொண்டு காப்பாத்தினார். அவர், பகவானோட உத்தம பக்தர். அவர் பேரை தெரியாம, இருக்கேளே”, அப்படீன்னு சொன்ன திருநாவுக்கரசர் நடுங்கறார். உடனே கைகூப்பி, “உங்கள் அன்புக்கு பாத்திரமான அந்த திருநாவுக்கரசு நான் தான்”,

அப்படீன்ன உடனே, மன்னிச்சுக்கோங்கோன்னு கன்னத்துல போட்டுண்டு, எல்லாருமாக அவரை நமஸ்காரம், பண்றா. நாலு பேருமாக.

நீங்கள் இன்று இங்கு அமுது படைக்கணும்ன உடனே, சரின்னு, சொல்றார். அப்போ, “பின்னாடி, போயி, நீ வாழை இல்லை, பறிச்சுசுண்டு வா”ன்னு, மூத்த திருநாவுக்கரசை, அனுப்பறார். போனா அந்த பையனை, பாம்பு தீண்டிடறது. அங்க அவன், மரிச்சு விழுந்துடறான். இவா ரெண்டு பெரும், அம்மா, அப்பா, போயி பாக்கறா. பிள்ளை வரலையேன்னு, அந்த குழந்தை, இப்படி, இருக்கான்ன உடனே, வாழை இலையில அவனை மூடி வெச்சுட்டு, அப்பர் சாப்பிடாம போயிடப் போறாரேன்னு, இவருக்கு, அமுது படைக்கறா. குழந்தை, எங்கேன்னு, கேட்கறார், இவர். “சுவாமி அவன் வர முடியாத நிலமையில இருக்கான்”னு, சொல்றா. “நீ அவனை கூப்பிடு”, அப்படீன்னு உடனே, உண்மையை, சொல்லிடறா. அது மாதிரி, பக்தின்னா, இந்த அடியவருக்கு, அமுது படைக்கணும், இது தட்டி போகக் கூடாதுன்னு,நினைக்கறா, பாருங்கோ. அதுதான், உத்தம பக்தி. “ஆன்னு, திருநாவுக்கரசர் பரமேஸ்வரன் மேல ஒரு பதிகம் பாடறார். அந்த குழந்தை, உயிர்பிழைத்து திரும்பி வரான்.

இந்த மாதிரி, பக்தி வால்மீகி ராமாயணத்துல பரதனோட பக்தி. அவன் காட்டுக்குப் போறான். ராமர், காட்டுக்கு போயிருக்கார், அப்படீன்னா உடனே, எல்லாரையும் கூட்டிண்டு, காட்டுக்குப் போறான். அங்க குஹனை பார்க்கறான். குஹன் கிட்ட, கேட்கறான். “ராமர், வந்தாரா”ன்னு, “ஆமாம், இங்க வந்திருந்தார்” என்றவுடன் “ராமர், என்ன பண்ணினார்? அவர் என்ன பேசினார்? எங்க சாப்பிட்டார்? எங்க தூங்கினார்?” அப்படீன்னு, கேட்கறான். அப்போ குஹன் சொல்றான். “அவர் வந்திருந்தார். அவர் நான் கொடுத்த உணவை எல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டார்”. ராமரும், “காட்டுக்கு வந்திருக்கோம், இந்த மாதிரி, நாட்டை இழந்துட்டோம், அம்மா அப்பாவை பிரிஞ்சு வந்துட்டோம், காட்டுல கஷ்டப்பட போறோம்”, அப்படீன்னு, மனசு கொஞ்சம், சலிக்கதானே, செய்யும். அதுனால, அவர் என்ன பண்றார். அந்த முதல் நாளும், சரயு நதிகரையில, சாப்பிடலை. அடுத்த நாள், இங்க வந்து,

குஹனைப் பாக்கறா. அன்னிக்கும், குஹன் கிட்ட எனக்கு எதுவும் சாப்பிட வேண்டாம்ம்னு, சொல்லிடறார். பட்டினி கிடந்தால் துக்கம் தெரியாது. இன்னொன்னு, க்ஷத்ரியர்கள் பிச்சை வாங்கி சாப்பிடக் கூடாது. க்ஷத்ரியர்கள், மத்தவாளை காப்பாத்தறவா. இவருக்கு, இப்ப அந்த காப்பாத்தற பொறுப்பு இல்லை. தசரதர் தான் ராஜா. இவர் தபஸ்வியா காட்டுக்கு போறார். அதனால தன்னுடைய உணவை தானே சம்பாதிச்சுக்கணும். இந்த குஹன் கொடுக்கறதை வாங்கி சாப்பிடக் கூடாதுன்னு, சொல்லி, நீ எனக்காக, இந்த குதிரைகளுக்கு, ராஜாவோட குதிரைகளுக்கு புல்லு போடு. எனக்கு, லக்ஷ்மணன், கங்கை ஜலத்தை, கொண்டு, வருவான்" ன உடனே, கங்கை ஜலத்தை ஒரு பெரிய தொன்னை பண்ணி லக்ஷ்மணன், கொண்டு வந்து கொடுக்கறான். அதை சாப்பிட்டுட்டு, "இங்க புல்லை விரி"ங்கறார். லக்ஷ்மணன், புல் படுக்கை பண்றான். அதுல ராமரும் சீதையும், அன்னிக்கு ராத்திரி, படுத்துது தூங்கறா. இந்த விஷயங்களை, குஹன், பரதனுக்கு, சொல்றான்.

பரதன், கதறி அழுதுடறான். எங்க அண்ணா

महाभागकुलीनेन महाभागेन धीमता । जातो दशरथेनोर्व्यां न रामस्स्वप्तु मर्हति ।।

"மஹாபாக குலீலேன எவ்வளோ fortunate family இது. நாலு திக்குல இருக்கற எல்லா தேசங்களையும், கட்டி ஆண்ட மஹாராஜா. அவ்வளோ, பாக்கியவானான உயர்ந்த குலத்துல பொறந்த அந்த தசரதருக்கு, பிள்ளையா பொறந்த ராமன், உர்வியாம்-தரையில் ந ஸ்வப்துமர்ஹசி- அவன் இந்த மாதிரி, தரையில தூங்கக் கூடாது, அப்படீன்னு, சொல்றான். என்னிக்காவது, ஒருநாள் ராமரும் லக்ஷ்மணருமாவது, வேட்டையாட வந்தபோது, மரத்தடியில படுத்துண்டு, இருப்பா. சீதாதேவி இங்க வந்து, படுத்துண்டாளா? அவளுடைய அந்த துணியிலிருந்து, ஜரிகை எல்லாம், தெரியறதே, அவளுடைய தங்க நகைகளுடைய துகள்கள் எல்லாம், விழுந்திருக்கு. ஜனக மஹாராஜாவின் குமாரத்தி, ராமனுடைய பத்னி அவ. இங்க வந்து, புல்லுல படுத்துண்டாளா, கணவன் பக்கத்துல இருக்காங்கிறதுனால, அவ அதை நினைச்சிருக்கா மாட்டா. ஆனா என்னால இந்த காட்சியை, ஸஹிக்க முடியலையே, அப்படீங்கறான்.

ராமர், எப்படி தூங்கணும், அப்படீன்னு சொல்றான். எனக்கு இந்த ராமர், எப்படி சௌகரியமா தூங்கணும் அப்படீன்னு சொல்றது, ரொம்ப ரசிக்கும்படியா ரொம்ப grandஆ இருந்தது. அதாவது மேரு மலை மாதிரி ஒரு அரண்மனை. அதுல ஏழாவது மாடியில எங்க நல்ல தென்றல் காற்று வீசுமோ, அந்த மாதிரி ஒரு இடத்துல ஒரு பெரிய அறை. அந்த அறையில தரையெல்லாம், தங்கம் வேய்ஞ்சிருக்காம். அந்த தரையில காஷ்மீர கம்பளங்கள் போட்டிருக்கு. சந்தன கட்டில். அதுல ஹம்ஸ தூளிகா மஞ்சம் அப்படீன்னு, சொல்லி, நல்ல ஹம்ஸங்களுடைய இறக்கைகளை வெச்சு பண்ண ஒரு மெத்தை. அந்த மெத்தையில தூங்கணும். அயோத்தியில அப்படித்தான் தூங்குவா. கிளிகளோட சப்தங்களும், குயில்களோட சப்தங்களும்.கேட்கணும். அந்த படுக்கைக்கு நல்ல பூ மாலைகள் எல்லாம் கட்டி நல்ல அலங்காரம் பண்ணி, நல்ல சந்தனம், அகரு அப்படீன்னு நல்ல சுகந்தம் வீச, நல்ல குளிர்ச்சியா இருக்கக் கூடிய ஒரு அறையில வெண்மேகங்களைப் போல ஒரு ஒளி, ஒரு வெளிச்சம் இருக்கக் கூடிய அப்படீங்கறான். அந்த மாதிரி, ஏதோ ஏற்பாடு பண்ணி இருப்பா போல இருக்கு. அப்படி ஒளி வீசக் கூடிய அந்த அறையில ஆனந்தமா தூங்கிட்டு கார்த்தால, நல்ல வீணாவாத்யங்கள், ம்ருதங்கள்லாம் கேட்க வெச்சு, சங்கீதத்தோட எழுந்து சூத மாதக வந்திகள் எல்லாம் வந்து அவர் புகழை பாடி எழுப்பணும்.

இங்க தரையில படுக்கறதுக்கு, நான் காரணம் ஆயிட்டேனே! நான் இந்த மாதிரி, தரையில தான், இனிமே படுப்பேன். நான் தபஸ்வியா இருப்பேன். என் ராமரை அழைச்சுண்டு போயி பட்டாபிஷேகம் பண்ணுவேன், அவன் ராஜாவா இருக்கணும். அவனுக்கு, பதிலா நான் இந்த பதினாலு வருஷம் தபஸ்வியா இருப்பேன்.. இது சத்யம். என்னுடைய இந்த சத்யத்தை, தெய்வங்கள் நிறைவேத்தாதா?! அப்படீங்கறான். அந்த சத்யத்தை, தெய்வங்கள் நிறைவேத்தி கொடுத்தது அவனுக்கு, ஒரு விதமா. எப்படீன்னா, இந்த ராம பாதுகையை எடுத்துண்டு போயி பட்டாபிஷேகம் பண்ணான். ராமர் பாதுகை ராமர்தான். அதனால ராம பாதுகை ராஜாவாச்சு. அவன் தபஸ்வியா இருந்தான். ராமரைவிட கடுமையான வ்ரத நியமங்கள் எல்லாம், அனுஷ்டிச்சுண்டு, தபஸ்வியா இருந்தான். ராமர், அங்க கோதாவரில குளிக்கறார்ன்னா, இவன் இங்க மூணு மணிக்கே எழுந்து குளிர்ல போயி சரயுல குளிச்சுண்டு இருந்தான்.

இந்த ராமர், நன்னா தூங்கணும், காட்டுல வந்து, தரையில படுத்து கஷ்டப் படறாளே, கல்லுளையும், முள்ளுலயும் கஷ்டப்பட்டு தூங்கறாரேன்னு நினைச்சுண்டே இருக்கான். அவனுக்கு அது ரொம்ப உள்ள போயிருக்குங்கிறதுக்கு, ராமர், பதினாலு வருஷம் கழிச்சு திரும்பி வந்தபோது "ஹே ராமா! இந்த ராஜ்யத்தை உன்கிட்ட திரும்ப ஒப்படைச்சுடறேன் , இந்த பாரத்தை என்னால இனிமே தாங்க முடியாது", அப்படீன்னு, சொல்றபோது கூட இந்த வார்த்தையை சொல்றான்.

तूर्यसङ्घातनिर्घोषैः काञ्चीनूपुरनिस्वनैः |

मधुरैर्गीतशब्दैश्च प्रतिबुध्यस्व राघव ||

"தூர்ய சங்காத நிர்கோஷை: – நல்ல நாதஸ்வரம் போன்ற இனிமையான சங்கீதத்தை கேட்டுண்டு காஞ்சீ நூபுர நிஸ்வனை: – இடுப்புல ஒட்டியாணம், கால்ல கொலுசு போட்டு பெண்கள் எல்லாம் நடக்கக் கூடிய அந்த சப்தத்தை எல்லாம் கேட்டுண்டு மதுரை: கீதஷப்தைஸ்ச மதுரமான கீத சப்தம், நல்ல சங்கீதம், பெண்கள் நடமாடற அந்த சப்தம், இதையெல்லாம், கேட்டுண்டு ப்ரதிபுத்யஸ்வ ராகவ – நீ எழுந்துக்கணும். நீ திரும்பியும் பட்டாபிஷேகம் பண்ணிண்டு, ராஜாவாகி

यावदावर्तते चक्रन् यावती च वसुन्धरा | तावत्त्वमिह सर्वस्य स्वामित्वमनुवर्तय ||

"யாவதாவர்த்ததே சக்ரம் யாவதீ ச வசுந்தரா |

தாவத் த்வம் இஹ சர்வஸ்ய ஸ்வாமித்வம் அனுவர்த்தய ||

நீதான் எங்களுக்கெல்லாம் கால சக்கரம் இருக்கற வரைக்கும் ராஜாவா இருக்கணும், அப்படீன்னு, கேட்டுக்கறான். ராமர் "ததா" அப்படியே ஆகட்டும் அப்படீன்னு சொல்றார்.

இந்த மாதிரி பரத பக்தியை பார்த்து தான், பின்னாடி வந்தவாள்லாம் ஒரு idealஆக தெய்வமாட்டமாக ஒருத்தர் கிடைச்சா, அவாகிட்ட பக்தி பண்ணனும்கிறதை தெரிஞ்சிண்டு இருப்பா. அந்த குரு பக்தி அப்படியே தெய்வ பக்தியா வளர்ந்திருக்கும். அதுல இருந்துதான், நாயன்மார்கள் எல்லாம், வந்து, பக்தி மார்கமே உருவாகி , அவாளை கொண்டாடனும்னு நாம தெரிஞ்சுண்டு,

அறுபத்து மூவர் உத்சவம் பண்ணி கொண்டாடறோம். அதனால நமக்கும் ஒரு சொட்டு பக்தி வருமான்னு ஆசையோட.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

மன்னுபுகழ் கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே



இன்னிக்கு பௌர்ணமி சந்திரன்ல கொஞ்ச நேரம் நின்னுட்டு வந்தேன். மூகபஞ்ச சதில கடாக்ஷ சதகத்துல ஒரு ஸ்லோகம்

यावत्कटाक्षरजनीसमयागमस्ते कामाक्षि तावदचिरान्नमतां नराणाम् ।

आविर्भवत्यमृतदीधितिबिम्बमम्ब संविन्मयं हृदयपूर्वगिरीन्द्रशृङ्गे ॥

யாவத் கடாக்ஷ ரஜநீ ஸமயாகமஸ்தே

காமாக்ஷி தாவத், அசிராத் நமதாம் நராணாம் |

ஆவிர்பவதி அம்ருததீதிதி பிம்பம் அம்ப

ஸம்வின்மயம் ஹ்ருதய பூர்வ கிரீந்தர ஸ்ருங்கே ||

அம்மா காமாக்ஷி ‘யாவத்’ – எதுவரையில், ‘கடாக்ஷ ரஜநீ ஸமயாகமஸ்தே’ – உன்னுடைய கடாக்ஷம் என்கிற இரவு வேளை வருகிறதோ, அதுவரையில் ‘அசிராத்’ – இடையறாமல் ‘நமதாம் நராணாம்’ – நமஸ்காரம் பண்ணிண்டே இருக்கக் கூடிய அந்த மனிதனுடைய, ‘ ஹ்ருதய பூர்வ கிரீந்தர ஸ்ருங்கே’

மனமாகிய கிழக்கு சிகர முகட்டில், 'ஸம்வின்மயம்' ஞானம் என்கின்ற பூர்ண சந்திரன் உதயமாகும், அப்படின்னு ஒரு அழகான ஒரு ஸ்லோகம்.

யாவத் கடாக்ஷ ரஜநீ ஸமயாகமஸ்தே

காமாக்ஷி தாவத், அசிராத் நமதாம் நராணாம் |

ஆவிர்பவதி அம்ருததீதிதி பிம்பம் அம்ப

ஸம்வின்மயம் ஹ்ருதய பூர்வ கிரீந்தர ஸ்ருங்கே ||

அப்படின்னு அம்பாள் மேலே இந்த ஸ்லோகம் ஞாபகம் வந்தது. "சரி, இன்னைக்கு அம்பாள் பரமா ஏதாவது சொல்லலாம்" னு நினைச்சேன். ராமாயணத்தில் அம்பாள் னா ராமருடைய அம்மாவை பத்தி பேசுவோம் அப்படின்னு தோணித்து.

கௌசல்யா தேவியை பத்தி பேசணும்னா, quote பண்ண வேண்டிய ஸ்லோகம் வந்து,

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु।।

யம் பாலயஸி தர்மம் த்வம் திருத்யா ச நியமேன ச |

ஸவை ராகவசார்துல தர்மஸ்த்வாம் அபிரக்ஷது ||

அப்படின்னு கௌசல்யா தேவி ராமனை காட்டுக்கு அனுப்பும்போது. மங்களாசாஸனம் பண்ணறதுக்கு முன்னாடி ஒரு ஸ்லோகம் சொல்றா. எந்த தர்மத்தை நீ த்ருதியோட – ரொம்ப சந்தோஷத்தோடும், நியமத்தோடும் follow பண்றயோ, ஹே ராம ' ராகவசார்துல' என்கிறாள். 'தர்மஸ்த்வாம் அபிரக்ஷது' அந்த தர்மமே உன்னை காப்பாற்றட்டும். அதாவது ஒரு தர்மம் பண்ணிணோம்னா, அதை விரும்பி பண்ணனும், ரொம்ப sincereஆக disciplined ஆக பண்ணனும் அப்படிங்கறது தெரியறது, அந்த மாதிரி ராமர் பண்றார்.

ராமன் அந்த கைகேயி அரண்மனையில் இருந்து குடை, தேர் எல்லாம் விலக்கிட்டு கௌசல்யா தேவி கிட்ட வறார். அதுக்கு முந்தின காட்சியை கேட்டால் ரொம்பவே shockingஅ இருக்கும். ராமர் கைகேயி கிட்ட சொல்றார் "நான் பரதனை வரவழைத்து பட்டாபிஷேகம் பண்ணிட்டு, கிளம்புறேன்

அம்மா"ங்கறார். அவ சொல்றா "இல்லை, இல்லை! நீ இப்பவே இன்னிக்கே கிளம்பிடு, நான் பரதனை வரவைத்து ராஜ்யத்தை கொடுத்துகறேன், நீ கிளம்பினா தான், தசரதர் ஸ்னானம் பண்ணுவார், சாப்பிடுவார்" அப்படின்னு சொன்ன உடனே, அதாவது அவளுக்கு சந்தேஹம், எதாவது இவா எதாவது நம்மளுடைய planஐ மாத்திவிடப் போறாளோ, அப்படின்னு கைகேயிக்கு ஸந்தேஹம். மனசு அவ்வளோ மாறி போய்டுறது அவளுக்கு "ராமனுக்கும் பரதனுக்கும் நான் ஒண்ணுமே வித்யாசம் பார்க்கவில்லை, ராமனுக்கு ராஜ்யம் கிடைச்சா, பரதனுக்கு ராஜ்யம் கிடைச்சா மாதிரி தானே" அப்படின்னு சொல்றா மந்தரை கிட்ட. அப்படி சொன்னவள் , இப்போ "நீ உடனே கிளம்பு"ங்கறா.

இதை கேட்ட உடனே தசரதர் அட பாவமே! அப்படின்னு சொல்லி திக்! அப்படிங்கறார், சீ! சீ! அப்படின்னு சொல்றார். என்ன பண்ணமுடியும் அவரால? மேலும் மேலும் அவரோட வருத்தத்தை ஜாஸ்தி பண்றா இந்த கைகேயி. அப்போ ராமர் ஒரு பதில் சொல்றார்

नाहमर्थपरो देवि लोकमावस्तुमुत्सहे । विद्धिमामृषिभिस्तुल्यं केवलं धर्ममास्थितम् ।।

நாஹம் அர்த்தபரோ தேவி லோகமாவஸ்தும் உத்சஹே |

வித்தி மாம் ரிஷிபிஸ்துல்யம் கேவலம் தர்மம் ஆஸ்திதம் ||

அம்மா! எப்படியாவது பணம் சம்பாதிச்சு அதை அனுபவிக்கணும்னு நினைக்கிற ஆள் கிடையாது, நான் ரிஷிகளைப்போல தர்மத்தை முக்கியமா நினைக்கிறவன். அதனால நான் இப்பவே கிளம்பறேன்" அப்படின்னு சொல்லிட்டு, "என்னுடைய அம்மா கிட்டேயும், சீதாதேவி கிட்டேயும் சொல்லிண்டு உத்தரவு வாங்கிக்றதுக்கு ஒரு மணி நேரம் அவகாசம் கொடுங்கோ"ங்கறார். இந்த ராஜ்யமே உன்னோடதுன்னு சொன்னது போக, நீ காட்டுக்கு போன்ன போது, கொஞ்ச நேரம் இங்க இருக்க, அனுமதி கொடுங்கோ"ன்னு கேட்கறார், அப்படி சொல்லிட்டு வெளில வந்துடறார்,

கௌசல்யா தேவியோட அரண்மனைக்கு வரார். கௌசல்யா தேவி, ராமர் வந்த உடனே, தங்க பலகையை போட்டு "ராமா உட்காரு, பத்து இல்லாம ஒரு sweet பண்ணி வெச்சிருக்கேன். சாப்பிட்டு விட்டு போ, எத்தனை நேரம் ஆகுமோ.

இந்த பாட்டாபிஷேகம் முடிஞ்சு வரத்துக்கு” அப்படின்னு, அம்மா என்கிறவளுக்கு, குழந்தை சாப்பிடணும். அது மாதிரி சொல்றா. அப்போ ராமர் “அம்மா! இந்த தங்க பலகையில் உட்காருகிற காலம் மாறி போயிடுத்து. தர்பாஸனத்துல உட்கார வேண்டிய காலம் வந்திருக்கு, என்னை பெருந்தகையான தசரத மஹாராஜர், பதினான்கு வருடங்கள் காட்டுக்கு போகச் சொல்லி இருக்கார்” அப்படின்னு சொல்றார். அவ அப்படியே அடியற்ற மரம்போல மூர்ச்சை போட்டு விழுந்துடறா.

கௌசல்யா தேவி அப்பறம், எழுந்துண்டு, கதறுகிறாள். “நான் என்ன பாவம் பண்ணினேன்? இப்படி ஒரு நல்ல குழந்தையைபெற்று வளர்த்து ஆளாக்கி, அவனுக்கு ராஜ்யம்னு சொல்லிட்டு இப்படி காட்டுக்கு போன்னு சொல்றாளே, நான் என்ன பண்ணுவேன்? இந்த கைகேயி பொல்லாதவன்னு தெரிஞ்சு தான் நான் ரொம்ப ஜாக்ரதையாக, உனக்கு எதுவும் கஷ்டம் வந்துடக் கூடாதுன்னு, நான் மூத்த மனைவியாக இருந்தாலும் பணிஞ்சு போயிண்டு இருந்தேன். அவளுக்கு கௌரவத்தை குடுத்தேன். ஆனா இப்ப அந்த கஷ்டமே விடிஞ்சுடுத்தே. இந்த மாதிரி ஒரு குழந்தையைப் பெற்று எங்கேயோ காட்டுக்கு அனுப்பறதுக்கு நான் மலடியாகவே இருந்திருக்கலாமே” அப்படி பலது புலம்பறா.

அதுக்கப்பறம் அவ சொல்றா, “இல்லை. நான் உன்னை காட்டுக்கு போக அனுமதிக்க மாட்டேன். என் சக்களத்தி நினச்சதை நடத்திக்க பாக்காறா. நானும் பிடிவாதம் பிடிக்கறேன். அவ பிடிவாதம் பிடிக்கறா இல்லையா? நானும் பிடிவாதம் பிடிக்கறேன். உனக்கு காட்டுக்கு போக நான் அனுமதி தர மாட்டேன். அவ்வளவு தான். இங்கே இருந்து நீ எனக்கு கைங்கர்யம் பண்ண வேண்டும். மாத்ரு ஶுஶ்ரூஷையும் ரொம்ப முக்கியம் தானே. இங்கே இருந்துண்டு நீ எனக்கு கைங்கர்யம் பண்ணு” என்கிறாள்.

அப்போ ராமர் “அம்மா! அப்பா சத்தியத்துக்கு கட்டுப்பட்டு வேறே வழி இல்லாமல் என்னை காட்டுக்கு போகச் சொல்றார், அதனால அவர் தர்மத்தோட வழியில் தான் இருக்கார். நானும் அவர் சொன்னதை கேட்கணும்னு நினைக்கிறேன். இது வந்து நான் ஏதோ புதுமையா பண்றது இல்லை. எவ்வளோவோ மஹான்கள், அப்பா வார்த்தையை கேட்டு, கஷ்டத்தை அனுபவிச்சு, பின்னாடி நன்மையை அடைஞ்சு இருக்கா. அதுனால அப்பா

வார்த்தையை கேட்டா, கெடுதலே வராது” அப்படின்னு நிறைய கதைகள் எல்லாம் சொல்றார், “எனக்கு அனுமதி கொடும்மா”ன்னு கேட்கிறார்.

அப்போ லக்ஷ்மணர் கூட சொல்றார், “அம்மா, எனக்கும் இது கொஞ்சம்கூட பிடிக்கவே இல்லை, என்ன இது ஒருபாவமும் பண்ணாத ராமனை, எதிரிகளுக்குகூட கருணை பண்ணகூடிய ராமனை, ஒரு குற்றமும் சுமத்தாமல், பதினாலு வருஷம் காட்டுக்கு போன்னா, என்னது இது! வயசான காலத்துல புத்தி மழுங்கிப் போயி இந்த தசரத மஹாராஜா இப்படி பண்றார். வயசானாவா தர்மத்தைத் மீறி கார்யங்கள், பண்ணிணா, அவாளை, அடக்கலாம். அதனால நான், அந்த தசரதரை ஜெயில்ல போட்டுட்டு, ராமனை ராஜாவாக்கறேன். யார் வந்து தடுக்கறான்னு, பார்க்கலாம். பரதன் வரானா? அவனோட ஆட்கள் வராளான்னு, பார்க்கறேன். நான் ஒண்ணும் சும்மா இந்த தோள்களை சந்தனம் பூசிக்கறதுக்கும், கேயூரம் போட்டுக்கறதுக்கும் வளர்க்கலை. இந்த கத்தி வில்லெல்லாம் show காக வெச்சுருக்கலை. என் ராமனை காப்பாத்தறதுக்காக தான் நான் இந்த உடம்பை வளர்த்திருக்கேன். ராமர் ஒரு நெருப்புல விழணும்னு சொன்னா, அவனுக்கு முன்னாடி நான் போயி விழுவேன். அதனால இந்த ராமனை நான் இன்னிக்கு ராஜாவாக்கறேன்” அப்படீன்னு, சொல்றான்.

அப்ப ராமர், “ஹே, லக்ஷ்மணா நீ அம்மாவோட திருப்திக்காக பேசற. என் மனசை, புரிஞ்சுக்காம பேசறியே” அப்படீன்னு சொல்றா. இது வந்து, கைகேயி பண்றது இல்ல. இது தெய்வங்களோட கார்யம். இது விதி வசமா வந்துருக்கு. நேத்திக்கு, ராஜ்யம்னு சொல்லி இன்னிக்கு கூப்பிட்டு, வனவாசம்னு சொன்னா, இது கைகேயி நினைச்சு நடக்கறது இல்ல. இது விதி. இதை நாம ஏத்துக்கணும். அதை மீற முடியாது”ன்னு, சொல்றார். அப்போ, லக்ஷ்மணர் சொல்றார், “என்ன ஒரு வீரனா இருந்துண்டு விதியை நொந்துக்கறே! விதியை நான் பௌருஷத்தால் மாத்திக் காண்பிக்கறேன். எனக்கு உத்தரவு கொடு”, அப்படீங்கறார். அப்போ ராமர், சொல்றார், “எனக்கு உத்தரவு கொடுங்கிறேள்ளோல்யோ, நான் உனக்கு, தசரதரை, ஜெயில்ல போடறதுக்கு, உத்தரவு, கொடுக்க மாட்டேன். நான் அப்பா வார்த்தையை தான் கேட்கப் போறேன். காட்டுக்குத் தான், போகப் போறேன். நீயும் இதைத் தான், ஒத்துக்கப்

போறே, அப்படி இருக்கறச்சே, விதிதான், வெல்லும், அப்படீன்னு சொல்றார். அவன் என்ன பண்ணுவான், பாவம்.

அப்புறம், கௌசல்யை சொல்றா.

किं जीवितेनेह विना त्वया मे लोकेन वा किं स्वधयाऽमृतेन।

श्रेयो मुहूर्तं तव सन्निधानं ममेह कृत्स्नादपि जीवलोकात्।।

கிம் ஜீவிதேநேஹ விநா த்வயா மே லோகேந வா கிம் ஸ்வதயாமரிதேந |

ஷ்ரேயோ முஹுர்தம் தவ ஸந்நிதாநம் மமேஹ கரித்ஸ்நாதபி ஜீவலோகாத் ||

"எனக்கு, சொர்க்கலோகமும் வேண்டாம், அமிர்தமும் வேண்டாம். எனக்கு இந்த அயோத்தி வாழ்க்கையும், வேண்டாம், உன்னுடைய சந்நிதி இல்லாம எனக்கு எது தான் இனிக்கப் போறது? எனக்கு இந்த வாழ்க்கை வேண்டாம். ராமா, என்னை உன்னோட கூட்டிண்டு போ. காட்டுல ஆஸ்ரம வாசல்ல, ஒரு மானை கட்டி வைக்கறா மாதிரி, என்னை பக்கத்துல வெச்சுக்கோ. என்னை இங்க விட்டுட்டு போகாதே. இந்த கைகேயி கிட்ட" அப்படீன்னு, கேட்கறா. அப்போ, சொல்றா, "ஒரு புல்லை தின்னுண்டாவது, உன் பக்கத்துல, இருக்கேன், ராமா"ங்கறா. அப்படி அதுதான், உண்மையான பக்தி. அப்படி சொல்ற தாயார், அவள். அப்படி ராமன் கிட்ட அன்பு, வெச்சிருக்கா.

ஆனா ராமர், அதுக்கு சொல்றார். "அம்மா, கைகேயி தசரதரை கை விட்டுட்டா. அந்த மாதிரி நீயும் பண்ணலாமா? நீயல்லவா இப்ப தசரதருக்கு துணையா இருக்கணும்? அந்த வார்த்தை வாஸ்தவம்தான். தசரதர் வந்து, ராமன் காட்டுக்கு போன உடனே கீழே விழறார். கைகேயி வந்து தூக்க வரா. "என்னை தொடாதே, கைகேயி. உன்னை, தர்மத்தை கைவிட்ட உன்னை, நான் கைவிட்டேன், எனக்கு நீ மனைவி கிடையாது" அப்படீன்னு சொல்லிட்டு "என்னை கொண்டு போயி, ராமமாதா கௌசல்யா அரண்மனையில போடுங்கோ"ன்னு சொல்றார். தசரதர். அந்த மாதிரி, கௌசல்யா, ஒரு ஆறுதலா இருப்பான்னு தசரதர் நினைக்கறார். அது, ராமருக்கு, தெரிஞ்சதுனால "நீயும்

அந்த மாதிரி தசரதரை, கைவிடக் கூடாது. நீ இங்க அவர் பக்கத்துல தான் இருக்கணும். அப்படீன்னு, சொல்லி ஒரு சில ஸ்லோகங்கள் வரது,

व्रतोपवासनिरता या नारी परमोत्तमा। भर्तारं नानुवर्तेत सा तु पापगतिर्भवेत्।।

भर्तु श्शुश्रूषया नारी लभते स्वर्गमुत्तमम्। अपि या निर्नमस्कारा निवृत्ता देवपूजनात्।।

शुश्रूषामेव कुर्वीत भर्तुः प्रियहिते रता। एष धर्मः पुरा दृष्टो लोके वेदे श्रुतः स्मृतः।।

வ்ரதோபவாஸநிரதா யா நாரீ பரமோத்தமா |

பர்தாரம் நாநுவர்தேத ஸா து பாபகதிர்பவேத்।।

பர்து ஷ்ஷுஷ்ரூஷயா நாரீ லபதே ஸ்வர்கமுத்தமம் |

அபி யா நிர்நமஸ்காரா நிவ்ருத்தா தேவபூஜநாத் ।।

ஷுஷ்ரூஷாமேவ குர்வீத பர்துஃ ப்ரியஹிதே ரதா |

ஏஷ தர்ம: புரா தரிஷ்டோ லோகே வேதே ஸ்ருத: ஸ்மருத:।।

எந்த ஒரு பெண், தன கணவனை, கவனிக்காமல், விரத, உபவாசங்கள், எல்லாம், பன்றாலோ, அவள், நரகத்துக்குப் போவாள். "பர்து ஷ்ஷுஷ்ரூஷயா நாரீ லபதே ஸ்வர்கமுத்தமம்" பர்த்ரு சிஸ்ருஷைனாலதான், ஒரு பெண், சுவர்க்கம், அடைவாள். "அபி யா நிர்நமஸ்காரா நிவ்ருத்தா தேவபூஜநாத்" எந்த பெண், பர்த்ரு ஸுஸ்ருஷை பண்ணிண்டு, தெய்வங்களை எல்லாம் நமஸ்காரம் பண்ணலை, ஒரு விதமான, விரதங்களையும், பூஜைகளையும் பண்ணலை, ஆனாலும், அவளைத்தான், எல்லாரும் தெய்வங்கள், போற்றும். பெய்யென பெய்யும் மழைன்னு சொல்றாரே, வள்ளுவர். அந்த மாதிரி, "ஏஷ தர்ம: புரா தரிஷ்டோ லோகே வேதே ஸ்ருத: ஸ்மருத:।।" வேதத்துலயும், ஸ்ருதியிலும், ஸ்மிருதியிலும் மஹான்களுடைய நடத்தையிலும், பெரியவா மூதன்னையர்கள் எல்லாரும் இதைத் தான் நடத்தி காண்பிச்சிருக்கா. இதைத் தான், புரிய வெச்சிருக்கா. அதனால, நீ உன், கணவனோட இரு. இங்கதான், உன்னோட இடம், அப்படீன்னு சொல்றார், ராமர். அப்புறம், சொல்றார்.

अग्निकार्येषु च सदा सुमनोभिश्च देवताः। पूज्यास्ते मत्कृते देवि ब्राह्मणाश्चैव सुव्रताः।।

அக்நிகார்யேஷு ச ஸதா ஸுமநோபிஷ்ச தேவதா: |

பூஜ்யாஸ்தே மத்கரிதே தேவி! ப்ராஹ்மணாஷ்சைவ ஸுவ்ரதா:||

அப்படீன்னு, சொல்லிட்டு, அக்னி கார்யத்தையும், புஷ்பங்களை கொண்டு, விஷ்ணு பகவானை, ரங்கநாதருக்கு பூஜை பண்றதையும் விட்டுடாதே. பிராம்மணர்கள், பெரியவா எல்லாரையும், நமஸ்காரம், பண்ணிண்டு இரு. நான் அங்க காட்டுல க்ஷேமமா இருக்கணும்கிறதுக்காக, நீ இதெல்லாம் பண்ணு" அப்படீங்கறார்.

அதாவது, பூஜையை காட்டிலும், பர்த்ரு ஸுஸ்ருஷை பெரிசுன்னு சொல்றார். இந்த பர்த்ரு ஸுஸ்ருஷையை பண்ணிட்டு, பூஜையும் பண்ணு, எனக்காக பண்ணு, அப்படீன்னு சொல்றார்.

அப்போ, வேற என்ன பண்ணுவா, கௌசல்யா தேவி "சரி"ன்னு சொல்றா. அங்க தான், கௌசல்யையோட பெருமை தெரியறது. கைகேயி கிட்ட கால்ல விழுந்து தசரதர் கெஞ்சறார். அவள் மறுத்துடறா. "எனக்கு சொத்து தான் வேணும். என் பிள்ளைக்கு இந்த ராஜ்ஜியம் வேணும்"னு கேட்கறா.

இங்க கௌசல்யாதேவி "புல்லை தின்னுண்டாவது, உன் பக்கத்துல இருக்கேன் ராமா"ன்னு சொன்னாலும், "நீ தசரதர் பக்கத்துல இரு"ங்கறார் ராமர். இந்த கைகேயி கிட்ட ஆட்சி, போன பின்ன தசரதர் பக்கத்துல இருக்கறது, எவ்வளவு கஷ்டம், கௌசல்யைக்கு! ஆனால், தர்மம்னு எடுத்து சொன்ன உடனே, கேட்டுக்கறா. சரி, ராமா நீ சொல்றதுதான் சரி. நான் என்ன பண்ணுவேன்? சரி க்ஷேமமா நீ போயிட்டு வா" அப்படீன்னு சொல்லி அந்த இடத்துலதான்,

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु।।

யம் பாலயஸி தர்மம் த்வம் திருத்யா ச நியமேன ச |

ஸவை ராகவசார்துல தர்மஸ்த்வாம் அபிரக்ஷது ||

"உன்னோட தர்மமும் சத்தியமும், எதை இவ்வளவு உறுதியாகவும், இவ்வளவு நியமமாகவும், ஆசையாகவும், நீ அதை காப்பத்தறயோ. அது உன்னை காப்பாத்தும்னு" சொல்றா. மஹாபெரியவா இந்த ஸ்லோகத்தை, quote பண்ணி ராவணனுக்கு, தம்பிகள், இருந்தா கோட்டைகள் இருந்தது, அஸ்த்ரங்கள்,

இருந்தது. அதெல்லாம், அவனுடைய பத்து தலைகள் ல ஒண்ணைக் கூட காபாத்தல. இப்படி, கௌசல்யை, கட்டி கொடுத்த இந்த பொதிசோறு, பதினாலு வருஷம் கெட்டுப் போகாம, இருக்கக் கூடிய சாப்பாடு, என்ன கட்டி கொடுக்க முடியும்னு பார்த்தாளாம், கௌசல்யை. இந்த சத்தியத்தையும், தர்மத்தையும், தான் நீ காப்பாத்தற. இதுதான் உன்னை காப்பாத்தும், அப்படீன்னு சொல்லி அதை கட்டி கொடுத்தாளாம். அதுதான், ராமனை காப்பாத்தித்து", அப்படீன்னு மஹா பெரியவா பேசியிருக்கா.

அதற்கப்புறம், அவ கை அலம்பிண்டு, அதாவது துக்கத்துல, கண் ஜலம், விட்டா, அந்த கண் ஜலம் கையில பட்டுதுன்னா, அது அஸூசி. அதனால கை அலம்பிண்டு, அவ பிராம்மணாளை கூப்பிட்டு ஒரு ஹோமம், பண்ணி அந்த ஹவிசை ராமனுக்கு கொடுத்து, அப்புறம், ஒரு நாலு ஐந்து ஸ்லோகங்கள் சொல்லி, மங்களாசாசனம்பா. நித்யம், நாம இந்த இராமாயண பூர்த்தியில இந்த ஸ்லோகங்களை படிக்கறோம். அப்படி, அந்த கௌசல்யா தேவி சொன்ன வார்த்தைகள், எல்லாரும் ராமாயணம் பூர்த்தியில நித்யம் படிக்கும் படியா அமைஞ்சிருக்கு. அந்த ஒரு நாலு ஸ்லோகத்தை படிச்சுட்டு பூர்த்தி பண்றேன்.

यन्मङ्गलं सहस्राक्षे सर्वदेवनमस्कृते । वृत्रनाशे समभवत्तत्ते भवतु मङ्गलम्।।

यन्मङ्गलं सुपर्णस्य विनताऽकल्पयत्पुरा । अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु मङ्गलम्।।

अमृतोत्पादने दैत्यान् घ्नतो वज्रधरस्य यत् । अदितिर्मङ्गलं प्रादात्तत्ते भवतु मङ्गलम्।।

त्रीन्विक्रमान्प्रक्रमतो विष्णोरमिततेजसः । यदासीन्मङ्गलं राम तत्ते भवतु मङ्गलम्।।

ऋतवस्सागरा द्वीपा वेदा लोका दिशश्च ते । मङ्गलानि महाबाहो दिशन्तु शुभमङ्गलाः।।

யன்மங்களம் சஹஸ்ராக்ஷே ஸர்வ தேவ நமஸ்க்ருதே |

வ்ருத்ர நாசே சமபவத் தத்தே பவது மங்களம் ||

யன்மங்களம் சுபர்னஸ்ய வினதாSகல்பயத் புரா |

அம்ருதம் ப்ரார்தயானஸ்ய தத்தே பவது மங்களம் ||

அம்ருதோத்பாதனே தையத்யான் க்னதோ வஜ்ரதரஸ்ய யத் |

அதிதிர் மங்களம் ப்ராதாத் தத்தே பவது மங்களம் ||

த்ரீன் விக்ரமான் ப்ரக்ரமத: விஷ்ணோரமித தேஜஸ: |

யதாஸீன் மங்களம் ராம தத்தே பவது மங்களம் ||

ருதவ: சாகரா த்வீபா: வேதா லோகா திசஸ்ச தே |

மங்களானி மஹா பாஹோ திஸந்து சுபமங்களா: ||

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம

மகாபெரியவா மந்தஸ்மிதம் என் மனத்தில் உதிக்கட்டும்

நேத்திக்கு பௌர்ணமி இன்னிக்கு 'ப்ரதிபத்' அப்படின்னு சொல்லுவா ஸம்ஸ்க்ருதத்துல, ப்ரதமை அப்படின்னு தமிழ்ல சொல்றோம். கிருஷ்ண ப்ரதமை, அதாவது, பௌர்ணமிக்கு அடுத்த நாள் வருகிற ப்ரதமையும், அம்பாள் பக்தர்களுக்கு ரொம்ப விசேஷம். In fact இன்னைக்கும் சந்திரன், பூரண சந்திரன் மாதிரியே இருக்கும், ஒரு கலை தான் குறைஞ்சு இருக்கும். சில நாள் ப்ரதமை சந்திரன் பூரண சந்திரனை விடவே அழகா இருக்கும். இன்னைக்கும் கொஞ்ச நேரம் மாடியில் போய் சந்திர தர்சனம் பண்ணினேன்.

இந்த ப்ரதமை, ப்ரதிபத் அப்படின்னு சொன்ன உடனே, மஹாபெரியவா அனுபவம் ஒண்ணு ஞாபகம் வரது. களக்காடு ராம நாராயண ஐயர் அப்படின்னு ஒரு சங்கீத வித்வானை, மஹாபெரியவா, லலிதா ஸஹஸ்ர நாமத்துக்கு ராகம் போட்டு, அதை கீர்த்தனைகளா பண்ணி, பாடச் சொன்னா. அவர் நல்ல பண்டிதர். இந்த மாதிரி லலிதா ஸஹஸ்ரநாமத்தை பெரியவா கிட்ட பாடுவார்.

அவர், நம்ம மடத்துலேயும் ஆஸ்தான வித்துவானா இருந்தார். ஸ்ருங்கேரி மடத்துலேயும் ஆஸ்தான வித்துவானா இருந்தார். ஒரு நவராத்திரிக்கு, அவரை ஸ்ருங்கேரி மடத்துல இருந்து கூப்பிட்டு அனுப்பிச்சு இருந்தா. இவர் போய் அங்க ஸ்ருங்கேரி மடத்துல ஒன்பது நாளும் இருந்து பாடி இருக்கார். அப்பறம், பெரியவா கூப்பிட்டு அனுப்பிச்சு, இங்க பௌர்ணமிக்குள்ளே இங்க வந்து reachஆகி பௌர்ணமி அன்னிக்கு பெரியவா சன்னிதில பாடறார். அப்போ

பெரியவா சொன்னாளாம், லலிதா ஸஹஸ்ரநாமம் பாடிண்டே வரும்போது, “ப்ரதிமன் முக்ய ராகாந்த திதி மண்டல பூஜிதா” ன்னு ஒரு நாமாவளி, ப்ரதமை ஆரம்பிச்சு ராகா, ராகான்னா பௌர்ணமி பர்யந்தம், இந்த பதினைந்து திதிகளிலும், பூஜை செய்யப்படுபவள்ன்னு ஒரு அர்த்தம். இந்த பதினைந்து திதிகளிலும் அம்பாளை பூஜை பண்ணுறதுன்னு ஒரு அர்த்தம், இந்த திதி மண்டலங்கள் அம்பாளை பூஜை பண்ணுறதுன்னு, அப்போ, பெரியவா சொன்னாளாம் “நவராத்திரியின் போது உனக்கு காமாக்ஷி சன்னிதியில பாடல்லியேன்னு ஒரு குறை இருந்தது. அந்த ப்ரதிபத்ல இருந்து ஆரம்பிச்சு பௌர்ணமி பர்யந்தம், எல்லா திதிகளும் அம்பாளை பூஜை பண்ணுறதுன்னு சொல்றா, அதனால நவராத்ரி இந்த பௌர்ணமி பர்யந்தம் இருக்கு, அதனால நீ பௌர்ணமிக்கு இங்க வந்து பாடிட்டியே” அப்படின்னு சொன்னாளாம். என்ன அன்பு!

அதுக்கு இந்த ராம நாராயண ஐயர் சொன்னாராம் “பெரியவா, பௌர்ணமி இன்னிக்கு ஒரு நாள் தான் ஆகாசத்துல சந்திரன், எங்களுக்கு பெரியவா தான் பூர்ண சந்திரன், அதனால, எங்களுக்கு நித்யமே பௌர்ணமி” அப்படின்னு சொன்னாராம். அப்படி அவ்ளோ அழகா அவர் பதில் சொல்லி இருக்கார். அப்படி பக்தியா இருந்திருக்கார். பெரியவா “அவா ஆத்துல காமாக்ஷி இருக்கா, அங்க போய் பாடுங்கோ, கத்துக்கோங்கோ”ன்னு எல்லாம் சொல்லி இருக்கார்.



அதுனால இன்னிக்கு அம்பாள் சம்பந்தமா ஏதாவது சொல்லலாம்னு ஒரு ஆசை.

இன்னிக்கு வட நாட்ல எல்லாம், ஹனுமத் ஜெயந்தின்னு கொண்டாடறா. இப்ப தான், இந்த சித்ரா பௌர்ணமியை ஹனுமத் ஜெயந்தின்னு கொண்டாடறா. சித்திரைனா, அவாளுக்கு சாந்திராமான பஞ்சாங்கம்னு ஒண்ணு இருக்கு, அதுல போன அமாவாஸ்யையோடவே சித்ரா மாசம் ஆரம்பிச்சிடறது. அதனால தான் அந்த நவமியை ராம நவமின்னு கொண்டாடறோம். 'சைத்ரே நாவாமிகே திதௌ'ன்னு புஸ்தகத்துல இருக்கு, சித்திரை மாசத்தோட நவமி திதின்னு, நமக்கு எல்லாம் சித்திரை இன்னும் வறல, இந்த சாந்திராமானத்துல அமாவாஸ்யையோடவே சித்ரா மாசம் ஆரம்பிக்கிறது, அவா யுகாதி கொண்டாடறா இல்லையா! அதுலேருந்து ஒன்பதாவது நாள் நவமி அன்னிக்கி ராம நவமி கொண்டாடறோம். அதுலேருந்து பதினைஞ்சாவது நாள் இந்த சித்ரா பௌர்ணமி அன்னிக்கி ஹனுமத் ஜெயந்தின்னு விசேஷமா கொண்டாடறா.

அதனால ஹனுமாரையும், அம்பாளையும் ஸ்மரிக்கும்படியா என்ன ஸ்லோகம் அப்படினு நினைச்சேன், ஒரு அழகான ஸ்லோகம் இருக்கு, பதிமூணாவது ஸர்கம் சுந்தரகாண்டத்துல

तदुन्नसं पाण्डुरदन्तमव्रणं शुचिस्मितं पद्मपलाशलोचनम्।

द्रक्ष्ये तदार्यावदनं कदान्वहं प्रसन्नताराधिपतुल्यदर्शनम्।। ”

ததுந்நஸம் பாண்டுரதந்தமவ்ரணம் ஷுசிஸ்மிதம் பத்மபலாஷலோசநம் |

த்ரக்ஷ்யே ததார்யாவதநம் கதாந்வஹம் ப்ரஸந்நதாராதிபதுல்யதர்ஷநம்।

அப்படின்னு ஒரு ஸ்லோகம், நான் எப்போ அந்த சீதாதேவியோட முகத்தை பார்ப்பேன், அப்படின்னு ஹனுமார் சொல்றார், 'ததுந்நஸம்' நிமிர்ந்த மூக்கும், 'பாண்டுரதந்தம்' வெள்ளைவெளேர்ன்னு அந்த பற்களும், 'அவ்ரணம்', எந்த வித அப்பழுக்கும் இல்லாத வரிசையான அந்த பற்களும், 'ஷுசிஸ்மிதம்' அழகான அந்த, தூய்மையான அந்த சிரிப்பும், 'பத்மபலாஷலோசநம்' பத்மம்னா தாமரை, பாலஷம்னா இதழ், தாமரை இதழ் போன்ற கண்களும், கொண்ட 'ப்ரஸந்நதாராதிபதுல்யதர்ஷநம்' தாராதிபஹ னா நக்ஷத்திரங்களுக்கு ராஜா, யாரு? சந்திரன். அந்த சந்திரனை போன்ற முகமும் கொண்ட, இந்த ஆர்யா வதனம், உன்னதமான அந்த பெண்ணினுடைய முகத்தை, 'அஹம் கதா த்ரக்ஷ்யே' நான் எப்பொழுது பார்ப்பேன், அப்படின்னு சொல்றார்.

तदुन्नसं पाण्डुरदन्तमव्रणं शुचिस्मितं पद्मपलाशलोचनम्।

द्रक्ष्ये तदार्यावदनं कदान्वहं प्रसन्नताराधिपतुल्यदर्शनम्।। ”

எத்தனை அழகான வார்த்தைகள்! பொருள்! எதுகை மோனை! உவமைகள்! அப்படி அழகான ஒரு meterல ஒரு ஸ்லோகம். இந்த ஸ்லோகத்துல அம்பாள் தர்சனம் எனக்கு எப்போ கிடைக்கும், அப்படின்னு கேட்கறார். அந்த அம்பாள் தர்சனம் யாருக்கு கிடைக்கும்னா, ரொம்ப humbleஅ, இருக்கறவாளுக்குத் தான் கிடைக்கும்.

சுக்ரீவன், வானரா கிளம்பும்போது, நாலா திக்குலயும், என்னென்ன தேசங்கள் இருக்கு, என்னென்ன நதிகள் இருக்கு, என்னென்ன மலைகள் இருக்கு, அடையாளங்கள் எல்லாம் சொல்லி, வழியில இருக்கிற ஆபத்துகளை எல்லாம் சொல்லி, வழியில இருக்கக் கூடிய ரிஷிகள் பேரை எல்லாம் சொல்லி, அவாளை நமஸ்காரம் பண்ணுங்கோ, அவா கிட்ட கேட்டுக்கோங்கோன்னு சொல்லி, அழகா வழி சொல்லி வானராளை நாலா திக்குலயும் அனுப்புறான். அப்போ அவன் ஒண்ணு சொல்றான், “யார் வந்து ‘திருஷ்டா ஸீதா’ சீதையை கண்டேன், என்று சொல்கிறார்களோ, அவர்களுக்கு என் ராஜ்யத்தில் பாதியை கொடுப்பேன், எனக்கு சமானமான அந்தஸ்தை கொடுப்பேன்” அப்படிங்கறான், “அவா என்கிட்ட பண்ணின தப்பெல்லாம் மன்னிச்சுடறேன்” அப்படின்னு சொல்றான். ஆனால் யார் பாத்துட்டு வந்தா? ஒரு தப்பும் பண்ணாத, ஒரு அந்தஸ்துக்கும் ஆசைப்படாத ஹனுமார் தான், சீதா தேவியை தர்சனம் பண்றார். இந்த மாதிரி, “புராணங்களில் எல்லாம் பலஸ்ருதி கொடுத்து இருக்கும், இதை படிச்சா இன்ன பலஸ்ருதி அப்படின்னு, அந்த பலஸ்ருதிக்கு ஆசைபட்டா அது கிடைக்கும். ஆனா ராமாயணம் படிச்சா, ராமரே வேணும்னு ஆசைப்பட்டா ராமரே கிடைப்பார்” அப்டின்னு ஸ்வாமிகள் சொல்லுவார். அந்த மாதிரி இந்த ஹனுமார் தான் சீதா தேவியை தர்சனம் பண்றார்.

மூக பஞ்சசதில இந்த தூய்மையான மந்தஸ்மிதம் humble ஆக இருக்கறவாளுக்கு கிடைக்கும் அப்படீங்கறதை, படிச்சு உடனே, ஒரு ஸ்லோகம் ஞாபகம் வரது.

सन्नामैकजुषा जनेन सुलभं संसूचयन्ती शनै-

रुत्तुङ्गस्य चिरादनुग्रहतरोरुत्पत्स्यमानं फलम् ।
प्राथम्येन विकस्वरा कुसुमवत्प्रागल्भ्यमभ्येयुषी
कामाक्षि स्मितचातुरी तव मम क्षेमङ्करी कल्पताम् ॥

ஸன்னாமைகஜுஷா ஜனேன ஸுலபம் ஸம்ஸூசயந்தீ ஶனை-

ருத்துங்கஸ்ய சிராதனுக்ரஹதரோருத்பத்ஸ்யமானம் பலம் |

ப்ராதம்யேன விகஸ்வரா குஸுமவத்ப்ராகல்ப்யமப்யேயுஷீ

காமாக்ஷி ஸ்மிதசாதுரீ தவ மம க்ஷேமம்கரீ கல்பதாம் ||

அது மாதிரி, காமாக்ஷி மந்தஸ்மிதத்தை பத்தி ஒரு நூறு ஸ்லோகம் எழுதியிருக்கார், மூக கவி. அதுல இந்த ஒரு ஸ்லோகம், அதாவது, அனுக்ரஹம் னு ஒரு மரம் இருக்கு. அதுல ஞானம் அப்படீங்கிற ஒரு பழம் கிடைக்கப் போறது. அந்த பழம், கிடைக்க போறதுன்னு ஸுசகமா ஒரு பூ பூத்திருக்காம். அது என்ன பூன்னா, அம்பாளுடைய மந்தஸ்மிதம்ங்கிற புன்னகை, அப்படீங்கிற, அந்த பூ பூத்திருக்கு. இது ஸன்னாமைகஜுஷா ஜனேன ஸுலபம் – இந்த பழம், யாருக்கு, கிடைக்கும் அப்படீன்னா, மிக மிக வணக்கத்தோடு இருந்து கொண்டே இருப்பவர்களுக்கு, இந்த மந்தஸ்மிதம் கிடைக்கும். காமாக்ஷி ஸ்மிதசாதுரீ தவ மம க்ஷேமம்கரீ கல்பதாம் – இந்த புன்னகை, எனக்கு, க்ஷேமத்தை, உண்டு பண்ணட்டும், அப்படீன்னு அழகான ஒரு ஸ்லோகம்.

அப்படி, அந்த ஹனுமார், இவாளோட, வானரர்களோட தேடி வரார். அவருக்கு தான், இந்த காரியத்தை முடிச்சுடுவோம்ங்கிற கர்வப் பேச்சோ அதெல்லாம் ஒண்ணுமே இல்லை. அவர் இவாளோட வரார். இந்த தென் கோடியில வந்து கடற்கரையில காத்துண்டு இருக்கும்போது, சம்பாதி வந்து, “அங்க கடலுக்குள்ள ஒரு தீவு இருக்கு. லங்கா நகரம்னு, அங்க சீதா தேவி இருக்கா. நீங்க போயி பார்த்தா, அவள் இருப்பிடத்தை தெரிஞ்சுண்டு பேசிட்டு வரலாம்”னு சொல்றார். அப்போ இவா வானாரா எல்லாம் யார் போகப் போறான்னு, கவலை பட்டுண்டு இருக்கும்போது, ஜாம்பவான், “ஹனுமான் தான், இதை பண்ண முடியும்”, அப்படீன்னு எல்லாருமா சேர்ந்து, ஹனுமாரை, உத்சாகப் படுத்தறா. அப்போ,

அவருக்கு தன்னோட திறமை ஞாபகம் வர்றது. ஆமா, நான் உங்களுக்காக இந்த காரியத்தை பண்றேன் னு, மகேந்திர மலையில ஏறி, கடலை தாண்டி, இலங்கையில குதிச்சு, தேடறார்.

தேடும்போது, இந்த இராவணனை பார்க்கறார். அந்தப்புரதுல மற்ற பெண்களைப் பார்க்கறார். மண்டோதரியை பார்க்கறார். ராமர் சொன்ன வயசும், அந்த லக்ஷணங்களும், பொருந்தி இருந்ததுனால, இந்த மண்டோதரி தான், சீதையோன்னு ஒரு நிமிஷம், நினைக்கறார். அப்புறம், "அது எப்படி இருக்க முடியும்? ராமனை பிரிஞ்ச சீதை, சுகமா அந்தபுரத்துல கட்டில்ல படுத்து தூங்குவாளா? இது சீதா தேவி இல்லை", அப்படீன்னு, சொல்லிண்டு, இன்னும் தேடறார். அப்படி, தேடும்போது, சீதையை காணோம், அப்படீன்னு நினைச்சு, அவருக்கு ரொம்ப கவலை வந்துடறது. "என்னடா இது? சீதையை தேடி வந்தோம். காணோமே, ஏதோ, கூண்டுல அடைபட்ட கிளி மாதிரி சீதாதேவி இவாளோட கொடுமையினானால, இறந்து போயிட்டாளா? இல்லை இராவணன், தூக்கிண்டு வரும்போதே கடல்ல விழுந்துட்டாளா? என்ன ஆச்சுன்னு தெரியலையே? சீதையை காணோமே, நான் என்ன பண்ணுவேன்"னு கவலை படறார்.

அப்போ "ஒண்ணு நான் போயி இந்த சீதையை பார்க்கலை, சீதா தேவி இலங்கையில இல்லைன்னு, சொல்லணும், இதை ராமர்கிட்ட சொன்னா, அவர் உயிரை விட்டு விடுவார். ராமர், உயிரை விட்டா, லக்ஷ்மணனும், உயிரை விட்டுடுவான். லக்ஷ்மணன் உயிரை விட்டா, சொன்ன வார்த்தையை காப்பாதலை என்று, சுக்ரீவன் உயிரை விட்டுடுவான். அங்கதன் தாரை ருமை எல்லாரும் உயிரை விட்டுடுவா. இப்படி, பெரிய அனர்த்தமா ஆயிடும். அதனால நான் திரும்ப போகப் போறது இல்லை. நான் இங்க இருந்து, பட்டினி கிடக்கறேன். என்ன ஆறதோ, ஆகட்டும்"னு அப்படீன்னு நினைக்கறார். அப்புறம், அவர் சொல்றார். நான் எதுக்கு வந்தேன், சீதையை தேட வந்தேன்.

यावत्सीतां हि पश्यामि रामपत्नीं यशस्विनीम्।
तावदेतां पुरीं लङ्कां विचिनोमि पुनः पुनः।।

யாவத்ஸீதாம் ஹி பஷ்யாமி ராமபத்னிம் யஷஸ்விநிம்||

தாவதேதாம் புரிம் லங்காம் விசிநோமி புந: புந:|

எது வரைக்கும், சீதையை, பாக்கறேனோ அது வரைக்கும் தேடறேன், அப்படீன்னு சொல்லி தன்னோட மனக்கவலையை ஒழித்துட்டு, திரும்பியும், தேடறதுக்கு கிளம்பறார். அப்போ, அந்த அசோகவனத்தைப் பார்காறார். இங்க நாம பார்க்கவே இல்லையே அப்படீன்னு, சொல்லி, அவர்,

नमोस्तु रामाय सलक्ष्मनाय देव्यैचतस्यै जनकात्मजायै |

नमोस्तु रुद्रेन्द्र यमानिलेभ्यो नमोस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ||

நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய

தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை |

நமோஸ்து ருத்ரேந்திரமானிலேப்யோ

நமோஸ்து சந்த்ரார்க்கமருத்கனேப்ய: ||

அப்படீன்னு, எல்லா தெய்வங்களையும் வேண்டிண்டு, அந்த அசோக வனத்துல போயி தேடறார். அங்க சீதா தேவியை பார்த்துடறார். அந்த ராக்ஷசிகளுக்கு, மத்தியில சீதா தேவி இருக்கறதை பார்த்து ரொம்ப சீதைக்காக, feel பண்றார். மேகங்களுக்கு நடுவுல சந்திரனைப் போலவும், புகை மூட்டத்துக்கு நடுவுல அக்னியை போலவும், இந்த சீதை இவ்வளவு கஷ்டத்துக்கு நடுவுல இருக்காளே, அப்படீன்னு, ரொம்ப வருத்தப்படறார். அவர் சீதையை பார்த்த உடனே, சொல்ற உபமானங்கள் எல்லாம் ரொம்ப அழகா இருக்கும். “ஆம்னாயானாம் அயோகேன வித்யாம் ப்ரஷிதிலாம் இவ” வேதப் படிப்பு, திரும்பி எப்படி சந்தை சொல்லலைன்னா மறந்து போயிடுமோ, அந்த மாதிரி, சீதை வந்து, அடையாளம்,தெரியாம இருக்கா, அப்படீங்கறார். அப்புறம், நல்ல சம்ஸ்காரம் “சம்ஸ்காரேண யதா ஹீனாம் வாசம் அர்த்தாந்தரம் கதாம்” நல்ல படிப்பு, இல்லைன்னா, பேசும்போது, பொருள் தப்பா போயிடும். அது மாதிரி சீதை அசோகவனத்தில் சோகமா இருக்கா அப்படீங்கிறதுக்கு, இந்த மாதிரி,

இதெல்லாம் உவமை சொல்றார். அப்புறம், சீதையோட பெருமையை நினைச்சு பார்க்கறார். ராமர், இவளை பிரிஞ்சு இருக்கார்னு, அந்த ராமருடைய வருத்தத்தை நினைக்கறார்.

அந்த மாதிரி, ஹனுமாருக்கு, சீதா தேவியோட, தரிசனம் கிடைக்கறது. சீதையை எப்போது காண்பேன் , அப்படீன்னு, சொன்ன ஹனுமார், சீதையை, கண்டு விடுறார். "எத்தனையோ, கோடிக் கணக்கான வானாரால் உலகம் முழுக்க தேடறா. ஏதோ தெய்வாதீனமா இன்னிக்கு, நான் சீதையை பார்த்தேன்", அப்படீன்னு, சொல்றார். எந்த வெண்மையான சிரிப்பை பார்க்கணும்னு, ஆசைப்பட்டாரோ அந்த சீதாதேவியை பார்த்துடறார். அவ முகத்துல சிரிப்பு ஏற்படும்படியா சந்தோஷம் ஏற்படும்படியான வார்த்தைகளை, ஹனுமார் பேசறார்.

இந்த வெண்மையான தூய சிரிப்பு, அப்பட்டீங்கும் போது மூக பஞ்சசதில இன்னொரு ஸ்லோகம் இருக்கு.

पुम्भिर्निर्मलमानसैर्विदधते मैत्रीं दृढं निर्मलां

लब्ध्वा कर्मलयं च निर्मलतरां कीर्तिं लभन्तेतराम् ।

सूक्तिं पक्ष्मलयन्ति निर्मलतमां यत्तावकाः सेवकाः

तत्कामाक्षि तव स्मितस्य कलया नैर्मल्यसीमानिधेः ॥

பும்பிர்நிர்மலமானசைர்விதததே மைத்ரீம் த்ருடம் நிர்மலாம்

லப்த்வா கர்மலயம் ச நிர்மலதராம் கீர்திம் லபன்தேதராம் |

ஸூக்திம் பக்ஷ்மலயந்தி நிர்மலதமாம் யத்தாவகா: ஸேவகா:

தத்காமாக்ஷி தவ ஸ்மிதஸ்ய கலயா நைர்மல்யஸீமானிதே: ||

அப்படீன்னு ஒரு ஸ்லோகம். "ஹே காமாக்ஷி, உன்னுடைய புன்சிரிப்பு பாற்கடலை போல வெள்ளையா இருக்கு. அதுல ஒரு திவலை இந்த பக்தர்கள், மேல படறதுனால அவாளுக்கு தூய்மையான நண்பர்கள் கிடைக்கறா. எல்லா வினைகளும் போய் அவாளுக்கு தூய்மையான புகழ் கிடைக்கறது. அவாளுக்கு தூய்மையான வாக்கும் அமையறது" அப்படீன்னு சொல்றார்.

மூககவி நூறு பாடல்கள் காமாக்ஷியுடைய மந்தஸ்மிதத்தை பத்தி எழுதி இருக்கார். மத்த அம்பாள் பக்தர்கள் கூட அம்பாளோட மந்தஸ்மிதத்துல ரொம்ப லயிச்சு ரசிச்சு இருக்கா. அது ஒரு ஞானக் கலை அப்படிங்கற மாதிரி.

அபிராமி பட்டர் நிறைய அம்பாளோட மந்தஸ்மிதத்தை பத்தி பாடறார். மகாபெரியவா ஒரு தமிழ்ப் புலவர் கிட்ட "அபிராமி பட்டருடைய வழிபடு தெய்வம் என்ன?"னு கேட்கறா. பட்டர் அபிராமி அந்தாதி தானே எழுதி இருக்கார், அதுனால இவர் திருக்கடையூர் அபிராமி ன்னு சொல்றார். அப்ப மஹாபெரியவா "இல்லை. அபிராமி அந்தாதியில் நிறைய பாடல்களில் கரும்பு வில்லும் பஞ்ச புஷ்ப பாணமும் பாசாங்குசமும் சொல்லி இருக்கார். அது இங்கே காஞ்சி காமாட்சிக்கு தான். அதுனால அபிராமி பட்டருடைய இஷ்ட தெய்வம் காஞ்சி காமாக்ஷி" அப்படின்னு பெரியவா சொல்லி இருக்கா. அவரும் படிச்சுட்டு வந்து "ஆமாம். நிறைய பாடல்களில் கருப்பு சிலை, கரும்பு வில் பஞ்ச புஷ்ப பாணம் னு வரது. அது காஞ்சி காமாக்ஷி தான் என்று ஒத்துக்கறார்.

அந்த அபிராமி அந்தாதியில் ஆரம்பத்தில் ஒன்பதாவது பாட்டில் "முருத்தன மூரலும், நீயும், அம்மே வந்து என்முன் நிற்கவே" அப்படின்னு வேண்டிக்கறார். மூரல் னா மந்தஸ்மிதம் னு அர்த்தம். மயிலின் தோகையின் அடிப்பாகம் போல வெள்ளை வெளேர் னு இருக்கும் மந்தஸ்மிதம், அப்படின்னு சொல்றார். அப்பறம் இன்னொரு பாட்டில் "பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல் தவளத் திரு நகையும் துணையா" தவளம் னா வெள்ளை னு அர்த்தம். குளிர்ந்த வெண்மையான சிரிப்பு. களங்கமில்லாத தூய்மையான சிரிப்பை மகான்கள் பாடறா. இன்னொரு பாட்டுல "முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும்முகிழ் நகையே" அப்படின்னு சொல்றார். புன்னகை ஒரு பூ பூக்கற மாதிரி இருக்குனு சொல்றார். எல்லாத்துக்கும் மேலே கடைசி பாட்டுல

குழையைத் தழுவிய கொன்றையந் தார் கமழ் கொங்கைவல்லி

கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்பு வில்லும்

விழையப் பொரு திறல் வேரியம் பாணமும் வெண் நகையும்

உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!

வெண் நகையும்..நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே என்கிறார். இது நூறாவது பாடல். அந்தாதி என்கிறதுனால உதிக்கின்ற செங்கதிர்னு முதல் பாடல் ஆரம்பிக்கிறது. காமாக்ஷியினுடைய மந்தஸ்மித தர்சனம் கிடைக்க

வேண்டுமானால் இந்த அபிராமி அந்தாதியை திரும்ப திரும்ப பாராயணம் பண்ணிண்டே இருக்க வேண்டும் என்று சொல்வது போல இருக்கு.

அபிராமி அந்தாதி நூறு பாடல்களை படிச்சா, அபிராமி பட்டருக்கு மூக பஞ்சசதி ரொம்ப இஷ்டமான ஸ்தோத்ரமாக இருந்து இருக்கும் என்று தோன்றுகிறது. பாதாரவிந்தத்தை பற்றியும், கடாக்ஷத்தைப் பற்றியும், மந்தஸ்மிதத்தை பற்றியும், அபிராமி பட்டரும் நிறைய சொல்றார். அம்பாளுடைய பாதங்களை நான் கெட்டியாக பிடிச்சுண்டு இருக்கேன். எனக்கு அம்பாள் பக்தி தான் ஒரே வழி, அப்படிங்கறதையும் மூக கவி மாதிரி திரும்ப திரும்ப சொல்றார்.

காமாக்ஷியின் மந்தஸ்மிதம் என்றவுடன் இதெல்லாம் ஞாபகம் வரது. நமக்கு காமாக்ஷி மகாபெரியவா. மகாபெரியவாளுடைய மந்தஸ்மிதம் நம் மனத்தில் உதிக்க வேண்டும்னு பிரார்த்தனை பண்ணிப்போம்.

அப்படி சீதா தேவியை ஹனுமார் தரிசனம் பண்ண இந்த காட்சியை மனசுல வெச்சுண்டு பூர்த்தி பண்ணிக்கறேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது

இன்னைக்கு வால்மீகி ராமாயணத்துல யுத்தகாண்டத்தில் இருந்து நாற்பத்தி ஒண்ணாவது ஸர்க்கத்துல ஒரு ஸ்லோகம்.

तव भार्यापहर्तारं दृष्ट्वा राघव रावणम् |

मर्षयामि कथम् वीर जानन्विक्रममात्मनः ||

தவ பார்யாபஹர்த்தாரம் திருஷ்ட்வா ராகவ ராவணம் |

மர்ஷயாமி கதம் வீர ஜானன் பௌருஷம் ஆத்மனஹ ||

அப்படின்னு சுக்ரீவன் ராமரை பார்த்து சொல்றான்.

இது கதை என்னென்னா, ராமர் நளனை கொண்டு பாலம் கட்டி, லங்கைக்கு வந்து சேர்ந்துடறார். பெரிய வானரப்படை. வெள்ளம் சேனை அப்படிம்பா. அதாவது ஒண்ணு பக்கத்துல மூன்று zero போட்ட ஆயிரம், அந்த மாதிரி ஆறு zero போட்ட, ஒன்பது zero போட்ட அப்படி ஒண்ணுனுக்கும் ஒரு வார்த்தை இருக்கு, பத்மம், மஹாபத்மம், ஓகம், மஹோகம், அப்படின்னு அந்த வார்த்தைகள் எல்லாம் எல்லாம் சொல்றா. அந்த மாதிரி. பெரிய வெள்ளம் சேனை அழைச்சிண்டு, வானரப் படையை அழைச்சிண்டு ராமர் வந்துடறார்.

அந்த படை வந்து சேர்ந்த உடனே, ராவணன் ஒற்றர்களை அனுப்பறான். ரெண்டு வாட்டி வானரா மாதிரி வேஷம் போட்டு ஒற்றர்கள் போறா, ரெண்டு

வாட்டியும் அவாளை விபீஷணர் பிடிச்சுடறார். ராமர் கிட்ட கொண்டு நிறுத்தறார். ராமர் "வேண்டாம். ஒற்றர்களை கொல்ல வேண்டாம், விட்டுடு" அப்படிங்கறார். ஒரு வாட்டி அந்த ஒற்றர்கள் கிட்டயே ராமர் சொல்றார், "நீங்க என்ன வேணும்னாலும் பாத்துகோங்கோ, என்ன சேனை இருக்கு, யார் யார் சேனாதிபதிகள், தலைவர்கள், வேணும்னா விபீஷ்ணன் கிட்ட கூட கேட்டுக்கோங்கோ, போய் உங்க ராவணன் கிட்ட சொல்லுங்கோ, பேடியாட்டும் என் மனைவியை தூக்கிண்டு வந்தான், வீரனா இருந்தா யுத்தம் பண்ண சொல்லுங்கோ" அப்படின்னு சொல்றார். இதை அவா போய் அப்படியே ராவணன்கிட்ட சொல்றா, ராவணனுக்கு கோபம் வறது.

இந்த வானர வீரர்கள் ஜாம்பவான், ஹனுமார் நளன், நீலன், அங்கதன் இவளோட பலத்தை எல்லாம் ரொம்ப புகழ்ந்து சொல்றா அவா. அப்பறம் என்ன சொல்லி முடிக்கிறான்னா, "எந்த பக்கத்தில் ராமரும், லக்ஷ்மணரும், விபீஷணனும், சுக்ரீவனனும் இருக்காளோ, அந்த சேனையை ஜெயிக்கவே முடியாது, நாலு பேர்கூட வேண்டாம், இந்த ராமர் ஒருத்தரே போதும், அவருடைய தர்மபலத்தினால அவா ஜெயிச்சிடுவா, நீ சீதையை ஒப்படைச்சு சமாதானம் பேசிக்கோ, இல்லைன்னா யுத்தம் பண்ணு", அப்படிங்கறா அந்த ஒற்றர்கள். இவனுக்கு கோபம் வறது, "நீங்களல்லாம் என்ன, ராஜ்ய சாஸ்த்ரம் எல்லாம் ஒண்ணுமே படிக்கலயா, ஒரு காட்டுத் தீயில் காய்ஞ்ச மரம்கூட பிழைக்குமா இருக்கும், ராஜாவோட கோபத்துக்கு ஆளான பிழைக்க முடியாது. என் முன்னாடி வந்து எதிரியை புகழ்ந்து பேசறேளே, உங்களை கொன்று விடுவேன், எதோ பழைய நன்றி விஸ்வாசத்துனால நான் உங்களை உயிரோடு விடறேன். எனக்கு பிடிக்காதவாள போய்ட்டேள், அதனாலயே நீங்க செத்த மாதிரிதான், அதுவே உங்களுக்கு மரண தண்டனை, ஓடிப்போங்கோ" அப்படின்னு சொல்றான். அந்த மாதிரி அவன் பேசற கர்வ பேச்சு, அது ஒரு, படிக்கறதுக்கு ஸ்வாரஸ்யமா இருக்கும்.

அப்புறம் யுத்தத்துக்கு ஏற்பாடு பண்றான், இந்த ஒரு சுவேல மலைன்னு ஒரு மலைல, அன்னைக்கு ராத்திரி ராமரும் எல்லா வானராலும் rest எடுத்துக்குறா. இந்த மலை மேலிருந்து கார்த்தால விடிஞ்ச உடனே, ராமர் நின்னுண்டு

லங்கையை பார்க்கறார். லங்கையும் அதோட கோட்டையையும் காடுகளையும் அதெல்லாம் பார்க்கறார், சுக்ரீவன் கூட இருக்கான். அங்கே கோட்டையில் இருந்து, ஒரு பெரிய உப்பரிகைல ஏறிண்டு ராவணன் பார்க்கறான். அந்த ராவணன் என்னமா இருக்கான்னா ஒரு பெரிய சந்திரனை போல பெரிய குடை, நல்ல ரத்தன ஹாரங்கள் எல்லாம் போட்டுண்டு இருக்கான், மேகம் போல ஜொலிக்கறான், அப்படி அந்த ராவணனுடைய அழகையும், அவனோட தேஜசையும் வர்ணிக்கிறார். அப்பேற்பட்ட ராவணன்.

அவன் கர்வமா பார்வையிடறது எல்லாம் பார்த்த உடனே, இங்க சுக்ரீவனனுக்கு கடும் கோபம் வர்றது. அவன் ஒரே தாவா போய் ராவணன் முன்னாடி போய் குதிக்கிறான், குதிச்சிட்டு “ஹே ராவணா, நான் யார் தெரியுமா?

लोकनाथस्य रामस्य सखा दासोऽस्मि राक्षस |

न मया मोक्ष्यसेद्य त्वं पार्थिवेन्द्रस्य तेजसा ||

‘லோக நாதஸ்ய ராமஸ்ய ஸகா தாஸோஸ்மி ராக்ஷச’, நான் லோகநாதரான ராமருடைய, ஸகா, அவர் ஸகான்னு சொல்றார், நான் தாஸன்னு நினைக்கிறேன் என்னை, ‘ந மயா மோக்ஷசேத்யத்வம் பார்த்திவேந்திரஸ்ய தேஜஸா’, ராமரோட தேஜஸினால, நான் இன்னைக்கு உன்ன கொல்ல போறேன், என் கிட்ட இருந்து நீ தப்ப முடியாது” அப்படின்னு சொல்லி பாயறான், ராவணனுடைய மகுடத்தை கிழே தள்ளறான்.

சுக்ரீவனனுக்கும் ராவணனுக்கும் மல்யுத்தம் நடக்கறது, ரெண்டு பெரும் சிங்கங்கள் போலவும், புலிகள் போலவும், வானரத்தை போலவும், கரடியை போலவும், வாரணத்தை போலவும், யானைகளை போலவும் மோதிண்டு, ஒருத்தரை கிழிச்சிக்கிறா. ஒருத்தரை ஒருத்தர் அடிச்சுக்கறா. பலவிதமான யுத்த techniques எல்லாம் வர்றது அந்த ஸர்கத்துல, நமக்கு இப்போ KungFu, karate இதான் தெரியறது, அந்த மாதிரி இந்திய மரபான யுத்தங்கள் எல்லாம் இந்த ஸர்க்கத்துல வர்ணிச்சு இருக்கார். அப்படி ரெண்டு பேரும் கடுமையா யுத்தம் பண்ணிக்கிறா, ரெண்டு பேரும் equal strength, ஒருத்தரை ஒருத்தர் ஜெயிக்க முடியல, ரெண்டு பேரும் யுத்தம் பண்ணிண்டே இருக்கா. அப்போ ராவணன்

என்ன பன்றான், மாயைனால மறைஞ்சு இருந்து சுக்ரீவனை அடிக்கிறான். உடனே சுக்ரீவன் அங்கு இருந்து, நேரா குதிச்சு ராமர் கிட்ட வந்துடறான்.

உடனே ராமர் சொல்றார் "ஹே ஸுக்ரீவா! நீ என்ன இப்படி ஸாஹச கார்யம் பண்ற, நீ இந்த சேனைக்கு ராஜா, நீ இந்த மாதிரி என்னோட கலந்து ஆலோசிக்காம, யுத்தம் பண்ண போலாமா, உனக்கு ஒண்ணு ஆச்சுன்னா அப்பறம் எனக்கு என்ன இருக்கு? எவ்ளோ தூரம் சொல்றார்னா "த்வயி கிஞ்சித் ஸமாபன்னே" உனக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா, 'கிம் கார்யம் சீதையா மம", சீதைனால என்ன ஆகவேண்டி இருக்கு, "பரதேனே மஹாபாஹோ, லக்ஷ்மனேன யவியஸா, ஷத்ருக்னேன ச ஷத்ருக்னேன ஸ்வசரீரே ந வா புனஹ' லக்ஷ்மனனோ, ஷத்ருக்னனோ, பாரதனோ என் உடம்பே வெச்சிண்டே எனக்கு என்ன இருக்கு? நான் என்ன தீர்மானம் பண்ணி இருந்தேன்னா, நீ திரும்பி வராம போய்ட்டேனா, நான் ராவணனை வதம் பண்ணி விபீஷணனை லங்கைக்கு ராஜாவாக்கிட்டு, நெருப்புல விழலாம்னு இருந்தேன்" அப்படின்னு அவ்வளோதுரம், தன்னுடைய friendshipபோட strengthஅ காண்பிக்கிறா மாதிரி, ராமர் பேசறார். "அந்த மாதிரி ஸாஹஸ கார்யங்கள் இனிமே பண்ணாதபா. நீ ராஜா, நீ என்னோட உயிர்" அப்படின்னு சொல்றார்.

तव भार्यापहर्तारं दृष्ट्वा राघव रावणम् |

मर्षयामि कथम् वीर जानन्विक्रममात्मनः ||

அப்போ இந்த ஸ்லோகத்தை சுக்ரீவன் சொல்றான் "தவ பார்யாபஹர்த்தாரம் திருஷ்ட்வா ராவணம் – உன்னுடைய மனைவியை திருடின இந்த ராவணன் என்று, அவனை பார்த்த உடனே எனக்கு கோபம் தாங்கலை, மர்ஷயாமி கதம் வீர – நான் எப்படி அதை பொறுத்துப்பேன் ஜானன் பௌருஷம் ஆத்மனஹ – என்னுடைய பலமும் எனக்கு தெரியும்மில்லையா. அதனால போய் ரெண்டு அடி போட்டு வருவோம், ரெண்டு தட்டு தட்டுவோம்னுதான் போனேன், நானும் வாலி தம்பி தானே" அப்டிங்கறான். வாலி ராவணனை வால்ல கட்டி உலகமெல்லாம் உருட்டிண்டு போனான், "அதனால என் வீரமும் எனக்கு தெரியும், ரெண்டு அடி அடிக்கலாம்ன்னுதான் போனேன் அப்படின்னு

சொல்றான். इत्येवंवादिनं वीरमभिनन्द्य च राघवः 'இத்யேவம் வாதினம் வீரம் அபிநந்த்ய ஸ ராகவஹ' ராமர் "very good very good, சபாஷ் சபாஷ் அப்படின்னு சுக்ரீவனை பாராட்டறார், முதலில் "ஏன்பா இப்படி பண்ணினை?"ன்னு கேட்கறார், கண்டிக்கிற மாதிரி. இவன் அந்த மாதிரி வீர வசனம் பேசின உடனே, "ரொம்ப நல்லது. சரி, அடுத்த யுத்த காரியத்தை பாக்கலாம்"னு, அப்பறம் அங்கதனை தூது அனுப்புறார்.

இந்த இடத்துல, முக்கால்வாசி பேர், சுக்ரீவனோட இந்த பௌருஷத்தையும், பராக்ரமத்தையும், இந்த ப்ரபாவத்தையும் புரிஞ்சிக்கமாட்டா. "ஏன் நீ கேட்காம ராவணனோட போய் யுத்தத்துக்கு போன?", அப்படின்னு ராமர் கண்டிச்சார் எங்கிறதோட விட்டுடுவா. அப்பறம் இவன் சொன்ன இந்த ஸ்லோகம், ரொம்ப முக்கியம் ஏன்னா, ஒருத்தர் வீரத்தோடு ஒரு முயற்சி பண்றானா, அதை வந்து encourage பண்ணனும், எப்படி ராமர் அதை பாராட்டினரோ அது மாதிரி. எல்லாராலயும் stretch பண்ணி extraordinary things பண்ண முடியாது, சில பேர் தான் அவாளுக்கு அந்த natural talentம் இருந்து, நல்ல ஒரு குரு கிடைச்சு, அந்த சுத்தி இருக்குற inspiration எல்லாம் சேர்ந்து, ஒரு timeல stretch பண்ணி அவா அந்த பெரிய கார்யங்களை achieve பண்றா. அப்படி பண்ணும்போது நம்ம அவாள பயமுறுத்தாம, அவாள பாராட்டணும். எப்படி ராமர் பாராட்டறாரோ து மாதிரி. அவனுக்கு சுக்ரீவனுக்கு தெரியறது, "என்னால ராவணனோட ஓரளவு யுத்தம் பண்ண முடியும், அங்க போனா உயிரோட திரும்ப வருவேன்னு தெரியும், அதனாலதான் போனேன்" அப்படிங்கறான் அவன். இப்படி இவன் பண்ணதுனால, சுக்ரீவன் வீரத்தை காண்பிச்சதுனால, அவனுடைய படைக்கே உத்சாகம். "ராஜாவே உயிரை மதிக்காம ராவணனை போய் ஒரு தட்டு தட்டிட்டு வந்தாரப்பா" அப்படின்னு பேச மாட்டார்களா படைவீரர்கள்! அந்த உத்சாகத்தையும் கொடுத்தான். அந்த மாதிரி, ஆனா நான் சொல்றது இந்த காலத்துல, ரொம்ப குழந்தைலளை ஸ்ரமப்படுத்துறா, அஞ்சு வயசு குழந்தைய கால்ல அடிச்சு, skatingல first வரணும், அப்படின்னு கொடுமைப்படுத்தறா, தன்னுடைய ஆசைகளை எல்லாம் திணிச்சு ஸ்ரமப்படுத்துறா, நான் அப்படி பண்ணனும் சொல்லலை. ஒருத்தருக்கு natural talentம் இருந்து, அவளே self

motivatedஅ extraordinaryஅ ஒண்ணு பண்ணனும்னா, அப்போ “இல்ல இல்ல ஆத்துலேருந்த வெளியில போகக்கூடாது, நீ வந்து correct ஆக வேளைக்கு தூங்கணும், சாப்படணும் அவ்வளவு தான், அப்படின்னு பண்ணாம, அவா அவளுடைய talentல கொஞ்சம் stretch பண்ணி ஒரு achieve பண்ணுவான்னா, அதை encourage பண்ணனும் அப்படின்னு நான் இதுல இருந்து புரிஞ்சிண்டேன் இந்த காட்சில் இருந்து.

ஸ்வாமிகளும் அவருக்கு உடம்புல ச்ரமங்கள் இருந்தாலும், அவர் ராமாயணம் படிப்பார். “நீங்க எதுக்கு இவளோ ச்ரமபடுத்திக்கிறேள், இத்தனை வருஷம் படிச்சாச்சு, ராமாயணம் படிக்காததா நீங்க, பாகவதம் படிக்காததா போறும்” பா, “இல்லை என்னால முடிஞ்ச வரைக்கும் பண்றேன்”, அப்படின்னு அவர் பண்ணி,ரொம்ப அதிஆச்சர்யமா ஒரு நாளைக்கு மூணு சுந்தரகாண்ட ஆவர்த்தியெல்லாம் பண்ணிடுவார் சில சமயம். சில பேர் அதை encourage பண்ணுவா, ஆஹா ரொம்ப மஹான், நீங்க தான் பண்ண முடியும், அப்படின்னு சொல்ல தெரிஞ்சவா கொஞ்ச பேர். பாக்கி பேர் எல்லாம் “என்னமோ ரொம்ப உடம்பை வருத்திக்கிறார்”, அப்படின்னு சொல்லுவாளே தவிர, இந்த ராமன் சுக்ரீவனை புகழ்ந்த மாதிரி, “ரொம்ப சபாஷ் நீ உன் வீரத்தை நிரூபிச்ச” என்று சொல்ற மாதிரி சொல்ல மாட்டா. அந்த மாதிரி ஸ்வாமிகள் மஹாபெரியவாளால inspireஆகி கிருஹஸ்தரா இருந்தாலும் அபார கார்யங்கள் பண்ணிணதால் தான் அவர் மஹான் ஆனார்.

அந்த மாதிரி நமக்கு constraints இருக்கத் தான் செய்யும், இருந்தாலும் உலக விஷயங்கள்ல வீரமா ஒண்ணு பண்றத்துக்காகவோ, பகவானுக்காக ஒரு தியாகம் பண்றதுக்காகவோ முடிஞ்ச முயற்சி பண்ணிட்டே இருக்கணும், அப்படின்னு இந்த காட்சில் இருந்து தெரிஞ்சிண்டேன்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

<u>சீதாதேவி ராமபிரானிடம் இப்படி பேசலாமா?</u>

இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகம் அயோத்தியா காண்டத்துல முப்பதாவது சர்க்கத்துல மூணாவது ஸ்லோகம்.

किं त्वाऽमन्यत वैदेहः पिता मे मिथिलाधिपः ।

राम जामातरं प्राप्य स्त्रियं पुरुषविग्रहम् ।।

கிம் த்வாம் அன்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப: |

ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம் ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். இதுவும் one of the misinterpreted ஸ்லோகம்ஸ். அதனால இதை clarify பண்ணலாம் அப்படின்னு இதை எடுத்துண்டேன்.

சீதாதேவி ராமர் கிட்ட சொல்றா “எங்க அப்பா, மிதிலையின் அரசரான ஜனகர்” அப்படிங்கிறதுக்கு வைதேஹர் அப்படின்னு வறது, உங்களை மாப்பிள்ளையாக ஏத்துண்டார் ‘ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்’ “ஒரு ஸ்த்ரீ ஆண் வேஷம் போட்டுண்டு வந்தது தெரியாம ஏத்துண்டாரோ? அப்படின்னு சொல்றா. இந்த ஸ்லோகம், ஏன் அப்படி சொன்னா சீதை, அப்படிங்கிறதை சொல்றேன்.

அங்க கௌசல்யாதேவி அரண்மனைல அவா அம்மா , மனசால பிரிய முடியாம இருந்தாலும், தன் மகன் ராமன் தர்மத்தைத் தான் நடத்தறான், அவன் காட்டுக்கு போறேன் சொல்றான், என்ற உடனே, மனசு இல்லாம ஆனா வாயால வாழ்த்தி, ராமனை அனுப்பறா. ராமனும் லக்ஷ்மணனும் அங்க இருந்து, தன்னோட அரண்மனைக்கு வரா.

சீதாதேவியை ராமர் பார்க்கறார். சீதாதேவி கள்ளம் இல்லாத மனசு, அந்த முகத்தை பார்த்த உடனே, இவ்வளோ நேரம் ராமர் முகம் மாறலை. இப்ப சீதையை பார்த்த உடனே, முகத்துல ஒரு வாட்டம் வந்துடுத்து. இந்த பெண்ணை பிரிய போறேமே, இவள் தன்னுடைய பிரிவினால கஷ்டபட போறாளே, அப்படிங்கிறதை நெனைச்ச உடனே முகம் வாடறது. அப்போ சீதை கேட்கறா "ஹே ராம, நீங்க பாட்டாபிஷேகம் பண்ணிண்டு, பின்னாடி குடைபிடிக்க, பரிஜனங்களோட வரப் போறேள், ஆரத்தி எடுக்கலாம்ன்னு நான் காத்துண்டு இருந்தேன். என்னாச்சு ஏன், வருத்தத்தோட வறேள்? என்றும் இல்லாத அளவிற்கு உங்க முகத்தில் வாட்டம் இருக்கிறதே ஏன்?" அப்படின்னு கேட்டாளாம். ஸ்வாமிகள் சொல்லுவார் "நம்ம ஆத்து மாமா மாதிரி, தினம் சாயங்காலம் வந்த உடனே எரிஞ்சு விழுந்தார்ன்னா, இப்படி கேட்க மாட்டா. கல்யாணமாகி இந்த பன்னிரண்டு வருஷம் ஒரு நாள்கூட ராமரோட முகத்துல அவ வாட்டத்தை பார்த்தது இல்லை, சிடுசிடுப்பை பார்த்தது இல்லை. அதனால, "என்றும் இல்லாத அளவிற்கு உங்க முகத்தில் ஏன் வாட்டம்?"ன்னு அப்படின்னு கேட்கறா அவ, அப்படின்னு வேடிக்கையா சொல்லுவார்.

அப்போ ராமர் சொல்றார் "ஹே சீதே பெருமதிப்பிற்குரிய மஹாராஜா, என் தகப்பனார், என்னை பதினான்கு வருஷங்கள் காட்டுக்கு போக சொல்லி இருக்கார், பரதனுக்கு ராஜ்யத்தை கொடுக்கறார், அதனால நான் காட்டுக்கு போக போறேன், நீ இங்க இருந்துண்டு அப்பா அம்மாவுக்கு சிஷ்ரூஷை பண்ணிண்டு, ஜாக்கிரதையா இருந்துக்கோ" அப்படிங்கறார். அதாவது, "பரதன் கிட்ட எந்த obligationகும் போகாதே, (பணக்காரா கிட்ட obligationகு போனா அவா ரசிக்க மாட்டா), பரதன் முன்னாடி போய் என்னை புகழ்ந்து எதுவும் பேசாதே, (ராஜாக்கள் தன்னை புகழறதைத் தான் விரும்புவா, மத்தவாளை

புகழறதை விரும்பமாட்டா). பரதன் அப்படி கிடையாது, இருந்தாலும், general ruleஆக ராமர் சொல்றார். ஆனா பரதன் கிட்டயும் சத்ருகனன் கிட்டயும் ரொம்ப அன்பா இரு, உன்னுடைய தம்பி கிட்டயும், பிள்ளை கிட்டயும் எவ்வளோ அன்பா இருப்பியோ அந்த மாதிரி அன்பாயிருன்னு வரது. ஆனா அந்த வார்த்தைகளை கொஞ்சம் சேர்த்து பார்த்தா, பிராத்ருபுத்ர: என்றால் "தம்பியினுடைய பிள்ளை கிட்ட அவ்வளோ அன்பா இருப்பியோ அவ்வளோ அன்பாயிருன்னு" ஒரு அர்த்தம் சொல்லலாம். பெண்களுக்கு தன்னுடைய சஹோதர்களுடைய கொழந்தைள் மேல ஒரு தனியான ஒரு பாசம் இருக்கும், அத்தை ஆச்சே.

அந்த மாதிரி எல்லாம் அவர் சொல்றார். சீதாதேவி எல்லாம் கேட்டுக்கறா, அஞ்சு நிமிஷம் பேசாம கேட்டுட்டு, சீதை சொல்றா "என்ன இது, நீங்க சிரிக்கும்படியா ஏதோ சொல்றேளே, ராம நீ பதினாலு வருஷம் காட்டுக்கு போ, அப்படின்னு தசரத மஹாராஜா கூப்பிட்டு சொன்னார்ன்னா, சீதையும் கூடப் போறான்னு தானே அர்த்தம்" அப்படின்னு சீதை சொல்றா.

இதை வந்து கௌசல்யா தேவி ஏற்கனவே சொல்லிடறா, "ஹே ராம நீ காட்டுக்கு கிளம்பற, நாளைக்கு பொழுது விடிஞ்சா பதினஞ்சாவது வருஷமா இருக்க கூடாதா" அப்படின்னு சொல்றா. "எத்தனை நாள் நான் காத்துண்டு இருப்பேன்", அப்படின்னு சொல்லும் போது, "நாளைக்கு பொழுது விடிஞ்சா பதினஞ்சாவது வருஷமா இருக்கணும்ன்னு ஆசைப்படறேன் நான். நீயும், என் வதூ என்னுடைய மாட்டுப்பெண்ணும், தேர்ல திரும்பி அயோத்திக்குள்ள நுழையிற அந்த காட்சியை பார்க்கறதுக்காகத் தான் உயிரை பிடிச்சிண்டு இருப்பேன்" அப்படிங்கிறா. அப்படி கௌசலை, சீதாதேவி ராமரோட போவா, அப்படிங்கிறதை தெரிஞ்சிண்டு சொல்றா. அப்படி உத்தமான மாட்டுப்பெண், உத்தமமான மாமியார்.

சீதை சொல்றா, "எங்கேயாவது ராமர் போகணும்ன்னா, சீதையை கூப்பிட்டு நீயும் ராமரோடு போகணும்ன்னு எனக்கு instructionஆக சொல்ல போறாளா? நம்ம ரெண்டு பேரும் ஒண்ணுதானே, உங்களுக்கு சொன்னா எனக்கு சொன்ன மாதிரி தானே. பர்த்தாவுடைய பாக்கியம் தானே பத்தினிக்கும். நீங்க

என்னத்துக்கு என்னை வந்து “நீ இங்கயே இரு”ன்னு சொல்றேள். அப்படி நான் தனியா இருப்பேனா, எம பட்டணத்துக்கு சத்யவான் போன போது, பின்னாடி போன சாவித்ரி மாதிரி, நான் எங்கேயானாலும் உங்கள் பின்னாலயே வருவேன்” அப்படின்னு சொல்றா.

அன்னிக்கு ஜனக மகாராஜா, சீதாதேவி கையை எடுத்து, ராமபிரான் கையில் வெச்சு ‘இயம் சீதா மம சுதா, ஸஹ தர்மசரீ தவ | ப்ரதீச்சசைநாம் பத்ரந்தே பாணீன் க்ரிண்ணீஷ்வ பாணினா | பதிவ்ரதா மஹாபாகா சாயேவா அனுகதா ஸதா || இவள் நிழலை போல எங்கும் உன்னை பின்தொடர்வாள், பதிவ்ரதைனு சொன்னாளே, அந்த வார்த்தையை இப்போ சொல்றா சீதை. “உங்கள தனியா காட்டுக்கு போன்னு சொல்லுவாளா, சீதையோட போறதுனு தான் அர்த்தம் அது” அப்படின்னு சொல்லிடறா அவ, topicயே close பண்ணிடறா.

அப்போ ராமர் “இல்ல சீதா, நீ என்ன காடுன்னா என்ன விளையாட்டுன்னு நெனைச்சிண்டு இருக்கியா, காட்டுக்கு போனா சிங்கம், புலி எல்லாம் இருக்கும், ராத்திரில தூங்கிண்டு இருக்கும் போது பயங்கரமான கர்ஜனை பண்ணும், நடுங்கி போயிடும் உடம்பெல்லாம், வேளா வேளைக்கு சாப்பாடு கிடைக்காது, தீடிர் திடீர்னு பெரிய பெரிய பூச்சியெல்லாம் மேல விழும், ஒரு பாதைன்னு ஒண்ணுமே இருக்காது, நாம்ம தான் பாதை பண்ணிண்டு போகணும், ‘துக்கமேவ சதா வனம்’ வனம்ங்கறது ரொம்ப துக்கமான இடம், அது நீ நெனைக்கற மாதிரி இல்ல, ரொம்ப ரொம்ப ஆபத்து, அதனால நீ அங்க வந்து சிரமப் படாதே”ங்கறார்.

இது என்ன அழகு பாருங்கோ, ராமருக்கு மனைவி பக்கத்துல இருந்தா சௌக்யம்தான், அதுவும் இந்த மாதிரி ஒரு அன்பான மனைவி, ஒருமித்த மனசு இருக்கக்கூடிய பெண் பக்கத்துல இருக்கும் போது கஷ்டங்களே தெரியாது. அதனால, ராமருக்கு சீதைக்கூட வந்த நன்னா தான் இருக்கும். இருந்தாலும் அவ கஷ்டபட கூடாது, அப்படின்னு அந்த அன்புனால ” நீ வராதேம்மா, நீ இங்க இரு, அயோத்தில இரு, உனக்கு சௌகர்யமாவும் இருக்கும், ஆபத்து இல்லாமலும் இருக்கும்”ன்னு சொல்றார். சீதை வந்து “என் கணவனோடு

இருக்கறதுதான் எனக்கு சொர்கம்" அப்படிங்கறா. அது நரகமா இருந்தாலும் அது ராமர் பக்கத்துல இருந்தா அது எனக்கு சொர்கம். அது எனக்கு சொர்கமாக இருந்தாலும், ராமர் பக்கத்துல இல்லனா அது நரகம்" அப்டின்னு சொல்றா. "அதனால நான் உங்களோடதான் வருவேன்" அப்டின்னு சொல்றா.

இந்த இடத்துல ஸ்வாமிகள் சொல்வார், கும்பகோணத்துல மஹாமகம் வரது அப்படின்னா, அங்க போனா coffee சரியா கிடைக்குமா, அப்படின்னு கேட்டான்னா, அவர் கிளம்பமாட்டார். அங்க போனா ஸ்னானம் கிடைக்குமான்னு கேட்டாத் தான் கிளம்புவா. "அந்த மாதிரி நான் காட்டுக்கு வறேன் சொன்ன போது, காட்டில சௌரியங்கள் எல்லாம் இருக்குமான்னா நான் கேட்டேன், ராமர் இருக்காரான்னு தானே கேட்டேன், ராமர் எங்க இருக்காரோ அங்க நான் இருப்பேன், அதனால நான் உங்களோட வரேன், என்னை விட்டு போகாதீங்கோ" அப்படின்னு சீதாதேவி சொல்றா.

ஆனா ராமர் "இல்லை, நீ வந்து வனவாசத்தோட கஷ்டத்தை புரியாம பேசற" ஆனா சில சமயம் ராமர் அந்த வனவாசத்தை வர்ணிக்கும் போது, "அங்க மூணு வேளை குளிக்கணும், ரிஷிகள்லாம் இருப்பா, அவாள்லாம் வந்தா, அவாளுக்கு உபசாரம் பண்ணனும், அதிதிகள்லாம் வந்தா, சாப்பாடு போடணும்" அப்படின்னு சொல்றது எல்லாம் பார்த்தா, ரொம்ப ஆசையா இருக்கு, நாமே போகலாம்னு தோணறது. அந்த மாதிரி அவர் பயங்கரமா இருக்கும்ன்னு சொல்லும்போது, கூடவே இதை சொல்றார், ரொம்ப ரம்யமாவும் இருக்கும்ங்கிறதை சொல்லாம சொல்றார். "அதனால நான் உங்களோடு இருக்கும் போது, இந்திரன் வந்தா கூட என்னை ஒண்ணும் பண்ண முடியாது, உங்களுடைய ரக்ஷணைல இருக்கும் போது எனக்கு பயமே கிடையாது. ஒரு குறவன் பெண்டாட்டிய இங்க விட்டுட்டு அங்க போறா மாதிரியெல்லாம் பண்ணாதீங்கோ, க்ஷத்ரிய வீரர் நீங்கள், என்னை அழைச்சிண்டு போங்கோ" அப்படின்னு சொல்றா.

அப்ப ராமர் இன்னும் hesitate பண்ணும் போது இந்த வார்த்தைகளைச் சொல்றா. "உங்களை ஒரு பெண், ஆண் வேஷம் போட்டுண்டு வந்திருக்கானு தெரியாம எங்கப்பா பெண்ணைக் குடுத்து மாப்பிள்ளை ஆக்கிண்டுட்டாறா?"

அப்படின்னு கேட்கறா. இது ஊடலில் சொல்ற வார்த்தை. அவ "என்னை shopping கூண்டிண்டு போங்கோ, cinemaக்கு கூட்டிண்டு போங்கோன்னு பிடிவாதம் பிடிக்கலை. காட்டுக்கு கூட்டிண்டு போங்கோன்னு பிடிவாதம் பிடிக்கறா. அவா இந்த மாதிரி செல்லமா சொல்றா. அவ்வளவு அன்பு, உரிமை இருக்கு, அவ்வளவு intimacy ரெண்டு பேருக்குள்ள. அப்படி ஒரு வார்த்தை சொல்றா. இதை என்ன பண்ணுவா, "ராமரை நீ பெண்ணா னு சீதை கேட்டுட்டா. அதுனால தான் ராமரை பிரிஞ்சு கஷ்டபப்பட்டா" அப்படின்னு கஷ்டப்பட்டு கருத்து சொல்லிண்டு இருப்பா. அது தேவையே இல்லை. ஒரு அன்பினால் சொன்ன வார்த்தை அது.

அவ்வளவு தூரம் அவ சொன்னதுனால

यस्त्वया सह स स्वर्गो निरयो यस्त्वया विना ।

इति जानन्परां प्रीतिं गच्छ राम मया सह ।।

யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க: நிரயோ யஸ்த்வயா விநா |

இதி ஜானன் பராம் ப்ரீதிம் கச்ச ராம மயா ஸஹ ||

"யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க: நிரயோ யஸ்த்வயா விநா" – உன்னோடு இருப்பது, எங்கேயானாலும் எனக்கு அது ஸ்வர்கம். உன்னை பிரிந்து இருந்தால் அது எனக்கு நரகம். "இதி ஜானன் பராம் ப்ரீதிம்" – இந்த என்னுடைய உயர்ந்த அன்பை புரிஞ்சுண்டு "கச்ச ராம மயா ஸஹ" – என்னைக் கூட்டிக் கொண்டு காட்டுக்கு போ" என்று சொல்கிறாள்.

त्युमत्सेनसुतं वीरं सत्यवन्तमनुव्रताम् |

सावित्रीमिव मां विद्धि त्वमात्मवशवर्तिनी ||

த்யுமத்சேனசஸுதம் வீரம் சந்த்யவந்தம் அனுவ்ரதாம் |

சாவித்ரீமிவ மாம் வித்தி த்வம் ஆத்மவஷவர்த்தினி ||

"நான் உனக்கு வசப்பட்டவள். உன் அடிமை. சத்யவான் பின்னாடி போன சாவித்ரி மாதிரி நான். இவ்வளவு சொன்ன பின்னும் என்னை விட்டுட்டு போனால் நான் நெருப்பில் விழுந்து விடுவேன்" அப்படின்னு சொல்றா.

சாவித்திரி மாதிரி, கணவனைப் பிரிந்தால் நெருப்பில் விழறது, என்பதை சொல்லும் போது சதின்னு ஒண்ணு இருந்தது. உடன்கட்டை ஏறுவதுன்னு. யாரும் force பண்ணலை. குந்தி தேவியோ கௌசல்யா தேவியோ உடன்கட்டை ஏரினதாக புராணங்களில் சொல்லவில்லை. யாரோ கோடியில ஒருத்தர் ஞானி என்பது போல பெண்களில் கணவனை பிரிஞ்சு இருக்க முடியாமல் அப்படி பண்றா. அப்படி ஏறும் போது அவாளுக்கு கணவனோடு கூடி இருக்கும் போது ஏற்படும் அளவுக்கு சுகம் ஏற்படும். நெருப்பில அவா துணி எரியாது. அதை வெச்சு பூஜை பண்ணுவா னு அப்படி எல்லாம் அந்த காலத்தில் இருந்திருக்கு. ஒரு high ideal.

அப்போ ராமர் “சரி உன் மனசை புரிஞ்சுக்கத் தான் கேட்டேன். நீ இவ்வளவு தீர்மானமாக இருப்பதால் சர், என்னோடு கிளம்பு” என்கிறார். அப்பா ராமர் சொல்றார் “அம்மா, அப்பா, குரு, இவா மூணு பேரும் கண்கண்ட தெய்வம். கண் முன்னாடி இருக்கும் தெய்வம். இவாளை திருப்தி பண்ணினா எல்லாமே கிடைக்கும். செல்வங்களோ, பசுக்களோ, பிள்ளைகளோ, படிப்போ எல்லாமே கிடைக்கும். அவாளை judge ஏ பண்ணக் கூடாது. அவா பேச்சை கேட்கணும். அவாளை திருப்தி படுத்தணும். இது என் கொள்கை. அந்த எண்ணத்தோட நான் கிளம்பறேன். நீயும் கிளம்பு” என்கிறார்.

இது என்னத்துக்கு சொல்றார் னா “நான் அப்பா பேச்சைக் கேட்டு காட்டுக்கு கிளம்பறேன். இதில் கஷ்டங்கள் இருக்கும் னு தெரிஞ்சு தான் கிளம்பறேன். அதே மாதிரி புரிஞ்சுண்டு நீயும் கிளம்பு. அங்க வந்துட்டு என்ன இவ்வளவு கஷ்டமாக இருக்கே னு சொல்ல கூடாது. என்ன தசரதர் இப்படி பண்ணிட்டரே னு சொல்லக் கூடாது” என்று ஒரு warning. ஆசையாக தர்மத்தை நடத்தினா தான் பூர்ண பலன் கிடைக்கும்.

அப்பறம் ராமர் சொல்றார், “உன்னுடைய நகைகளையும், உன்னுடைய பொம்மைகளையும், இன்னும் மத்த செல்வங்களை எல்லாம் தானம் பண்ணிட்டு கிளம்பு” அப்படிங்கறார். அந்த மாதிரி, சீதை குழந்தை தானே! ஆறு வயசுல கல்யாணம் ஆகி வந்து இப்போ பதினெட்டு வயசு ஆகிறது. குழந்தையாக வந்தவ. உன்னுடைய தோழிகளை எல்லாம் விட்டு பிரியணும். எல்லார் கிட்டேயும் சொல்லிண்டு கிளம்பு” னு சொன்ன உடனே சீதை ரொம்ப சந்தோஷம் ஆகி விடுகிறாள். சந்தோஷமாக ராமரோடு கிளம்புகிறாள்.

தினமும் ஜானகீ காந்த ஸ்மரணம் ஜய ஜய ராம ராம னு சொல்றோமே அது மாதிரி, சீதாபதி ராமச்சந்த்ர கீ ஜய் னு பஜனைகளில் சொல்லுவா. அப்போ இந்த சீதாதேவியோட பக்தியையும் நினைக்கணும்.

ஜானகி காந்த ஸ்மரணம்… ஜய ஜய ராம ராம…

இலங்கையில் பொருதாரன்றே மறைகளுக்கு இறுதியாவார்

இன்னிக்கு வால்மீகி ராமாயண ஸ்லோகம், யுத்தகாண்டத்துல நூற்றி இருபதாவது ஸர்க்கத்துல ஒரு ஸ்லோகம்.

अमोघं दर्शनं राम अ च मोघस्तवस्तवः | अमोघास्ते भविष्यन्ति भक्तिमन्तस्च ये नरा ||

அமோகம் தர்சனம் ராம ந ச மோகஸ்தவஸ்தவஹ |

அமோகாஸ்தே பவிஷ்யந்தி பக்திமந்தஸ்ச யே நராஹா ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். இதுல 'அமோகம் ' அப்படின்னு ஒரு வார்த்தை வறது. சம்ஸ்க்ருதத்துல , 'ஹ'ன்னு ஒண்ணு இருக்கு, 'மோஹம்'ங்கறது எல்லாருக்கும் தெரிஞ்ச வார்த்தை, 'மோஹம்'னா englishல greedன்னு வெச்சிண்டு இருக்கா. சரியான அர்த்தம் வந்து, 'எது துக்கத்தை கொடுக்குமோ

அதுல சுகம் னு போய் மாட்டிக்கறது', அதுக்கு 'மோஹம்'ன்னு சம்ஸ்க்ருதத்துல வார்த்தை. அதாவது, ஞாயமா கிடைக்கிற சந்தோஷங்கள் ஒண்ணும் துக்கத்தை கொடுக்காது, அதுமேல பேராசை பட்டுண்டு போய் சந்தோஷத்தையோ பணத்தையோ அனுபவிக்கணும்ன்னு ஆசைப்பட்டா அது கஷ்டத்துல முடியும். அதனால அந்த greedங்கறது ஒரு close meaningதான். அது வந்து மோஹம் ஷ ச ஸ ஹ, அந்த 'ஹ' வறது. சம்ஸ்க்ருதத்துல இன்னொரு வார்த்தை இருக்கு मोघम् 'மோகம்' அப்படின்னு, 'மோகம்' நாலாவது 'க', அதுக்கு என்ன அர்த்தம்னா, wasted அப்படிங்கற மாதிரி அர்த்தம். अमोघम् 'அமோகம்' அப்படின்னா அது வீணாபோகாது அப்படின்னு அர்த்தம். இந்த ஸ்லோகத்துல 'அமோகம் தர்சனம் ராம' உன்னை தர்சனம் செய்வது, பலனை கொடுக்கும், வீணாகாது 'ந ச மோக ஸ்தவஸ் ஸ்தவஹ' ஹே ராம உன்னுடைய ஸ்தோத்தரம் ஆனது வீண் போகாது, ராமனை துதித்தால் க்ஷேமம் உண்டாகும். அது பலன் கொடுக்காமல் போகாது. 'அமோகாஸ்தே பாவிஷ்யந்தி பக்திமந்தஸ்ச யே நராஹா' யாரு உன்கிட்ட பக்தி பண்ணுகிறாளோ அவா நன்மையை அடைவார்கள், க்ஷேமத்தை அடைவார்கள். அவாளுக்கு குறை இருக்காது. அப்படின்னு இந்த ஸ்லோகம். பிரம்ம ஸ்துதி அப்படின்னு ஒரு யுத்தகாண்டத்துக்கு உள்ளேயே ஒரு ஸர்கம் இருக்கு.

தேவர்கள் எல்லாம் வந்து ராமர் கிட்ட "ஹே ராம நீ ஸாக்ஷத் பரம்பொருள்" அப்படின்னு சொல்றா, ராமர் आत्मानं मानुषं मन्ये रामं दशरतात्मजम् "ஆத்மானம் மனுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்" நான் என்னை தசரத குமார ஆனா ராமன் ஆகத்தான் அறிந்திருக்கிறேன் सोऽहं यस्य यतश्चाहं भगवान्स्तद्ब्रवीतु मे "யோஹம் யஸ்ய யதாஸ்சாஹம் பகவான் தத் ப்ரவீதுமே" நான் யார் என்பதை நீங்கள் எனக்கு சொல்லுங்கோ" என்று கேட்கும் போது, பிரம்மா சொல்றார் "நீ அழிவில்லாத பரம்பொருள், நீ இந்த உலகத்தையே படைத்து, காத்து, அழிக்கும் பகவான்" அப்படின்னு அந்த ஒரு இருவது ஸ்லோகங்கள், பிரம்ம ஸ்துதி அப்படின்னு சொல்லுவா. அதுல கடைசில இந்த ஒரு ஸ்லோகம் வறது

அமோகம் தர்சனம் ராம ந ச மோகஸ்தவஸ்தவஹ |

அமோகாஸ்தே பவிஷ்யந்தி பக்திமந்தஸ்ச யே நராஹா ||

அப்படின்னு ராமபக்தர்களுக்கு எல்லாம் ரொம்ப இஷ்டமான ஒரு ஸ்லோகம். ஸ்வாமிகள் மாதிரியான ராம பக்தர்கள் இதை நம்பிதான் வாழ்க்கையே நடத்தினா. அப்படி ஒரு அருமையான ஒரு ஸ்லோகம்.

இன்னைக்கு தமிழ்ப் புத்தாண்டா இருக்கு, ஹேமலம்ப வருஷம் ஆரம்பிச்சு இருக்கு. ஸ்வாமிகள் இந்த புத்தாண்டு அன்னிக்கு, மூகபஞ்ச சதில ஒரு ஸ்லோகம் இருக்கு, அதை படிப்பார். இந்த பஞ்சாங்க படனம் அப்படின்னு பஞ்சாங்கத்துல இருக்கிற, யார், எந்தெந்த கிரஹங்கள் இந்த வருஷத்துக்கு ராஜா, மந்த்ரி, எந்தெந்த கிரஹங்கள் எங்கெங்கே ஸஞ்சாரம் பண்ண போறது, குறிச்சு கொஞ்சம் பலன்கள் கொடுத்து இருப்பா. அது போக ஸ்வாமிகள் இந்த ஸ்லோகத்தை சொல்வார். மூகபஞ்ச சதி ஸ்லோகம்

दधानो भास्वत्तामममृतनिलयो लोहितवपुः विनम्राणां सौम्यो गुरुरपि कवित्वं च कलयन् ।

गतौ मन्दो गङ्गाधरमहिषि कामाक्षि भजतां तमःकेतुर्मातस्तव चरणपद्मो विजयते ॥

‘தாதாநோ பாஸ்வத்வாம் அம்ருதநிலயோ லோகித வபுஹு

வினம்ராணாம் சௌம்யஹ குருரபி கவித்வம் ச கலயன் |

கதோ மந்தஹ கங்காதரமஹிஷி காமாக்ஷி பஜதாம்

தமகேதுர் மாத: தவசரண பத்மௌ விஜயதே ||

அப்படின்னு ஒரு ஸ்லோகம். இந்த ஸ்லோகத்துல நவகிரஹங்களுடைய பெயரும் வறது, அம்பாளுடைய சரணத்துக்கும் பொருத்தும்படியாவும் இருக்கு. ரொம்ப அழகான ஸ்லோகம். உன்னுடைய ‘தவ சரண பத்ம:’ உன்னுடைய பாதத் தாமரைகள், சூரியனை போல ஜொலிக்கறது, ‘தாதாநோ பாஸ்வத்வாம் ‘அம்ருதநிலயஹ’ பாதங்கள்ல அமிர்தம் இருக்கு, அப்படின்னு ஒரு ஐதீகம், அதனால ‘அம்ருதநிலயாஹ’ ‘லோஹித வபுஹு’ செக்கச்செவேல்னு இருக்கு, ‘வினம்ராணாம் சௌம்யஹ’ நமஸ்காரம் பண்றவாள் கிட்ட இந்த பாதம் ரொம்ப சௌம்யமா இருக்கு, அன்பா இருக்கு. ‘குருரபி’ ஞானத்தை கொடுக்கறதுனால உன்னுடைய பாதங்கள் குரு, ‘கவித்வம் ச கலயன்’ உன்னை நமஸ்காரம் பண்றவாளுக்கு நல்ல வாக்கு கொடுக்கற நீ, அதனால கவித்வம், ‘கவித்வம் ச கலயன்’ , ‘கதோ மந்தஹ’ பாதங்கள் மெதுவா நடக்கறது, ‘கங்காதரமஹிஷி

காமாக்ஷி' கங்கையை தரித்து கொண்டு இருக்கும் பரமேஷ்வரனுடைய பட்ட மஹிஷியான ஹே காமாக்ஷி, 'தமஹ்கேது:' அக்ஞான இருளுக்கு, எதிரியா இருக்கு உன்னுடைய பாதம், 'தவசரண பத்மௌ விஜயதே' உன்னுடைய பாத தாமரைகள் சிறந்து விளங்கட்டும், அப்படின்னு அர்த்தம்.

இதுல இந்த, சூரியனை போல ஒளிவிடறது எங்கிறது சூரியனுக்கு, 'அம்ருதநிலய' எங்கிறது' சந்திரனுக்கு, 'லோஹித வபுஹு' எங்கிறது செவ்வாய், 'குரு' வியாழ பகவான், 'கவி'ன்னா சுக்ரன், 'ஷனைச்சரஹ'ன்னா சனிபகவான், 'தமஹ்கேதுஹு', தமஸ் னா ராகு, கேதுனா கேது, நவகிரஹங்களுடைய சம்பந்தமும் ஏற்படுத்தி அழகான ஒரு ஸ்லோகம். 'அப்படி காமாக்ஷி பாதத்துல நமஸ்காரம் பண்றவாளுக்கு நவ க்ரஹங்களும் அனுக்ரஹம் பண்ணும்' அப்படின்னு சொல்வார் ஸ்வாமிகள்.

அந்த மாதிரி புது வருஷம் பிறந்து இருப்பதால், ராமருடைய தரிசனம், ராமருடைய கதை, ராமர் கிட்ட பண்ற பக்தி வீண் போகாது, என்பதை மனசுல வெச்சுண்டு அடிக்கடி ராம கதை கேட்போம். ராமரை தரிசனம் பண்ணுவோம். ராமர் கிட்ட பக்தி பண்ணுவோம். ராமருடைய ரூபத்தை த்யானம் பண்ணிண்டு அவருடைய கதையை கேட்டுண்டே இருந்தால் நமக்கும் அவரிடத்தில் பக்தி ஏற்படும்.

நல்ல குரு கிட்ட ராம கதை கேட்கணும். மாரீசன் கிட்ட ராவணன் வந்து சொல்றான், "யாரோ ராமன் ஒருத்தன் ஜனஸ்தானத்துக்கு வந்திருக்கான். நம்முடைய கர தூஷணாதிகளை எல்லாம் வதம் பண்ணிட்டான். சூர்ப்பனகையை மூக்கை அறுத்து இருக்கான். ரொம்ப கேட்டவன் னு தெரியறது. அவனுக்கு புலன்களை அடக்க தெரியலை. ரொம்ப கோபம் வரது. ஒரு தப்பு பண்ணாத கர தூஷணர்களை வதம் பண்ணிட்டான்" இதுராவணனுடைய ராம கதை. "அதுனால அவன் எனக்கு எதிரியாகி விட்டான். அவன் மனைவியை நான் அபகரிக்க போறேன். அதுனால நீ மாயமானாக போ" என்று சொல்கிறான். அப்போ மாரீசன் சொல்றான், "அவன் முன்னமே ராமர் கிட்ட ரெண்டு வாட்டி அடி வாங்கி இருக்கான். அதுனால அவனுக்கு ர அப்படின்னு சொன்னாலே பயம். ரதம், ரத்னம் அப்படின்னாலே பயந்து ஓடறான். அப்படி ராமர் கிட்ட பயம். அவன் சொல்றான். "நீ சொல்றது ராம கதை கிடையாது. 'தர்மோ விக்ரஹவான் ராம: ஸாது: சத்யபராக்ரம:' ராமர்

தர்மமே வடிவானவர். பொய்க்காத பராக்ரமம் கொண்டவர். அவர் கிட்ட நீ வம்புக்கு போகாதே." அப்படின்னு மாரீசனே சொல்றான். அந்த இடத்துல பெரியவாள் எல்லாம் சொல்வாளாம் மாரீசன் ராவணன் கிட்ட "நீ எதோ போக்கிரி கிட்ட ராமாயணம் கேட்டு இருக்க" என்கிறான். அப்படி ராமாயணத்தை திரிச்சு சொல்லாமல் அங்கே இருக்கற கதையை உள்ளது உள்ளபடி பக்தியோடு சொல்றவா கிட்ட கேட்கணும்.

ராமாயண புஸ்தகத்தை முழுக்க படிக்க வேண்டும் என்று ஸ்வாமிகள் சொல்வார். இந்த புது வருஷத்தில் நாம் எல்லோரும் ராமாயணம் படிப்போம். ராமாயணம் கேட்போம். அதுனால நன்மையே உண்டாகும். சுக்ரீவனுக்கு பதவி கிடைச்சது. அது மாதிரி இந்த காலத்துல job security பத்தி எல்லாரும் கவலை படறா. நல்ல வேலை, பதவி, கிடைக்கும். விபீஷணனுக்கு இலங்கை கிடைச்சது. அது மாதிரி செல்வம் கிடைக்கும். தசரத மஹாராஜாவுக்கு குழந்தை இல்லையே என்ற குறை இருந்தது. அவருக்கு குழந்தையாக பகவானே வந்து அவதாரம் செய்தார். இப்படி எல்லாருடைய குறைகளையும் ராமர் போக்கி இருக்கார். சபரி மாதிரி "வேறே ஒண்ணும் வேண்டாம். எனக்கு உன் தர்சனம் போறும்" அப்படின்னு பக்தி பண்ணினா ராம தர்சனம் கிடைக்கும்.

பரதன் போல ஒரு அபவாதம் வந்துடுத்து. பண்ணாத தப்புக்கு எனக்கு கெட்ட பேர் வந்துடுத்து அப்படின்னு வருத்த பட்டா ராம பாதுகையை நமஸ்காரம் பண்ணினா அந்த அபவாதம் போய்விடும். பரதனுக்கும் கைகேயிக்கும் தசரதர் "நீ என் பிள்ளையே கிடையாது. கைகேயி என் மனைவியே கிடையாது' னு சாபம் கொடுத்து விடுகிறார். ஆனாள் இந்த ஸ்லோகம் வர சர்கத்துக்கு ரெண்டு ஸர்கம் தாண்டி பரமேஸ்வரன், மேல் உலகத்திலிருந்து தசரதரை அழைச்சுண்டு வரார். அப்ப ராமர் அவரை நமஸ்காரம் பண்றார். தசரதர் வாழ்த்தறார். அப்ப ராமர் "பரதனை நீங்கள் என் பிள்ளை இல்லைன்னு சொன்னேள். கைகேயி என் மனைவி இல்லைன்னு சொன்னேள். அதை திரும்ப வாங்கிக்க வேண்டும்" அப்படின்னு சொல்றார். தசரதரும் "அப்படியே ஆகட்டும்" என்கிறார். அப்படி ஜாதகத்தில் பித்ருதோஷம் ஏதாவது இருந்தாலும் ராமரை வேண்டினா, ராமரே பித்ருக்கள் கிட்ட recommend பண்ணி அந்த தோஷத்தை போக்குவார். அப்படி ராம கதை கேட்போம். ராமர் கிட்ட பக்தி பண்ணுவதை இந்த புது வருஷ சங்கல்பமாக வெச்சுப்போம்.

ஜானகி காந்த ஸ்மரணம்... ஜய ஜய ராம ராம...

वैदेही सहितं सुरद्रुमतले
हैमे महामंडपे

मध्ये पुष्पकमासने मणिमये
वीरासने संस्थितम् |

अग्रे वाचयति प्रभंजनसुते
तत्वं मुनिभ्य:परं

व्याख्यातं भरतादिभि: परिवृतं
रामं भजे श्यामलम् ||



श्री राम चन्द्राश्रित सदगुरूणां
पादारविन्दं भजतां नराणाम् |
आरोग्यं ऐश्वर्यं अनन्त कीर्ति:
अन्ते च विष्णो: पदमस्ति सत्यम् |